Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU


விஷானி நகை மாளிகை




இல. 187, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
0212219510 (C/1675)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 13 புதன்கிழமை (29.08.2012) பக்கங்கள் 20 ஓசை – 332

திண்டாடும் அமெரிக்கா



05



உருகும் இரும்புத் தலைவர்

11

யாழில் சுணைக்கேடு



13



தீர்வினைப் பெற்றுத் தருவோம்

14

சிறுவர்கள் மீது சித்திரவதை



18

## ஜனாதிபதி தலைமையில் 50 பேர் ஈரானுக்கு

(கொழும்பு)

ஈரானில் ஆகஸ்ட் 30, 31 ஆம் திகதி களில நடைபெற வுள்ள, அணிசேரா அமைப்பின் 16 ஆவது உச்சிமாநாட் டுக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஈரான் செல்லவுள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் 50 பேர் கொண்ட குழுவொன்று ஈரான் செல்ல வுள்ளது. அமைச் சர்கள், வர்த்தக பிரமு கர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோ ரும் இக்குழுவில் இடம்பெறவுள்ளதாக ஈரானின் உத்தியோகபூர்வச் செய்திச் சேவைக்கு, கொழும்பிலுள்ள ஈரானிய தூதரகத்தின் பிரதித் தூதுவர் கியோ மார்ஸ் காஸிமி தெரிவித்துள்ளார்.

120 நாடுகள் அங்கம் வகிக்கும் அணி சேரா நாடுகளின் உச்சிமாநாட்டின் போது இலங்கை, ஈரானிய தலைவர்களுக் கிடையிலான பிரத்தியேகமான இருத ரப்பு பேச்சுவார்த்தையும் நடைபெறவுள் ளதாக காஸிமி கூறினார்.

# பட்டதாரிப் பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனம் விரைவில்

(கொழும்பு)

பட்டதாரிப் பயிலுநர்களாக உள்வாங்கப்பட்ட அனைவ ருக்கும் மிக விரைவில் அவர்களுக்குப் பொருத்தமான திணைக்களங்களில் நிரந்தர நியமனம் வழங்கப்பட விருப்பதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் எ.ஜே. செனவிரட்ன தெரிவித்தார்.

இதற்கான அனைத்து முன் ஆயத்த நடவடிக்கைக ளையும் தமது அமைச்சு ஏற்கனவே ஆரம்பித்து விட்ட தாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பயிற்சிக்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிக ளுக்கு நிரந்தர நியமனங்கள், அரசியல் பரிந்துரைகளின் அடிப் படையிலேயே, மேற்கொள்ளப்படுமென ஐக்கிய தேசியக் கட்சியினர், போலிப் பிரசாரங்களை மேற்கொள் கின்றனர் எனவும், நாம் எக்காரணம் கொண்டும் அரசியல் பேதங்களைக் கருதி நியமனங்களை வழங்கமாட்டோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பட்டதாரிகள் புத்திசாலிகள் என்ற வகையிலேயே, நாம் கருது கின்றோம். இவர்களுக்கு வழங்க வேண்டிய இடத்தினை வழங்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். அரசியல் பேதங்களின்றி, நிரந்தர நியமனம் வழங்கப்படும் என இரத்தினபுரி மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பட்டதாரிகள் சம்மேளனத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## மாம்பழ உற்பத்தி ஊக்குவிப்பு; ஒரு கோடி 70 இலட்சம் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சுமார் 72 ஆயிரத்திற்கும் அதிகமான மாமரங் கள் இருப்பதாகப் புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றபோதும் மாம ரங்களின் உற்பத்தித்திறன் அவற்றில் பெறக்கூடிய பழங்களைவிட நான்கு முதல் ஐந்து மடங்குவரை குறைவாகக் காணப்படுவதாக விவசாயத் திணைக்களம் கூறியுள்ளது.

எமது மக்கள் மாமரங்களின் உற்பத்தித்திறனை அறியாமல் அவற்றை சரியாகப் பராமரிக்காது 19 ஆம் பக்கம் பார்க்க

## சுன்னாகத்தில் கோர விபத்து; குடும்பஸ்தர் ஸ்தலத்தில் பலி

(சுன்னாகம்)


கே.கே.எஸ். வீதி, சுன்னாகத் தில் நேற்றுக்காலை இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

நேற்றுக்காலை பத்து மணி யளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மயிலணி வடக்கு சுன்னாகத்தைச் சேர்ந்த சிவலிங் கம் சங்கர் (வயது-50) என்ப வரே பலியானவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

தெல்லிப்பளையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பேரு ந்து சுன்னாகம் பெரிய மதவடிப் பகுதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவர் மீது மோதி யுள்ளது. இதன்போது குறித்த நபர் பேருந்தின் சில்லுக்குள் அகப் பட்டு ஸ்தலத்திலேயே உயிரிழந்தார். சடலம் தெல்லிப்பளை வைத் தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. குறித்த பேருந்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. பேருந்தின் சாரதி தப்பியோடிவிட்டார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சாரதி தப்பியோட்டம்



## கிளி.உப மின் நிலைய கட்டுமாணம் பூர்த்தி

### ஜனாதிபதி திறந்து வைப்பார்

(கிளிநொச்சி)

ஜப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் கிளிநொச்சி பகு தியில் நிர்மாணிக்கப்பட்ட உப மின் நிலையம் அடுத்து மாதம் நடுப்பகுதியில் ஜனாதிபதி மகி ந்த ராஜபக்ச வினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

நேற்று முன்தினம் கிளிநொச் சிக்கு விஜயம் செய்த மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க இதனைத் தெரிவித் தார்.

கடந்த 2012 ஆண்டு மே மாதம் ஆரம்பிக்கப்பட்ட கட்டு மாணப் பணிகள் தற்போது நிறைவுபெற்று மின் இணைப் பும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 3200 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த உப 19 ஆம் பக்கம் பார்க்க

## சடலம் மீட்பு

(வேலணை)

தூக்கில் தொங்கிய நிலை யில் மூன்று பிள்ளைகளின் தாயொருவர் வேலணை நான் காம் வட்டாரத்தில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி விலாசத்தில் வசிக் கும் துரைராசா கமலாதேவி (வயது - 62) என்பவரே இவ் வாறு சடலமாக மீட்கப்பட்டவ ராவார். மகளுடன் வசித்து வந்த 19 ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சர் சம்பிக்க நெடுந்தீவுக்கு விஜயம்

(நெடுந்தீவு)

மின்சக்தி எரிபொருள் அமை ச்சர் பாட்டலி சம்பிக ரணவக்க, இலங்கைக்கான தென் கொரிய நாட்டின் உயர் ஸ்தானிகர், இலங்கை மின்சார சபையின் வடமாகாண பிரதிப் பொதுமுகா மையாளர் டி.கே.பி.யூ குண திலக ஆகியோர் நேற்றுக் காலை 10.30 மணியளவில் நெடுந்தீவுக் கான விஜயம் ஒன்றை மேற் கொண்டனர் இவர்களை மாவிலி இறங்கு துறையில் மாலைகள் மற்றும் திலகம் அணிவித்து வரவேற்கப்பட்டனர். இந்நிகழ் வில் நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளர் தானியேல் றெக்சி யன் மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலாளர் ஆழ்வாப் பிள்ளை சிறி மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், வட பிராந்திய கடற்படைக் கட்டளை அதிகாரி ரியல் அட்மிரல் ரவீந்திர சி விஜயகுணரத்தின மற்றும் நெடு ந்தீவு கடற்படை கட்டளை அதி காரி எக்கநாயக்க, நெடுந்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி எக்க நாயக்க மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டது டன், கடற்படையினரின் அணி வகுப்பும் இடம்பெற்றது.

19 ஆம் பக்கம் பார்க்க

### பரந்தனில் படைவீரர் காயம்


நேற்றுப் பரந்தனில் உள்ள படை முகாமில் சமையல் எரி வாவு சிலிண்டர் வெடித்ததில் ஒரு இராணுவச் சிப்பாய் காய மடைந்துள்ளார்.

எரிகாயங்களுடன் கிளிநொ ச்சி பொது வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள இவர், அவசர சிகிச்சைப் பிரிவில் சிகி ச்சை பெற்று வருகிறார்.

## ஆரம்பப் பாடசாலைகளின் அபிவிருத்தி யாழ். செயலகத்தில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு கல்வியமைச்சுடன் இணைந்து நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளும் 5 ஆயிரம் ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் 1000 இடைநிலைப் பாடசாலை களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் யாழ். மாவட் டத்தில் தெரிவு செய்யப்பட்ட 61 ஆரம்பப் பாடசாலைகளின் அபிவிருத்தித் திட்டம் குறித்து நேற்று யாழ்.செயலக கேட்போர் 19 ஆம் பக்கம் பார்க்க



தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று வெகுசிறப்பாக நடைபெற்றது அம்பாளின் தேர்த் திருவிழாவிற்கு வருகை தந்த அடியவர்கள் காவடிகள், அங்கப்பிரதட்சணம், தீச் சட்டி எனத் தமது நேர்த்திக்கடன்களை செலுத்தினர். (02)

# குடிநீருக்காக மைல் கணக்கில் நடைபயணம்; புதுக்குடியிருப்பு மக்களுக்கு சாபக்கேடு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ள நிலையில், குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகள் இன்றி பல்வேறு கஷ்டங்களை அனுபவிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள சிவநகர், மல்லிகைத தீவு, புதுக்குடியிருப்பு கிழக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் 500 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளன.

இவர்கள் நாளாந்தம் மலசலகூட வசதிகள் மற்றும் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் நீண்டதூரம் செல்லவேண்டிய நிலை காணப்படுகிறது. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் குறிப்பாக இங்குள்ள பொதுக்கிணறுகள் துப்புரவு செய்யப்பட்டுவதாகவும் எனினும் ஏனைய தேவைகளுக்காகத் தண்ணீர் பயன்படுத்தக்கூடியதாக இருக்கின்ற போதிலும், குடிநீருக்குத் தாம் அல்லற்படுவதாக அம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே புதுக்குடியிருப்பு பிரதேச சபை குடிநீர் வசதிகளை ஏற்படுத்த ஆவன செய்யுமாறு மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (04)

# பேருந்து சேவை இன்மையால் ஜெயபுரம் மக்கள் பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஜெயபுரம் பகுதிக்குப் பேருந்துப் போக்குவரத்து இன்மையால் இப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். 450 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் இங்கு வாழ்கின்ற நிலையில் இவர்கள் பேருந்து சேவையினைப் பெறுவதற்கு 3 கிலோ மீற்றர் தூரம் நடந்து பல்லவராயன்கட்டுக்கே செல்லவேண்டி இருக்கிறது.

தற்போது கடும் வெயில் காலம் ஆகையால் நடந்து செல்வதும் கடினமாக உள்ளதாகப் பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர். கர்ப்பிணித் தாய்மார்கள், அங்கவீனர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்கும், மன்னாரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் 30 நிமிடத்திற்கு ஒரு பேருந்து என சேவையில் உள்ளபோதும், ஜெயபுரத்திற்கு ஒரு பேருந்தும் இல்லை என பிரதேச வாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

முச்சக்கர வண்டிகளில் செல்வதென்றால் 150 ரூபாய் கேட்பதாகவும் அங்குள்ள அநேகமானவர்கள் நாளாந்த தொழிலை நம்பியே இருப்பதால் அவ்வளவு பணம் செலுத்திப் போவதற்கு முடியாமலுள்ளது. எனவே இதனைக் கருத்தில் எடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர். (149)

# வீதிப்போக்குவரத்திற்கு இடையூறு; மதுப்பிரியனுக்கு வழக்கு

(திருநெல்வேலி)

மதுபோதையில் வீதியில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்திய ஒருவரை யாழ். நீதிமன்றம் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.

நெடுந்தீவுப் பகுதியைச் சேர்ந்த இவர் குடித்துவிட்டு மது போதையில் யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில் போக்குவரத்துச் செய்தோருக்கு இடையூறாகப் பெரும் குழப்பநடவடிக்கைகளில் ஈடுபட்டிருந் தார். அந்த நேரம் யாழ்ப்பாண பொலிஸாரிடம் இவர் வகையாக மாட்டிக்கொண்டார்.

நேற்று இவர் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸாரால் ஆஜர் செய்யப்ப[illegible] போது, இவரை விளக்க மறி[illegible]லில் வைக்குமாறு பதில் நீதவான் மு.திருநாவுக்கரசு உத்தரவிட்டார்.

கடந்த வாரம் இதே குற்றச்சாட்டின் பேரில் இந்நபர் யாழ். நீதவான் நீதிமன்றினால் 3000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டிருந்தார். வேறு பல குற்றச்சாட்டுக்களின் பேரில் இவர் மீது வேறு வழக்குகளும் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் 2012 ஆம் ஆண்டுக்கான எட்டாவது (ஆகஸ்ட்) மாதாந்தப் பொதுக்கூட்டம் நாளை பிற்பகல் 2.00 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது. உரியவர்களைத் தவறாமல் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு மாநகர சபை செயலாளர் அறிவித்துள்ளார்.

## மான் இறைச்சி விற்றவருக்கு அபராதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - ஜெயபுரம் தீககுவில் பகுதியில் மான் இறைச்சி விற்பனை செய்தவரை புலனாய்வுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஜெயபுரம் - தீக்குவில் பகுதியில் மான் இறைச்சி விற்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து அப்பகுதியில் புலனாய்வுப் பொலிஸார் நடத்திய சோதனையின் போது தீக்குவிலைச் சேர்ந்த ஒருவரிடம் இருந்து மான இறச்சியும் மான் தோலும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. அத்துடன் குறித்த நபரை பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது குற்றவாளிக்கு 12 ஆயிரம் ரூபா குற்றப்பணம் செலுத்துமாறு தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.(149)

# உயர்தர மாணவர்களுக்கான இருநாள் வதிவிடப் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட உயர்தர மாணவர்களுக்கான தலைமைத்துவத் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான இரண்டு நாள் வதிவிடப் பயிற்சிநெறி இன்று காலை 8.30 மணிக்கு யாழ். தேசிய கல்வியல் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஏற்பாட்டில் வடமாகாண கல்வியமைச்சின் வழிகாட்டலில் வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் இப் பயிற்சி நெறி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து நாளையும் இப் பயிற்சிநெறி நடைபெறவுள்ளது.

வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள முதல் நாள் நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் ஆர்.விஜயலட்சுமி கலந்துகொள்ளவுள்ளார். இதில் மாணவர்களுக்கான தலைமைத்துவத் திறன் பயிற்சி, மனிதநேயப் பண்புகள், தொழில் வழிகாட்டல், ஆன்மீகப் பண்புகள் பற்றிய விரிவுரைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதனை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், யாழ். கல்வியற் கல்லூரி விரிவுரையாளர்கள் மேற்கொள்ளவுள்ளனர். இப் பயிற்சிநெறியில் வடமாகாணத்தைச் சேர்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் அடங்கலாக 400 மாணவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். இறுதிநாளான வியாழக்கிழமை பயிற்சியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. (பா)

# சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் திணைக்களமாவதை ஆதரித்துக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் 'திவிநெகும' அபிவிருத்திக் திணைக்களமாக மாற்றமுறுவதற்கு ஆதரவு தெரிவித்து யாழ். மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அதனோடு சார்ந்த உத்தியோகத்தர்கள் ஆதரவுக் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர்.


யாழ். வீரசிங்கம் மாநாட்டு மண்டபத்தில் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு இடம்பெறவுள்ள நிகழ்வில் குறித்த திட்டத்தை விரைந்து செயற்படுத்துமாறும் கோரி சமுர்த்தி உத்தியோகத்தர்களின் ஆதரவினை வெளிப்படுத்தவே இக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ஏ.ரகுநாதன் தெரிவித்துள்ளார்.

# சேமிப்பு வாரம்




மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையினர் இம்மாதம் 2 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடாத்தும் சேமிப்பு வாரத்தையொட்டி மானிப்பாய் இலங்கை வங்கிக்கிளையினர் வங்கி முகாமையாளர் சகாதேவன் தலைமையில் வீடுகள், வர்த்தக நிலையங்கள், உள்ளூராட்சி சபைகள், வைத்தியசாலைகள் போன்றவற்றுக்குச் சென்று 'ரண உடல் பத்து' பொன் ஊற்றுக் கணக்கினை ஆரம்பித்து மக்களை ஊக்குவித்ததுடன், வங்கிகளின் செயற்பாடுகள், நன்மைகள் என்பன பற்றி பிரசாரம் செய்து வருகின்றனர்.

# ஆய்வுகூடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு



யாழ்.நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம் அ.த.க வித்தியாலயத்தின் விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு வித்தியாலய அதிபர் திருமதி பாக்கியநாதன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கல்வி அமைச்சினால் 34 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ள விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கான அடிக்கல்லை ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நெடுந்தீவுப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) வைபவ ரீதியாக நாட்டிவைத்தார்.

இந்நிகழ்வில், பங்குதந்தை அமல்ராஜ், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் நிக்ஸன் மற்றும் பாடசாலை சமூகத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# விதிகளை மீறிய மூவருக்கு அபராதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தால் அபராதம் விதிக்கப்பட்டது.

முழங்காவில் பகுதியில் வரி அனுமதிப் பத்திரம், காப்புறுதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்திச் சென்ற நபர் நாச்சிக்குடாப் பகுதியில் அனுமதியின்றி அரச சாராயம் விற்பனை செய்த ஒருவர் மற்றும் பூநகரிப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய ஆகியோர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி, வரி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய நபருக்கு ஆறாயிரம் ரூபாவும், அரச சாராயம் விற்பனை செய்த நபருக்கு 10 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதித்ததுடன், மணல் ஏற்றிய நபருக்கு ஐயாயிரம் ரூபாவும் அபராதம் விதித்து தீர்ப்பளித்ததுடன் மணலைப் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டார். (கே)

# குடிநீர் விநியோகத் திட்டங்களை விரைவுபடுத்துமாறு பணிப்பு



(கிளிநொச்சி)

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டங்களை துரிதமாக நடைமுறைப்படுத்தி கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவிவரும் குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வுகாணுமாறு ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரைப் பணித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்ற குறித்தவிடயம் தொடர்பான கலந்துரையாடலின் போதே அவர் இப்பணிப்புரையினை விடுத்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இன்று ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக மக்கள் நீரைப் பெறுவதில் பெருஞ் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பகுதியில் நீர்த் தாங்கிகள் மூலம் விநியோகிக்கப்படும் நீரை மக்கள் பணம் கொடுத்து வாங்குகின்ற நிலை காணப்படுகிறது. அத்தோடு ஏனைய பகுதிகளிலும் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்நிலைமையினைக் கருத்தில் கொண்டு நாம் இப்பகுதிகளுக்கு குடிநீரை வழங்குவதற்கான திட்டத்தினை நடைமுறைப்படுத்த நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுள்ளோம். அத்திட்டத்திற்கமைவாக அக்கராயன், வட்டக்கச்சி, இயக்கச்சி போன்ற பகுதிகளில் நீர்விநியோகத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

எனவே குறித்த திட்டங்களை துரிதமாக நடைமுறைப்படுத்த தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் திட்டத்திற்கு பொறுப்பானவர்கள் துரிதமாக செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் சுமார் 2 மில்லியன் ரூபா செலவில் இயக்கச்சிப் பகுதியில் அமையப் பெறவுள்ள நீர் விநியோகத் திட்டம் வரும் இருமாத காலத்திற்குள் நிறைவு பெறும் எனவும் தொடர்ந்து அக்க்ராயன் பகுதியில் அமையப்பெறவுள்ள சுமார் 2 மில்லியன் ரூபா பெறுமதியான திட்டத்தின் மூலம் 300 இற்கும் மேற்பட்ட குடும்பத்தினர் பயன் பெறுவர் எனவும் வட்டக்கச்சியில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள திட்டத்தின் மூலம் 390 வரையான குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் பயன் பெறுவர் எனவும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

இக்கலந்துரையாடலில் கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் சபாநாயகம், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் இரணைமடுத் திட்டப் பணிப்பாளர் பாரதிதாசன், நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட பிரதிப்பணிப்பாளர் சுதாகரன், கிளிநொச்சி பிராந்திய நீர்ப்பாசனத்திணைக்களப் பொறியியலாளர் விகிர்தன், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் திட்டப் பொறியியலாளர் விஜயகாந்த், தேசியநீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபையின் சமூகவியலாளர் மோகன்ராஜ், அக்கராயன் பாடசாலை அபிவிருத்திச் சங்க செளலாளர் பாஸ்கரன் ஆகியோரும் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதிகள் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினர், உட்பட துறை சார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

## புனரமைப்புக் கூட்டம்

(வரணி)

வரணிப் பிரதேச வைத்தியசாலை புனரமைக்கப்பட வேண்டியுள்ளதால் அதற்குரிய அபிவிருத்திக் கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு உரியவர்கள் கலந்து கொண்டு அபிவிருத்தி சபையை உருவாக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள பூரண ஆதரவு வழங்குமாறு வரணி பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (150)

## வருடாந்த மகோற்சவம்

(அச்சுவேலி)

ஆவரங்கால் கிழக்கு புதுவை ஆலடி முருகன் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நாளை வியாழக்கிழமை பகல் 12.00 மணிக்கு ஆலய பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ நாகேந்திர பாலசுப்பிரமணிய சிவாச்சாரியார் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

மகோற்சவ காலத்தில் தினமும் காலை உற்சவம் மு,ப. 09.00 மணிக்கும் மாலை உற்சவம் பி.ப.06.00 மணிக்கும் ஆரம்பிக்கும் அதேவேளை, மகோற்சவத்தின் இரண்டாம் நாள் வசந்தோற்சவத் திருவிழாவும், மூன்றாம் நாள் பக்திமுத்தி பாவனைத் திருவிழாவும், நான்காம் நாள் தினைப்புனக் காட்சியும், ஐந்தாம் நாள் மாம்பழத் திருவிழாவும், ஆறாம் நாள் வேட்டைத் திருவிழாவும், இடம் பெறவுள்ளன.

தொடர்ந்து ஏழாம் நாள் வேல்விமானத் திருவிழாவும், எட்டாம் நாள் மாலை சப்பறத் திருவிழாவும், ஒன்பதாம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு இரதோற்சவமும், பத்தாம் நாள் சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு தீர்த்தோற்சவமும், மறுநாள் திருக்கல்யாண உற்சவமும் இடம் பெறும். (03)

## கலைஞர்களுக்கு அடையாள அட்டை

(கட்டுவன்)

இலங்கை கலைஞர்களுக்காக கலாசார அலு வல்கள் திணைக்களம் கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சினால் அடையாளஅட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக கீழக் காணும் தகைமைகளைக் கொண்டிருப்பதோடு கலாசார பணிப்பாளரின் தலைமையில் அமைக்கப்படும் குழுவினரால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

குறைந்த தகைமையாக 18 வருடத்திற்கு குறையாமல் கலைச் சேவையில் தொடர்ந்து ஈடுபட்டிருத்தல் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் ஆக்கத்திறன் மற்றும் கௌரவிப்பு அல்லது விருது வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். தெல்லிப்பளை பிரதேசசெயலகத்திற்கு உட்பட்ட கலைஞர்கள் செயலக கலாசாரப்பிரிவில் இதற்கான விண்ணப்பப் படிவங்களைப்பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னராக ஒப்படைக்குமாறு கலாசார உத்தியோகத்தர் கோரியுள்ளார். (22)

## உதவிப் பணம் எப்போது கிடைக்கும்

(வரணி)

யாழ்.மாவட்ட உதவிப்பணம் பெறும் 70 வயதிற்கும் மேற்பட்டவர்களுக்கான இரண்டு மாத உதவித்தொகை இன்னும் வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமக்குரிய உதவித்தொகை வந்து சேர்ந்து விட்டதா என்ற அவாவுடன் பலர் தபாலகத்தில் வந்து விசாரித்து விட்டுப் போவதைக்காணமுடிகிறது.

இவர்களுக்குரிய தொகை எப்போது வரும் எனத் தெரியவில்லை என்று தபாலக உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர். (150)

## ஆன்மிக சொற்பொழிவு


(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவத்தை ஒட்டி சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் உற்சவ தினங்களில் ஆன்மிகச் சொற்பொழிவுகள் இடம்பெற்று வருகின்றன.

இச் சொற்பொழிவு வரிசையில் இன்று முற்பகல் 10.00 மணியளவில் "மானிட வாழ்வை மாண்புறச் செய்வோம்" எனும் தலைப்பில் இளைப்பாறிய ஆசிரியர் ஐ.சண்முகலிங்கம் சொற்பொழி வாற்றவுள்ளார்.

சந்நிதி ஆலய முன்றலில் நடைபெறும் சொற்பொழிவு நிகழ்வில் இன்று மாலை 4.00 மணிக்கு "சும்மா இரு" என்ற தலைப் பில் சின்மயா மிசன் ஜாக்கிர சுவாமிஜி சொற்பொழி வாற்றவுள்ளார். (116)


தெல்லிப்பழை துர்க்கை அம்மனுக்கு இன்று தீர்த்தோற்சவம்


துன்பத்தைப் போக்கிடுவாள்!

தெல்லிநகர்த் துர்க்கையிடம்
ஓடி வாருங்கள்
அல்லல் களை நீக்கி யெம்மைக்
காத்து வருவாள்
எல்லை யில்லருள் கொழிக்கும்
எங்கள் அம்மை
வல்ல வளாம் வருந் துன்பம்
போக்கி விடுவாள்.

- சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் -


விஷானி நகை மாளிகை








தரம் குன்றாத தங்க நகைகளை
உத்தரவாதத்துடன் செய்து பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்




Vizany Gold House

இல. 187, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 221 9510
பக்ஸ். 021 221 9511


செல்வச்சந்நிதி முருகனுக்கு இன்று சப்பரத் திருவிழா





தீராத வினைகள் தீர்ந்திடும்!

சந்நிதித் திருத்தலம் வாருங்கள் அங்கே
தீராத வினைகளைத் தீருங்கள்
சந்நிதி வேலன் சாரங்கன் மருகன் சத்திநிதிபாதன்
சஞ்சலம் தீர்ப்பது சந்நிதிதானே.

- தொல்புரத்தூர் க.லோகேஸ்வரன் -

மணியம் மடம் புனருத்தாரணம்

மேற்படி மடம் கடந்த காலங்களில்
மிக செழிப்பாக அன்னதானம் வழங்கியது
என்பதனை அனைவரும் அறிவீர்கள்.

சில வருடங்களாக இடம் பெற்ற வன்
செயல்களினால் கட்டடம் சேதமடைந்துள்ளது
இதனை நாம் படிப்படியாகத் திருத்தி அமைத்து
வருகின்றோம்.

அன்னதானப் பணியை மேற்கொள்ளவரும்
அடியவர்களும் தங்கி நிற்க வரும் அடியவர்களும்
கூடுதலாக வருவதனால் மிகுதி கட்டடதிருத்த
வேலைகளிற்கு தங்களால் இயன்ற பொருள்
உதவியோ பண உதவியோ வழங்கி
கட்டடதிருத்த வேலைகளிற்கு உதவி புரியுமாறு
கேட்டுக் கொள்கிறோம்.

சந்நிதி
தொண்டைமானாறு
தொ.பே. 021 7912094, 0776648653

என்றும் அன்னதானப்பணியில்
நிர்வாகி
கந்தசாமி புஸ்பநாதன்

எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே நம் நாட்டிலே...
- பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264 தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu @live.com

## எப்போதுமா ஏமாறும் இந்த ஊர்!

தமிழ்மக்களைப் பிழையான தகவல்களோடு திசைதிருப்பிப் பொய்மைச் சூழலில் வைத்திருக்கும் தமிழ் ஊடகச் செயற்பாட்டின் மற்றுமோர் உதாரணத்தை நாம் சுட்டிக்காட்டும்படி வந்திருக்கிறது. ஐ.தே.க.வின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனைச் சுட்டுக் கொன்ற கொலையாளி இன்னாரென உறுதிப்படுத்தப்பட்டு அவருக்கு கொழும்பு மேல்நீதிமன்றம் மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்திருப்பது பற்றிய செய்தியே அது.

2008 ஜனவரி 1 ஆம் திகதி மகேஸ்வரனை கொச்சிக்கடை பொன்னம்பலவா ணேஸ்வரர் ஆலயத்துள் வைத்துச் சுட்ட கொலையாளியை மகேஸ்வரனின் மெய்ப் பாதுகாவலர்கள் திருப்பிச் சுட்டதில் காயமடைந்து கொலையாளி கைதுசெய்யப்பட்டிருந்தார். கொலையாளி யார், எங்கிருந்து வந்தார், எங்கு தங்கியிருந்து எப்படித் தாக்குதலை நிறைவேற்றினார் போன்ற அனைத்து விபரமும் சாட்சியங்களுடன் நிரூபிக்கப்பட்டு, 150 பக்க அறிக்கையாக திறந்த நீதிமன்றில் அறிவிக்கப்பட்டு மரணதண்டனையும் வழங்கப்பட்டிருக்கிறது. நம் தமிழ் ஊடகங்கள் இப்போதும் புலிகளின் காலத்தில் எழுதியது போல "இனந் தெரியாதவருக்கு மரணதண்டனை" என்ற பாணியில் எழுது வதன் நோக்கம் என்னவாக இருக்கும்?

மக்களது தகவலறியும் உரிமையை பொய்யான அவதூறுகளில் அமிழ்த்தி வைத்திருப்ப தற்கே பெரும்பாலான தமிழ் ஊடகங்கள் இப்போதும் முனைப்புக்காட்டி வருகின்றன. அரசி யல் லாபத்திற்காகவும், வியாபார லாபத்திற்காகவும் உண்மையை ஒளிக்கும் ஊடகங்களா கவே இவை செயற்பட்டு வருவதை இத்தகைய ஒவ்வொரு செய்தியும் இன்று அம்பலப்படுத்தி வருகிறது.

கொலையாளியான ஜோன்ஸ்ரன் கொலின் வலன்ரினோ என்பவர் புலிகளின் பிஸ்டல் குழுவைச் சேர்ந்தவர். வசந்தன் என்ற இயக்கப் பெயரைக் கொண்ட இவர், யாழ்ப்பாணம் குருநகர் கடற்கரை வீதியைச் சேர்ந்தவர். தந்தையார் அந்தோனிப்பிள்ளை ஜோன்ஸ்ரன் கொலினும், தாயார் டொனா அஞ்சலாவும் குருநகரிலிருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் வசித்து வந்தனர். வன்னியிலுள்ள வீரபுரம் முகாமில் 'மதிவன் மாஸ்ரர்' என்பவரினால் வசந்தனுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு, 1527 இலக்கத்தகடும் வழங்கப்பட்டது.

கொலையாளி வசந்தன், வத்தளையிலுள்ள தற்காலிக இடமொன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, கொழும்பில் வேலையும் பெற்றுக் கொடுக்கப்பட்டது. கொட்டாஞ்சேனையிலுள்ள வர்த்தக வங்கியில் சேமிப்புக் கணக்கொன்றை வைத்திருந்தார். அதற்கு நோர்வேயிலிருந்து பணம் அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தது. 2007 ஆம் ஆண்டு வசந்தன் வெள்ளவத்தைக்கு அழைக்கப்பட்டு, அவரிடம் மைக்ரோ பிஸ்டல் ஒன்றும் 39 ரவைகள் அடங்கிய இரு மகசின்களும் வழங்கப்பட்டன. 14 ரவைகளை மகசினுக்குள் நிரப்பிய வசந்தன் மீதி 25 ரவைகளையும் வத்தளையிலுள்ள தனது தங்குமிடத்தில் மறைத்து வைத்துள்ளார். மகேஸ்வரனைச் சுட்டபோது காயப்பட்ட இவரது விரலிலிருந்து பிஸ்டலில் படிந்த இரத்தம் டி.என்.ஏ பரிசோதனையில் நிரூபிக்கப்பட்டது.

மகேஸ்வரன் சுடப்பட்டது இது இரண்டாவது தடவையாகும். ஏற்கனவே பம்பலப்பிட்டியில் வைத்து புலிகளால் சுடப்பட்டுக் காயமடைந்தவர் உயிர்பிழைத்திருந்தார். அந்தக் கொலைமுயற்சியில் புலிகள் உறுப்பினரான நியூட்டன் நேரடியாக சம்பந்தப்பட்டிருந்தார்.

ஆரம்பத்திலிருந்தே எந்த ஆதாரங்களும் இல்லாமல், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செய்த கொலை என்பது போலவே தமிழ் ஊடகங்கள் எழுதிவந்தன. விஜயகலா மகேஸ்வரன் அவர்களும் நாடாளுமன்றத்தில் அவ்வாறே குற்றம் சாட்டியிருந்தார். பின்னர் ஜனாதிபதியின் யாழ்ப்பாண விஜயத்தின்போது அவருடன் பேசியதில் உண்மையை அவர் விளங்கிக் கொண்டதாகத் தெரிகிறது. நமது ஊடகங்கள்தான், உண்மை கண்முன்னே வந்துநின்றாலும் அதைக் கண்டுகொள்வதேயில்லையே!

இப்போதுகூட, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருக்குச் சொந்தமான அவதூறுப் பத்திரிகை, இந்தச் செய்தியை எப்படி எழுதியிருக்கிறதென்று பாருங்கள்: "இவர் இறப் புக்கு சில நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் கொல்லப்படுவதற்கு பின்னணியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் இருப்பதாகவும் அதற்கான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளதாகவும் அவற்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளதாகவும் உள்ளூர் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கியிருந்த நேர்காணலில் அவர் தெரிவித்திருந்தார்."

இப்படி கூசாமல் எழுதியிருக்கிறது அந்தப் பத்திரிகை. இவர்களுக்கும் உண்மை, நேர்மை, மக்களுக்குச் சரியான தகவல்களைத் தரும் பொறுப்புணர்வு போன்றனவற்றுக்கும் என்ன சம்பந்தமிருக்க முடியும்? இவர்கள் குறிப்பிடும் அந்த "மின்னல்" தொலைக் காட்சி நிகழ்ச்சியில், யாழ்ப்பாணத்தில் யார் கொலைகள் செய்கிறார்கள், அதற்கான ஆதாரங்கள் தன்னிடம் இருக்கிறதென்று மட்டும்தான் மகேஸ்வரன் கூறினார். டக்ளஸ் தேவானந்தாவின் பெயரை உச்சரிக்கவே இல்லை.

இந்தப் பத்திரிகை, உண்மை தெரிந்து கொண்டும் இவ்வளவு தெளிவாகப் பொய் எழுத வேண்டிய காரணம் என்ன? அவதூறும் காழ்ப்பும் இறைத்துப் பழகியதை இன்னும் நிறுத்திக்கொள்ள முடியாமலிருப்பதாலா? நீதிமன்றம் அழைத்துக் கண்டித்து அனுப்பினால்கூட நிறுத்தாமல் அவதூறையே பொழிகின்ற வக்கிரத்திற்கு பத்திரிகை தர்மம் என்ற சப்பைக்கட்டல்கள் ஏன்? மீண்டும் குறிவைக்கப்படும் பேனாக்கள் என்று போலித் திருகுதாளங்கள் ஏன்?

பொய்களால் மக்களை ஏமாற்றி சீட்டுக்கம்பனி மோசடி செய்து ஓடிப்போனவர்களெல்லாம், திரும்பவும் வந்து பொய்களையே எழுதி அதே மக்களிடம் விற்க முடிவது நம் சமூகத்தில்தான் சாத்தியமாகும் போலும்! ஆனாலும், ஊரறியப் பொய் சொல்லி நடப்போரை நம்பி எப்போதுமா ஏமாறும் இந்த ஊர்!

- ஆசிரியர்

## கடன்களை மறைப்பதற்கு வேறு வங்கியில் புதிய வைப்பு

வடமராட்சி கிழக்கு பிரதேசத்திலுள்ள 3 கிராம சேவையாளர் பிரிவுகளைச்சேர்ந்த மக்களின் வீட்டுத்திட்டத்திற்கு தெரிவாகிய பயனாளிகளுக்கு எஸ். டி.சி. நிறுவனத்தால் வழங்கப்படும் நிதி மருதங்கேணி சமுர்த்தி வங்கியினூடாக வழங்கப்பட்டு வருகிறது.

பொதுவாக அரச வங்கியான இலங்கை வங்கியினூடாகவே வீட்டுத்திட்டங்களுக்கான நிதி பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்ற நிலையில் இக் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள மக்கள் சுய தொழிலுக்காக ஏற்கனவே இலங்கை வங்கியில் கடனைப் பெற்று அவற்றை மீள செலுத்த முடியாது உள்ளனர்.

குறிப்பாக இக்கிராமத்திலுள்ள மக்கள், மக்கள் வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி கிளைகளில் பணத்தைக் கடனாக பெற்றுள்ளனர். எனினும் வங்கி உத்தியோகத்தர்கள் கடனை மீளப் பெறுவதற்கு சென்றால் அவர்கள் தப்பிப்பிழைப்பதாகவும் இலங்கை வங்கியினூடாக வீட்டுத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கினால் அவர்கள் பணத்தை இடைநிறுத்தி விடுவார்கள் என்பதை கருத்தில் கொண்டு இக்கிராம மக்கள் சமுர்த்தி வங்கியியூடாக பணத்தை தருமாறு மேற்படி வீட்டுத்திட்ட நிறுவனத்திடம் கோரிக்கை முன்வைத்தனர்.

இதனை அடுத்து மேற்படி நிறுவனம் வீட்டுத்திட்டத்திற்கான நிதியை மருதங்கேணி சமூர்த்தி வங்கியூடாக வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் வங்கி இலங்கை வங்கியினூடாகவே வீட்டுத் திட்டத்திற்கான நிதி வழங்கப்படுகின்ற நிலையில் மருதங்கேணியில் மட்டும் தான் சமுர்த்தி வங்கியூடாக பணம் வழங்கப்படுகிறது என்று இலங்கை வங்கி உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர். (38)

## கிளிநொச்சியில் வெடிவிபத்து; ஐ.நா.பணியாளர் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்றுக் காலை வெடிபொருள்ஒன்று வெடித்ததில் யு.எஸ். நிறுவனபணியாளர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று காலை 7.30 மணியளவில் இந்தச் சம்பவம் கனகாம்பிக்கைக்குளம் கிராமத்தில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக தெரியவருவதாவது சேவிஸ் வீதி கனகாம்பிகைக் குளம் பகுதி வீடொன்றில் யு.எஸ். நிறுவனத்தின் பணியாளர்கள் தங்கி வருகின்றனர். குப்பை கூழங்களைக் கூட்டி எரியூட்டும் போது இந்த சம்பவம் இடம் பெற்றதாகவும் இந்த சம்பவத்தில் யு.எஸ். பணியாளரான சீலன் காலில் படுகாயமடைந்த நிலையில் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் சம்பவத்தின் போது அருகிலிருந்த பணியாளர்கள் தெரிவித்தனர்.

பாரிய சத்தத்துடன் அதிர்ந்ததை அடுத்து சம்பவ இடத்திற்கு இராணுவ உயரதிகாரிகளும் விரைந்து வெடித்த வெடிபொருள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

கனகாம்பிகைக்குளம் வெடிபொருள் அகற்றப்பட்ட பிரதேசம் என ஏற்கனவே உறுதி செய்யப்பட்ட போதிலும் இவ்வாறான வெடி பொருட்கள் மேலும் காணப்படலாம். எனவே பொதுமக்கள் மிக அவதானமாக விழிப்புடன் செயற்படவேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறது. (28)

## உரம் வழங்க நடவடிக்கை

(கரணவாய்)

கரணவாய் கிழக்கு பிரதேசத்தில் காலபோக நெற்செய்கையை மேற்கொள்ளவுள்ள விவசாயிகளுக்கு உரம்வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கரணவாய் கிழக்கு கமக்கார அமைப்பில் அங்கத் தவர்களாக இருக்கும் பயனாளிகள் 2012ஆம் ஆண்டுக்கான உரம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தினை அமைப்பின் உபதலைவர் க.சி. அச்சலிங்கம் என்பவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்களைப்பெறும் பயனாளிகன் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து உற்பத்தி செய்யும் நெற்காணியின் பெயர் பரப்பு ஆகிய விபரங்களுடன் சென்று அங்கத்துவ பணமாக 100 ரூபா செலுத்தி பற்றுச்சீட்டைப்பெற்றுக் கொள்ளமுடியும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவேண்டும் என உப தலைவர் அறிவித்துள்ளார். (18)

## பிடிபட்டவர்களுக்கு விளக்கமறியல்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கில் இருந்து அவுஸ்ரேலியாவுக்கு செல்ல முற்பட்டவர்களுக்கு பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை வடமராட்சி கிழக்கு கடற்பரப் பில் கைது செய்யப்பட்ட 52 பேரும் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டனர்.

இதன்போது மூன்று சிறுவர்கள் மற்றும் இரு தாய்மார் ஆகியோர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஏனையவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் வழக்கும் தொடரப்பட்டுள்ளது. (01)

## எழிலூர் கிராம குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வு

(யாழ்ப்பாணம்)

எழிலூர் கிராமத்தில் மீள் குடியேற்றப்பட்ட மக்களின் அடிப்படை பிரச்சினைகள் யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா எடுத்த நடவடிக்கையினால் உடனடியாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மீள்குடியேறிய எழிலூர் கிராமத்திற்கு நேற்று நேரில் விஜயம் செய்த யாழ். மாநகர முதல்வர் அப்பிரதேச மக்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன் விளைவாக அப்பிரதேச மக்கள் எதிர்நோக்கிவரும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டு அவற்றுக்கும் உரிய வகையில் தீர்வு காணப்படுமென உறுதிமொழி வழங்கினார்.

இதன்போது மாநகர உத்தியோகத்தர்கள் உடனிருந்தனர்.

# திண்டாடும் அமெரிக்கா



- ப. கனகசபாபதி

அமெரிக்கா என்றாலே நமது மனக்கண் முன் பிரமாண்டமான, வண்ணமயமான ஒரு சித்திரம்தான் உருவா-கும். உலகின் செழிப்பான, வளர்ச்சி யடைந்த நாடு. அசைக்கமுடியாத பொருளாதார பலம் கொண்ட நாடு. உலகிலுள்ள மிகப் பெரிய நிறுவனங்களின் தாயகம். இன்னும் பல.

ஆனால் அனைத்தையும் பொய்யாக்குகின்றன அங்கிருந்து கிடைக்கும் செய்திகள். அமெ ரிக்காவின் பொருளாதாரச் சிந் தனைகளும் கருத்துகளும் வேக மாகத் தோல்வியைச் சந்தித்துக் கொண்டிருப்பதைத்தான் இச்செய்தி கள் நமக்குத் தெளிவாக உணர்த்து கின்றன. அதன் முக்கியமான வெளிப்பாடுதான் 2007-08 வருடங் களில் அங்கு தோன்றிய நிதி நெருக்கடியாகும். அதுவே பின்னர் பொருளாதார நெருக்கடியாக விரிந்து பிற நாடுகளையும் மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாக்கியது. அதன் விளைவாக மிகப்பெரிய கம்பெனிகள்கூட சிக்கல்களில் மூழ்கின. உலக அளவில் நிதித் துறையில் ஆதிக்கம் செலுத்தி வந்த லெஹ்மன் பிரதர்ஸ் திவாலானது. தொடர்ந்து வெவ்வேறு துறை களைச் சேர்ந்த பல நிறுவனங்கள் பாதிக்கப்பட்டன.

அமெரிக்கர்களின் வாழ்க்கையில் ஒரு பலத்த அடி விழுந்தது. 1930 களுக்கு பிறகு அந்நாட்டு மக் களுக்கு ஏற்பட்ட பெரிய அடி இது என்று சொல்லப்படுகிறது. வசதி யாக இருந்து வந்த பல இலட்சக் கணக்கானவர்கள் மிகக் குறுகிய காலத்தில் ஏழைகளாக மாறிப்போனார்கள். ஆயிரக்கணக் கான குடும்பங்கள் வீடுகளையும் வேலைகளையும் இழந்தனர்.

தங்கள் செயல்பாடுகளில் அரசாங்கம் எந்த வகையிலும் தலையிடக்கூடாது என்று அது-வரை சொல்லி வந்த பல பெரிய நிறுவனங்கள் உதவி வேண்டி அரசாங்கத்திடம் மண்டியிட்டன. அரசாங்கத்தின் 700 பில்லியன் டொலர் நிதி உதவி மூலமே பொருளாதாரம் செயற்பட ஆரம்பித் தது. இன்று வரை அமெரிக்க அரசு தனியார் நிறுவனங்களுக்குப் பல உதவிகளைச் செய்து கொண்டே இருக்கிறது.

ஆனால் பெரும்பான்மை மக்களின் வாழ்நிலையில் முன்னேற்றமில்லை. 2009 முதல் 2011 வரை தலைக்கு மேல் கூரையில்லாமல் வீதிகள் மற்றும் கார்களில் தங்குவோரின் எண்ணிக்கை

**சர்வதேசப் பொருளாதார வளர்ச்சிக்கான திறவுகோல்கள் தம்மிடமே உள்ளதாக மார்தட்டிக் கொண்டு வந்த அமெரிக்காவால் தனது அடிப்படைப் பிரச்சினை களைக்கூடத் தீர்த்துக்கொள்ள முடியவில்லை என்பதுதான் நிஜம். இதுவரை பொருளாதாரத் துறையில் நோபல் பரிசு பெற்ற 69 நிபுணர்களில் 49 பேர் அமெரிக்கர்கள். ஆனால் அவர்களால் தங்கள் நாட்டின் சிரமங்களுக்கு உருப்படியான ஒரு தீர்வைக்கூடச் சொல்லமுடியவில்லை.**

இரண்டு சதவிகிதம் அதிகரித்துள்ளது. 2010ம் வருடம் 15.1% இருந்த வறு மைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக் களின் எண்ணிக்கை, 2011இல் 15.7% அதிகரித்துள்ளதாக அசோசியேட்டட் பிரஸ் கருத்துக்கணிப்பு கூறுகிறது. எனவே கடந்த ஐம்பது வருடங்களில் இல்லாத அளவு அண்மைக்காலமாக வறுமை அதிகரித்துள்ளது. அதனால் கடந்த வருடம் 4.7 கோடி பேர், அதாவது மக்கள் தொகையில் ஆறில் ஒருவர், வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்து வந்துள்ளனர். அதிலும் அதிக மாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் ஆபிரிக்கா போன்ற நாடுகளைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள், குழந்தைகள் மற்றும் தனித்து விடப்பட்ட பெண்கள் என்பது மிகவும் வேதனையான விட யமாகும்.

2010ஆம் வருட கணக்குப்படி அமெரிக்காவில் வறுமையில் வாடும் குழந்தைகளின் எண்ணிக்கை 22%. உல கிலுள்ள 35 முன்னேறிய நாடுகளில் எடுக்கப்பட்ட கணக்கின்படி பார்த் தால், இதில் இரண்டாவது இடம் அமெரிக்காவுக்கே என்கிறது யுனி செ.்.ப். சுகாதார காப்பீடு அங்கு அவர் களின் வாழ்க்கைக்கு அவசியமாகக் கருதப்படுகிறது. ஆனால் மக்கள் தொகையில் ஆறு பேரில் ஒருவருக்கு அந்தக் காப்பீடு கிடைக்கவில்லை. அதி நவீன மருத்துவ வசதிகளைக் கொண்ட அந்த நாட்டில் மருத்துவச் செலவுகள் அதிகரித்தும், காப்பீடு எடுப்போர் எண்ணிக்கை குறைந்தும் வருகின்றன.

வேலை வாய்ப்புகளில் பெரிய முன்னேற்றமில்லை. அங்குள்ள இந்தியானா பலகலைக்கழகம் வெளியிட்டுள்ள ஆய்வு எதிர் காலத்தில் மக் களின் நிலைமை இன்னமும் மோச மாகவே இருக்கும் எனச் சொல்கிறது. பொருளாதார முன்னேற்றம் போதுமானதாக இல்லாததால் பல விதமான அரச உதவி கள் நிறுத்தப்பட்டு வருகின்றன. அதனால் பல்கலைக்கழகங்கள் கட்டணத்தை அதிகப் படுத்தி வருகின்றன. மாணவர்கள் கல்வி பெறுவதில் பெருத்த சிரமங்கள் ஏற்பட்டு வருகின்றன. கல்விக் கடன்கள் அதிகரித்து வருகின்றன.


மேற்கண்ட சூழ்நிலை உலகப் பொருளாதார நெருக்கடியால் மட்டும் திடீரென்று உருவானதல்ல. அதற்கான விதை 1970களின் இறுதியில் போடப்பட்டு, கடந்த 30 ஆண்டுகளாகவே அது பெரிய விருட்சமாக வளர்ந்து வந்துள்ளது. பெடரல் ரிசேர்வ் வங்கி வெளியிட்டுள்ள குடும்பங்களின் நிதி நிலைமை பற்றிய 2010ம் வருடத்துக்கான அறிக்கை, 54 வயதுக்குக் கீழான மக்கள் சார்ந்த குடும்பங்களின் நிகர மதிப்பு 1983 ஆம் ஆண்டு இருந்ததை விட 2010 ஆம் ஆண்டு குறைந்துள்ளதைக் காட்டுகின்றது. அதே சமயம் கிரெடிட் கார்ட் கடன்கள் 30 ஆண்டு களுக்கு முன் இருந்ததைவிட எட்டு மடங்கு அதிகரித்துள்ளன.

மேலும், மக்களுக்கிடையே நிலவும் வருமானம் மற்றும் சொத்து களின் வித்தியாசங்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. அதிலும் மக்கள் தொகையில் ஒரு சதவீதம் மட்டுமே உள்ள மேல் தட்டு மக்கள் தான் எல்லா வகையான பலன்களையும் அதிகமாகப் பெற்று வருகின்றனர். 1993 முதல் 2007 வரையிலான காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சியின் பாதிப் பலன்கள் அந்த மக்களுக்கே சென்று விட்டதாக கலி.்.போர்னியா பல்கலைக்கழக ஆய்வு தெரிவிக்கிறது. 1978 முதல் க்ணக்கிட்டால் பெரிய கம்பெனி களின் தலைமை நிர்வாகிகள் பெறும் வருமானம் 725% அதிகரித் துள்ளது. சாதாரண தொழி லாளிக்கு 6%க்கும் குறைவாகவே உள்ளது. நிதித் துறை நிறுவனங் களின் தலைமை நிர்வாகிகளின் ஊதியம் 2011ம் வருடத்தில்கூட 20% அதிகரித்துள்ளது. அதே சமயம் சாதாரண தொழிலாளி யின் வருமானம், பண வீக்கத்தைக் கணக்கிட்டுப் பார்க்கும் போது 2% குறைந்துள்ளது.

அந்த வகையில், சராசரி அமெ ரிக்கனின் பொருளாதார வீழ்ச்சி என்பது கடந்த பல ஆண்டு களாகவே நடந்து வருவதுதான். கடந்த முப்பது வருட கால கோட்பாடுகள் மக்களுக்குத் தீங் கிழைத்து விட்டதாக நோபல் பரிசு பெற்ற அமெரிக்கப் பேராசிரியர் பால் க்ருக்மன் வெளிப்படையாகத் தெரிவித்தார். இன்னமும் மக்களின் வேதனைகள் அதிகரித்துக்கொண்டே வருவது, அமெரிக்க வழிமுறைகள் எவ்வளவு தவறானவை என்பதை உணர்த்துகின்றன. மேற்குறிப்பிட்ட பெடரல் வங்கிக் கணக்கெடுப்பு 2007 முதல் 2010 வரையான வருடங்களில் மட்டும் அமெரிக்கக் குடும்பங்களின் நிகர மதிப்பு 39% குறைந்துள்ளதாகத் தெரிவிக்கிறது. அமெரிக்கா முன்னிறுத்திய உலகமயமாக்கல் கொள்கை அமெரிக்கர்களின் வேலை வாய்ப்புகளையே காவு கொண்டு வருகிறது. அந்நாட்டுக் கம்பெனிகள் குறைவான சம்பளத்தை வெளி நாட்டினருக்குக் கொடுத்து அதிக லாபம் ஈட்டுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன.

சர்வதேசப் பொருளாதார வளர்ச்சிக்கான திறவுகோல்கள் தம்மிடமே உள்ளதாக மார்தட்டிக் கொண்டு வந்த அமெரிக்காவால் தனது அடிப்படைப் பிரச்சினைகளைக்கூடத் தீர்த்துக்கொள்ள முடியவில்லை என்பதுதான் நிஜம். இதுவரை பொருளாதாரத் துறையில் நோபல் பரிசு பெற்ற 69 நிபுணர்களில் 49 பேர் அமெரிக்கர்கள். ஆனால் அவர்களால் தங்கள் நாட்டின் சிரமங்களுக்கு உருப்படியான ஒரு தீர்வைக்கூடச் சொல்லமுடியவில்லை.

அமெரிக்கப் பொருளாதாரத்தின் குறைபாடுகள் அவர்களுடைய கோட்பாடுகளிலேயே உள்ளன. சந்தைப் பொருளாதார முறை, அதைத் தாங்கிப் பிடிக்கும் தனி நபர் சிந்தனைகள், அவற்றையொட்டிய வாழ்க்கை முறைகள் ஆகியவை அமெ ரிக்கர்களைத் தவறான வழியில் இட்டுச் சென்றிருக்கின்றன. இதனால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் நடுத்தர மற்றும் கீழ்த்தட்டு மக்களே. வோல் ஸ்ட்ரீட் போராட்டத்தில், "நாங்கள் 99 சதவிகிதம்" என்று முழக்கமிடுபவர்களும் இவர்களே.



# சர்வதேசத்துடனான உறவில் சுமுகநிலை நிலவுகின்றது

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

சர்வதேச நாடுகளுடனான உறவுகளில் சுமுக நிலை நிலவுவதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சர்வதேசத்தில் இலங்கையின் நன்மதிப்பு கிரமமான முறையில் அபிவிருத்தி அடைந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அண்மைய வாரங்களில் மூன்று நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

இலங்கையின் சர்வதேச உறவுகள் சிறந்த நிலையில் காணப்படுகிறது. அது தொடர்பில் கவலையடைய வேண்டிய அவசியமில்லை.

மூன்று தசாப்த யுத்தத்தின் பின்னர் உலகின் எந்தவொரு நாட்டிலும் இல்லாத அளவிற்கு இலங்கையில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் ஐந்து சிரேஷ்ட அமைச்சர்கள் அண்மைக்காலத்தில் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர். எதிர்காலத்தில் சீன மற்றும் ரஷ்ய உயர்மட்ட இராஜதந்திரிகள் இலங்கைக்கு விஜயம் செய்யவுளளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

# நோயாளர் விடுதி அமைக்க இந்திய அரசு நிதியுதவி

(வவுனியா)

வவுனியா பொது வைத்தியசாலையில் 200 படுக்கைகளைக் கொண்ட நோயாளர் விடுதியை அமைப்பதற்கு இந்தியா 200 மில்லியன் ரூபாய் நிதி வழங்கியுள்ளது.

இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மானிய அடிப்படையில் இந்தத் தொகை வழங்கப்படுவதாக கூறப்படுகிறது.

வைத்தியசாலையின் உட்கட்டுமான வசதிகளை அதிகரிக்கவும், சிறந்த சிகிச்சைகளை வழங்கவும், நான்கு மாடிக் கட்டடமாக இந்த கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்திய அரசாங்கம் வடக்கில் புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் போன்ற விடயங்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது.

இடம்பெயர்ந்த மக்களுக்காக ஏற்கனவே அறிவிக்கப்பட்ட வீட்டுத்திட்டமும் விரைவில் நடைமுறைப் படுத்தப்படும் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 1981 இல் மாத்திரமே வாக்குப் பெட்டி மோசடி

## ஐ.தே.க. விடம் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.தே.க தவிசாளர் மற்றும் செயலாளர் உள்ளிட்ட குழுவினர் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து, செப்-8ல் நடக்கும் தேர்தலில் வாக்குப் பெட்டி மாற்றப்படலாம். இது வாக்களிப்பு நிலையத்தில் இருந்து வாக்கெண்ணும் நிலையத்துக்கு கொண்டு செல்கையில் நடைபெறலாம். இதைத் தடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

அதற்குப் பதிலளித்த தேர்தல் ஆணையாளர், இப்படி ஒரு தடவைதான் நடந்துள்ளது. அது 1981ல் நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட சபைத் தேர்தலில் மாத்திரமே என்று தவிசாளர் காமினி ஜயவிக்ரம பெரேராவைப் பார்த்து தெரிவித்துள்ளார்.

# சுவிஸ்வங்கியில் கணக்கு வைத்துள்ள நபர்களை அம்பலப்படுத்துங்கள்

## அரசைக் கேட்கிறது ஜே.வி.பி.



(கொழும்பு)

சுவிட்ஸர்லாந்து வங்கிகளில் கணக்கு வைத்திருபபோர் குறித்த தகவல்கள் அம்பலப்படுத்தப்பட வேண்டுமென ஜே.வி.பி கோரிக்கை விடுத்துள்ளது.

சுவிட்ஸர்லாந்து வங்கிகளில் மில்லியன் கணக்கான பணத்தை வைப்பிலிட்டவர்கள் குறித்த தரவுகளை முடிந்தால் வெளியிடுமாறு, ஜே.வி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த அராங்கத்திற்கு சவால் விடுத்துள்ளார்.

கொழும்பு பொது நூலகத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

2002 ஆம் ஆண்டில் சுவிஸ் வங்கிகளில் 22.9 மில்லியன் சுவிஸ் பிராங்குகளை இலங்கையர்கள் வைப்புச் செய்திருந்ததாகவும், 2011 ஆம் ஆண்டில் 85 மில்லியன் சுவிஸ் பிராங்குகள் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அநேகமானவை சேமிப்புக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹெட்ஜின் கொடுக்கல் வாங்கல்களினால் பல மில்லியன் பொதுமக்கள் பணம் விரயமாகியுள்ளது.

இவ்வாறான கொடுக்கல் வாங்கல்களின் மூலம் ஈட்டப்பட்ட பணம் சுவிஸ் வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டனவா என்பது தொடர்பில் சந்தேகம் நிலவி வருகிறது.

அண்மைக்காலமாக நாட்டில் செய்து கொள்ளப்பட்ட பொருளாதார உடன்படிக்கைகளைக் கவனிக்கும்போது முறைகேடுகள் இடம்பெற்றிருக்கக் கூடும் என்ற சந்தேகம் எழுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## உயர்தரப் பரீட்சையில் ஆள் மாறாட்டம்

நடைபெற்று வரும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் பரீட்சார்த்திக்குப் பதிலாக மற்றொருவர் பரீட்சைக்குத் தோற்றி ஆள் மாறாட்டம் செய்த சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

ஊரகஸ்மன்ஹந்திய - யடடகல மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை மத்திய நிலையத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த ஆள்மாறாட்டம் குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணை நடாத்தினர்.

வலல்பொல - தொம்பே பொல - எட்டியாந் தோட்டை பிரதேசத்தில் வசிக்கும் ஒருவரை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை ஊரகஸ்மன்ஹந்திய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கடலோர காவல்படை தளபதிகள் புதுடில்லியில் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

இந்திய - இலங்கை கடலோரக் காவல்படைகளுக்கு இடையிலான நான்கு நாள் பேச்சுக்கள் நேற்றுமுன்தினம் புதுடில்லியில் ஆரம்பமாகியுள்ளன.

இந்தப் பேச்சுக்களை நடத்துவதற்காக இலங்கைக் கடலோரக் காவல் படையின் தளபதி ரியர் அட்மிரல் ஏ.ஏ.ஆர்.ஏ.டயஸ் தலைமையிலான குழுவொன்று புதுடில்லி சென்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை புதுடில்லி சென்ற இந்தக் குழுவினர் நாளை வரை அங்கு தங்கியிருப்பர்.

இந்திய கடலோரக் காவல்படைத் தளபதி வைஸ் அட்மிரல் முரளிதரன் உள்ளிட்ட அதிகாரிகளுடன் இவர்கள் பேச்சு நடத்தி வருகின்றனர்.

தமிழ்நாட்டு மீனவர்கள் மீதான தாக்குதல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் அதிகரித்துள்ள நிலையில், இருதரப்பு கடல்சார் விவகாரங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளன.

இரண்டு கடலோரக் காவல்படைகளுக்கும் இடையில் நடவடிக்கை மட்ட ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்திக் கொள்வது குறித்து இந்தச் சந்திப்பில் முககிய கவனம் செலுத்தப்படும் என்று இந்திய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# ஊடகங்களுக்கு தகவல் வழங்கிய பொலிஸார் குறித்து விசாரணை

(கொழும்பு)

கொழும்பு நூதனசாலை திருட்டுத் தொடர்பான சந்தேக நபர்கள் மற்றும் இது தொடர்பாக நடத்தப்படும் விசாரணை குறித்து அனுமதியளிக்கப்படாத தகவல்களை ஊடகங்களுக்கு வழங்கிய பொலிஸ் அதிகாரிகள் குறித்து பொலிஸ் திணைக்களம் விசாரணையை ஆரம்பித்துள்ளது.

இத் திருட்டு தொடர்பான சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டவுடன் இவ்விசாரணையில் பங்குபற்றிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலர், பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தகவல்களை வெளியிடுவதற்கு முன்னரே ஊடகங்களுக்குத் தகவல் வழங்கியமையால் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் இத்தகவல்கள் வெளிவந்தமையானது பிரதான சந்தேக நபர் நாட்டைவிட்டு தப்பியோடுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தியதாக பொலிஸார் கூறுகின்றனர்.

ஊடகங்களுக்கு தகவல வழங்குவதை தவிர்த்துககொள்ளுமாறு அனைதது பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் பொலிஸ் தலைமையகம் ஏற்கெனவே அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

பொலிஸ் பேச்சாளரிடமிருந்து மாத்திரமே ஊடகங்கள் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என அந்த அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நூதனசாலை திருட்டுத் தொடர்பான பிரதேச சந்தேக நபரான லான்ஸிகே பிரியந்த மெண்டிஸைக் கைது செய்வதற்கு ஐந்து குழுக்களை கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவு ஈடுபடுத்தியுள்ளது.

# நுரைச்சோலை மின் நிலையம் போன்றதே அரசாங்கமும்

## என்கிறது ஐ.தே.க.



(கொழும்பு)

அரசாங்கம் நுரைச்சோலை மின் நிலையத்தைப் போன்றது என ஐக்கியதேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

நுரைச்சோலை அனல் மின்நிலையம் தரம் குறைந்த உதிரிப்பாகங்களைக்கொண்டு அமைக்கப்பட்டதனைப் போன்றே இந்த அரசாங்கமும் அமைக்கப்பட்டுள்ளதாக ஐக்கியதேசியக் கட்சியின் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கத்திலும் தரம் குறைந்த அமைச்சர்களே அங்கம் வகித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நுரைச்சோலை அனல் மின் நிலையம் ஒரு நாள் இயங்கினால் ஒருமாதத்திற்கு மூடப்பட்டிருக்கும் தற்போது நாட்டில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. மின் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அளித்தவாக்குறுதிகளை அரசாங்கம் மறந்து விட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சந்திரிகாவின் மூளையைச் சோதிக்க வேண்டும் என்கிறார் ஞானசார தேரர்


முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அங்கொடை அல்லது முல்லேரியா போய் மூளையைப் பரிசோதித்துப் பார்க்கவேண்டும் என்று வண. கலபட அத்த ஞானசார தேரர் கூறியுள்ளார்.

சமீபத்தில், முன்னாள் ஜனாதிபதி சிங்கள பௌத் தர்களை இந்நாட்டின் உயர் இனமாக ஆக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது பயங்கரமானது என்று கூறிய கருததுக்கு எதிராகவே தேரர் இவ்வாறு ஆவேசப்பட்டுள்ளார்.

உலக மக்களை நாட்டினர், இனக்குழு என்று இரண்டாகப் பிரிக்கலாம். எந்த நாட்டுக்கும் அந்த நாட்டின் பண்பாட்டு நாகரிகத்தைக் கட்டியெழுப்பியவர்களே உரிமையானவர்கள். இந்த நாடு சிங்கள பௌத்தர்களால் கட்டியெழுப்பப்பட்டது என்று அவர் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய முடிக்குரிய குடியேற்ற நாடாக ஆகும் வரை பௌத்தர்களின் நாடாகவே இருந்தது. இப்போது சிங்கள இனம் பற்றிக் கதைப்பவர்கள் இனவாதிகள் எனப்படுகின்றனர். ஹக்கிமோ, சம்பந்தனோ அதையே கதைத்தால அதை இனவாதம் என்று கூறுவதில்லை எனத் தேரர் தெரிவித்துள்ளார்.

# ஜெயபுரம் - பாலையடி சித்தி விநாயகர் ஆலய உற்சவ சிறப்பு மலர் - 2012



இடம்பெயர்ந்த மக்களது துன்ப துயரங்களைத் தீர்த்த கோயிலாக இலங்கை வடபால் வன்னி நிலப்பரப்பில் பூநகரிப் பிரதேசத்தின் ஜெயபுரம் பகுதியில் பண்டிவெட்டி குளக்கரையில் பாலைமர நிழலில் அமைந்திருக்கும் பாலையடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயமானது ஆலமரக் கிளைகள் போல் வளரப் பிரார்த்திக்கின்றோம்.


**தர்ஷிகா போட்டோ அன் வீடியோ**
உரிமையாளர்: சி.மகேந்திரன்
ஜெயபுரம் நாச்சிக்குடா
(C/1946)

**அருவி எரிபொருள் உதிரிகள் வாணிபம்**
உரிமையாளர்: இ.கண்ணன்
ஜெயபுரம் .
(C/1945)

**புகழவன் பல்பொருள் வாணிபம்**
உரிமையாளர்: செ.புலேந்திரராசா
ஜெயபுரம் .
(C/1931)

**பிரசாந் போட்டோ**
உரிமையாளர்: அருள்பிரசாந்
பிரதான வீதி, ஜெயபுரம்.
(C/1932)

**பானுசன் சவுன் ஒளி, ஒலி**
உரிமையாளர்: யொ.வெள்ளை
பாலையடி, ஜெயபுரம்.
(C/1933)

**சாந்தன் ரயர் வேக்ஸ் செப்**
பிரதான வீதி, ஜெயபுரம்.
உரிமையாளர்: மா.சாந்தன்
(C/1934)

**பிரபா போட்டோ**
உரிமையாளர்: பா.சுதர்சன்
பிரதான வீதி, ஜெயபுரம்.
(C/1935)

**நேசன் டிஜிற்றல் அன் போட்டோ வீடியோ**
உரிமையாளர்: எஸ்.நேசன்
ஜெயபுரம் , வலைப்பாடு.
(C/1936)

**தரணிகன் பல்பொருள் வாணிபம்**
ஜெயபுரம்.
உரிமையாளர்: து.சுரேஸ்கண்ணா
(C/1937)

**தர்சன் வெற்றிலை வாணிபம்**
சந்தை உட்புறம், ஜெயபுரம்.
உரிமையாளர்: கு.கிருபா
(C/1940)

**வினிதா தையலகம்**
உரிமையாளர்: ஆ.தங்கராசா
ஜெயபுரம்.
(C/1938)

**டிலான் நகைமாடம் அன் புடவையகம்**
ஜெயபுரம்.
உரிமையாளர்: சு.முத்துலிங்கம்
(C/1939)

**தனு தையலகம்**
பிரதான வீதி, ஜெயபுரம்.
உரிமையாளர்: இ.சதீஸ்
(C/1941)

**நடரர்சா தேநீரகம்**
உரிமையாளர்: பொ.நடராசா
ஜெயபுரம்.
(C/1942)

**நிலானி பல்பொருள் வாணிபம்**
உரிமையாளர்: சு.சந்திரபோஸ்
ஜெயபுரம்.
(C/1943)

**ஜீவா மொபைல் அன் எலக்ரோனிக்**
ஜெயபுரம்.
(C/1944)



இலங்கையில் நடைபெறவுள்ள ருவென்ரி -20 உலகக்கிண்ணப் போட்டிக்காக கண் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள விக்கெட் மாதிரியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது முதலாவது கையொப்பமிடுவதைக் காணலாம்.

# ருவென்ரி - 20 உலக கிண்ணத்தை இலங்கை வெல்ல வாய்ப்பு



(கொழும்பு)

ருவென்ரி - 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கு நாங்கள் சிறப்பாகத் தயாராகி இருக்கிறோம். உள்ளூரில் போட்டிகள் இடம்பெறவுள்ளதால் கிண்ணம் வெல்லக் கூடிய அதிக சாத்தியம் எமக்கு உள்ளது என இலங்கை அணிக் கப்டன் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்தார். உலக கிண்ணப் போட்டிகள் நெருங்கும் நேரத்தில் வீரர்களின் காயம் தான் கவலை அளிக்கிறது. உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்னர் எல்லாம் சரியாகி விடும் என்று நினைக்கிறோம். உலக கிண்ணப் போட்டியில் சிறப்பாக செயற்பட முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கவும் ருவென்ரி -20 உலகக் கிண்ணத்தை வெல்வோம் என நம்பிக்கை தெரிவித்துள்ளார். இலங்கை பிரிமியர் லீக் போட்டி முதல்முறையாக நடக்கிறது. உள்ளூர் வீரர்கள் ருவென்ரி - 20 ஓவர் லீக் போட்டிக்கு ஏற்ப தங்களை அனுசரித்துக் கொள்வார்கள். 20 ஓவர் போட்டியில் எப்படி ஆட வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் அதனைக் கற்று கொண்டு வருங்காலத்தில் சிறப்பாகச் செயற்படுவார்கள். இது இலங்கை அணிக்கு நல்ல விடயமாகும்.

இலங்கை பிரிமியர் லீக் போட்டியில் நான் எனது திறமைக்குத் தக்கபடி விளையாடவில்லை. ஆனால் 20 ஓவர் உலக கோப்பை போட்டியில் என்னால் சிறப்பாக செயற்பட முடியும் என்று நம்புகிறேன் எனத் தெரிவித்தார்.

# டோனியுடன் மோதல் இல்லை


(புதுடில்லி)

எனக்கு கப்டன் டோனியுடன் எந்தவித கருத்து வேறுபாடும் கிடையாது. இது குறித்து நான் எதுவும் பேச விரும்பவில்லை என லக்ஸ்மன் தெரிவித்தார்.

முதல் டெஸ்ட் போட்டியை சனிக்கிழமை நேரில் சென்று பார்க்க விரும்பினேன். ஆனால் மழை அதிகமாகப் பெய்ததால் எனது அந்த முடிவைக் கைவிட்டேன்.

4ஆவது நாள் ஆட்டத்தையும் பார்க்க செல்ல முடிவு செய்திருந்தேன். எனது இரண்டு குழந்தைகளும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டதால் செல்லவில்லை.

முழுப் போட்டியையும் நான் வீட்டில் அமர்ந்து தொலைக்காட்சியில் பார்த்தேன். எமது வீரர்கள் சிறப்பாக விளையாடி வெற்றி கண்டதை பார்க்க நன்றாக இருந்தது. நியூசிலாந்து டெஸ்ட் தொடரை வெல்ல எனது வாழ்த்துக்கள் எனத் தெரிவித்தார்.



# சச்சினுடன் ஒப்பிடாதீர்கள்

சச்சினுடன் என்னை ஒப்பிட வேண்டாம். அவரது சாதனைகளை யாராலும் முறியடிக்க முடியாது என விராட் ஹோலி தெரிவித்தார். சிலர் சச்சினுடன் என்னை ஒப்பிடுவது எனக்கு கிடைத்த ஆசீர்வாதமாக நினைக்கிறேன்.

ஆனால், சிறப்பாக விளையாடுவதில் மட்டுமே கவனம் செலுத்தி வருகிறேன். இது போன்ற ஒப்பீடுகளை ஒரு பொருட்டாக நினைப்பதில்லை. உண்மையைச் சொல்வதென்றால், சச்சினை நான் ஆராதிக்கிறேன். அவர்தான் எனது ஹீரோ. அப்படி இருக்கும்போது இந்த ஒப்பீடு தேவையே இல்லை. அவரது சாதனையை முறியடிப்பது பற்றி எந்த ஒரு கிரிக்கெட் வீரராலும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. அப்படிப்பட்ட மகத்தான சாதனைகளை அவர் படைத்துள்ளார்.அவற்றை முறியடிப்பது பற்றி நினைத்தால் தேவையற்ற பதற்றம்தான் மிஞ்சும், நெருக்கடி அதிகரிக்கும் என்பதை நன்கு உணர்ந்துள்ளேன்.

விரைவில் டோனியின் இடத்தைப் பிடிப்பேன் என்பதெல்லாம் சிலரின் அதீத கற்பனை. கப்டனாக இந்திய அணியை டோனி மிகச் சிறப்பாக வழி நடத்தி வருகிறார். நான் கற்க வேண்டியது இன்னும் நிறைய இருக்கிறது. உலகக் கிண்ண ருவென்ரி - 20 போட்டிக்கான அணியில் யுவராஜை சேர்த்தது சரியான முடிவு. சிறு வயதில் இருந்தே, களத்தில் ஆக்ரோஷமாகவே செயற்பட்டு வந்துள்ளேன். பல முறை கிரிக்கெட் மட்டையை உடைத்திருக்கிறேன். ஆனால், இப்போது என்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள முயற்சித்து வருகிறேன் எனத் தெரிவித்தார்.

# அணித் தெரிவில் முறைகேடு

(கொழும்பு)

உலக கிண்ண கனிஷ்ட பட்மின்ரன் போட்டிகளுக்கு இலங்கை அணியைத் தெரிவு செய்தபோது, முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் போட்டிக்காக தெரிவான போட்டியாளர்களிடம் இருந்து பணம் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டமையே இதற்கான காரணம் எனத் தெரிய வந்துள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஜப்பானில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கனிஷ்ட போட்டிகளில் கலந்து கொள்ளும் இலங்கை அணியினை தெரிவு செய்யும் நடவடிக்கைகள் பட்மின்ரன் சங்க தலைமையகத்தில் தற்போது இடம்பெறுகின்றன.

இந்த நிகழ்வில் செய்தி சேகரிப்பதற்காக செய்தியாளர்கள் அங்கு சென்றிருந்த போது, அங்கு சமுகம் அளித்திருந்த பெற்றோர்கள், ஒவ்வொரு விளையாட்டு வீரரிடமிருந்தும் 50 ஆயிரம் ரூபா பணம் கோரப்பட்டதாக முறையிட்டுள்ளனர்.

இதேவேளை, பாடசாலை விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் ரோகன கருணாரட்ண ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோது, பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ளும் எந்தவொரு போட்டியிலும், நிதி அறவிடுவதற்கான அதிகாரம் எந்த விளையாட்டுத் தரப்பினருக்கும் கிடையாது எனத் தெரிவித்தார்.

# பத்மபூஷணுக்குப் பரிந்துரை

(மும்பை)

முன்னாள் நட்சத்திர வீரர் ராகுல் ராவிட்டுக்கு பத்மபூஷண் விருதும், தொடக்க வீரர் கௌதம் கம்பீருக்கு பத்மஸ்ரீ விருதும் வழங்க, இந்திய கிரிக்கெட் சபை பரிந்துரை செய்துள்ளது.

சர்வதேச கிரிக்கெட்டில் 16 ஆண்டுகள் சிறப்பாக விளையாடி தனி முத்திரை பதித்த ராவிட், கடந்த மார்ச் மாதம் ஓய்வு பெற்றது குறிப்பிடத்தக்கது.

இதுவரை 9 கிரிக்கெட் வீரர்கள் பத்மபூஷண் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

# நடுவரின் உயிரை பலியெடுத்த ஈட்டி எறிதல் போட்டி

ஜேர்மனியில் தடகள விளையாட்டுப் போட்டி ஒன்றில் நடுவராகப் பணியாற்றிக் கொண்டிருந்த ஒருவர், ஈட்டி எறிதல் போட்டியில் எறியப்பட்ட ஈட்டியால் பலியாகியுள்ளார்.

நாட்டின் மேற்குப் பகுதியில் உள்ள டுசல்டர்.:.ப் நகரில் இளைஞர்களுக்காக இடம்பெற்ற ஒரு விளையாட்டுப் போட்டியின் போதே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

அந்தப் போட்டியில் 15 வயது இளைஞர் எறிந்த ஈட்டி,தடகளப் போட்டியில் நடுவராக பணியாற்றிக் கொண்டிருந்த 74 வயதானவரின் தொண்டையில் குத்தியதில் அவர் பலியானார். போட்டியில் ஈட்டியை எறிந்த சிறுவனை உளவியல் ரீதியாக தேற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறன.

இது ஒரு விபத்து போலவே தோன்றுகிறது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தடகளப் போட்டிகளில் ஈட்டி எறிதல், சங்கிலி குண்டு எறிதல் போன்ற போட்டிகளில் நடுவர்களுக்கு எப்போதாவது காயம் ஏற்படுவது உண்டு என்றாலும், மரணம் சம்பவிப்பது மிக மிக அரிதானது என்று செய்தியாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

# அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் 2ஆவது சுற்றில் முன்னணி வீரர்கள்

(நியூயோர்க்)

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் முன்னணி வீரர்களான பெடரர், அன்டி முர்ரே மற்றும் மரிய ஷரபோவா உட்பட்ட வீரர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகின்றது.

இதில் உலகின் முதல் நிலை வீரரான பெடரர் அமெரிக்காவைச் சேர்ந்த டொனால்ட்யங்கை 6-3, 6-2, 6-4 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

உலகின் 3ஆம் நிலை வீரரான அன்டி முர்ரே (இங்கிலாந்து) முதல் சுற்றில் 6-2, 6-4, 6-1 என்ற நேர் செட் கணக்கில் அலெக்சை (ரஷ்யா) தோற்கடித்தார். மற்றய ஆட்டங்களில் 23ஆம் நிலை வீரரான மார்டி பிஷ் (அமெரிக்கா),17ஆம் நிலை வீரர் நிசிகோரி(ஜப்பான்) ஆகியோர் வெற்றிபெற்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்கள். உலகின் 3ஆம் நிலை வீராங்கனையும், கவர்ச்சிப் புயலுமான மரியாஷரபோவா (ரஷ்யா) முதல் சுற்றில் ஹங்கேரியைச் சேர்ந்த மெலிண்டாவை எதிர்கொண்டார். இதில் ஷரபோவா 6-2, 6-2 என்ற நேர்செட் கணக்கில் எளிதில் வென்றார்.

நடப்பு சம்பியனும், 7ஆம் நிலை வீராங்கனையுமான சமந்தா ஸ்டோசர் (அவுஸ்ரேலியா), குரோஷியாவின் பெட்ரா மாட்டிக்கை சந்தித்தார்.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய சமந்தா ஸ்டோசர் 6-1, 6-1 என்ற நேர்செட்டில் எளிதில் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.



# லக்ஸ்மனுக்கு பாராட்டு விழா

கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற லக்ஸ்மனுக்கு பாராட்டு விழா நடத்த இந்திய கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது. இப்பாராட்டு விழா எதிர்வரும் 10ஆம் திகதி சென்னையில் பாராட்டு விழா நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. லக்ஸ்மனோடு ஏற்கனவே ஓய்வு பெற்ற முன்னாள் கப்டன்கள் கங்குலி, கும்ளே, ராகுல் ராவிட் ஆகியோரும் இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

37 வயதான லக்ஸ்மன் 134 டெஸ்டில் விளையாடி 8781 ஓட்டங்கள் எடுத்து உள்ளார். சராசரி 45.97 ஆகும். 17 சதமும், 56 அரைச் சதங்களும் உள்ளடங்கும். 281 ஓட்டங்கள் குவித்தது டெஸ்டில் அதிகபட்சம் ஆகும். 80 ஒருநாள் போட்டியில் 2338 ஓட்டங்கள் எடுத்துள்ளார். எந்த ஒரு உலக கோப்பையிலும் லக்ஸ்மன் ஆடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மயிலங்காடு ஞானமுருகன் சம்பியன்



படம் : கனக்ஸ்

(நெல்லியடி)

மாலுச்சந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்திய கால்பந்துப் போட்டித் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை மயிலங்காடு ஞானமுருகன் அணி சுவீகரித்துக் கொண்டது.

மாலுச்சந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வந்த கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த 26ஆம் திகதி மின்னொளியில் இரவு 9.00 மணிக்கு நடைபெற்றது.

சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட இரசிகர்கள் மத்தியில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஊரெழு றோயல் அணியும், மயிலங்காடு ஞானமுருகன் அணியும் மோதின.

முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் மிகச் சிறப்பாக பந்துப் பரிமாற்றத்தைப் பெற்றுக்கொண்டாலும் ஞானமுருகன் அணியினரே கூடிய நேரம் பந்தைக்கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தனர். இருந்தபோதும் அவர்களால் கோல் போடும் சந்தர்ப்பங்கள் இழக்க முற்பாதியாட்டத்தில் இரு அணிகளும் கோல் எதனையும் போடவில்லை.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கியபோதுமுதல் ஐந்து நிமிடங்கள் ஞானமுருகன் அணியினர் பந்தை வைத்திருந்தாலும், மிகுதி 25 நிமிடங்களும் மிக வேகமாகவும், துடுப்பாகவும் றோயல் அணியினர் விளையாடினர். இருந்தபோதும் தமக்குக் கிடைத்த கோல் போடக்கூடிய இருசந்தர்ப்பங்களையும் றோயல் அணியினர் நழுவவிட்டனர். இவர்களின் உச்ச நிலை விளையாட்டில் பார்வையாளர்கள்,விருந்தினர்கள் இருக்கையின் நுனிக்கே வந்தனர். இரு அணிகளாலும் ஆட்டம் முடியும் வரை கோல் போட முடியவில்லை. றோயல் அணியின் தடுப்புச் சுவராக இருந்த தர்மகுலேந்திரன் (வெள்ளை) மிகச் சிறப்பாகப் பந்தைத் தடுத்து அனுப்பிக் கொண்டிருந்தார். இதனால் தண்ட உதை மூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது.

இதில் 4-2 என்ற கோல் வித்தியாசத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணி சம்பியன் பட்டத்தையும், இரண்டாமிடத்தை ஊரெழு றோயல் அணியும், மூன்றாமிடத்தை நடப்பாண்டுச் சம்பியனான இளவாலை யங்கென்றிஸ் அணியும் பெற்றுக் கொண்டன.

தங்கப் பாதணியை இச்சுற்றுப் போட்டியில் 16 கோல்களைப் போட்ட யங்கென்றிஸ் அணியைச்சேர்ந்த ஞானமுருகன் பெற்றுக் கொண்டார். இவர் கடந்த ஆண்டு நடைபெற்ற போட்டித் தொடரில் 21 கோல்களைப் போட்டமை குறிப்பிடத்தக்கது.சிறந்த கோல்காப்பாளராக ஞானமுருகன் அணியைச் சேர்ந்த சயிந்தன், தொடர் ஆட்டநாயகனாக றோயல் அணியைச் சேர்ந்த சயகோபன் இறுதிப் போட்டிக்கான ஆட்டநாயகனாக ஞானமுருகன் அணியைச் சேர்ந்த சேகர், துடுப்பான வீரராக திக்கம் இளைஞர் அணியைச் சேர்ந்த திலீபன், அனுபவ வீரருக்கான விருதை றோயல் அணியைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் (வெள்ளை), இளம் வீரருக்கான விருதை சிவானந்தா அணியைச் சேர்ந்த ஜெயராஜ் ஆகியோரும்,விதிகளுக்குக் கட்டுப்பட்டு விளையாடும் கௌரவ அணியாக சென்லூட்ஸ் அணியும் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன.

இவர்களுக்கான பரிசில்களையும், வெற்றிக்கேடயங் களையும் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ஸ்ரீனிவாசன் வழங்கிக் கௌரவித்தார். இதில் மைக்கல் விளையாட்டுக்கழக வீராங்கனைகளும், பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (12, 93,109)

## விளையாட்டுச் செய்திகள்

## கரவெட்டி கழகங்களுக்கான முக்கிய கலந்துரையாடல்

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேசசெயலகத்திற்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கான முக்கிய கலந்துரையாடல் கரவெட்டிப் பிரதேசசெயலக மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது. 21 வயதுப்பிரிவிற்கான ஆண்கள் கால்பந்தாட்டப் போட்டிகள் தொடர்பாக கலந்துரையாடல் நடாத்துவதற்குப்பதிவுசெய்யப்பட்ட அனைத்து கழகங்களையும் பங்குகொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் அனுராகாந்தன் தெரிவித்துள்ளார். (92)

## பயிற்சி முகாம் நிறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான மேசைப்பந்தாட்ட பயிற்சி முகாம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் கடந்த நான்கு நாட்கள் இடம் பெற்றது.

யாழ்.மாவட்ட பாடசாலைகள் மேசைப் பந்தாட்ட சங்கமும் இலங்கை பாட-சாலைகள் மேசைப்பந்தாட்ட சங்கமும் இணைந்து இந்த பயிற்சி முகாமை ஏற்பாடு செய்துள்ளன.

தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெற்ற இந்தப் பயிற்சி முகாமில் 12, 15, 17, 19, 21 வயது பிரிவுகளைச்சேர்ந்த வீர, வீராங்கனைகள் எழுபத்தைந்து பேருக்கு மேல் கலந்து கொண்டனர்.

இவர்களுக்கான பயிற்சிகளை இலங்கை மேசைப்பந்தாட்ட அணியின் தலைவரும் மேசைப்பந்தாட்டத்தில்இலங்கையில் முதலாம் இடத்தில் இருப்பவருமான றொசான் சிறிசேன வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

செயல் முறை விளங்கங்களுடன் நடைபெற்ற இப்பயிற்சி முகாம் மேசைப் பந்தாட்ட வீர, வீராங்கனை களுக்கு பயனுள்ளதாக அமைந்தாக ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

## அரையிறுதியில் மருதங்கேணி, பருத்தித்துறை

(யாழ்ப்பாணம்)

அரச அதிபர் வெற்றிக் கிண்ண கால்பந்து தொடரின் அரையிறுதிப்போட்டிக்கு மருதங்கேணிமற்றும் பருத்தித்துறை பிரதேச செயலக அணிகள் தகுதிபெற்றுள்ளன. யாழ். மாவட்ட செயலக நலன்புரிச் சங்கத்தினால் பிரதேச செயலகங்களுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் அரசஅதிபர் வெற்றிக்கிண்ணத்திற்கான கால்பந்தாட்ட சுற்றுப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை புங்கன்குளம் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றது.

முதலாவது தெரிவுப்போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் மருதங்கேணி பிரதேசசெயலக அணியும் மோதின. இப்போட்டியில் மருதங்கேணி பிரதேச செயலக அணி 4 – 0 என்ற கோல்கள் அடிப்பண்டயில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் யாழ். மாவட்டச்செயலக அணியும் சங்கானைப் பிரதேச செயலக அணியும் மோதின. இப்போட்டியில் யாழ். மாவட்டச் செயலக அணி 2 – 0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாவது போட்டியில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியும் உடுவில் பிரதேசசெயலக அணியும் மோதின. இப்போட்டியில் பருத்தித்துறை பிரதேசசெயலக அணி 4 – 1 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்றது. நான்காவது போட்டியில் சாவகச்சேரி பிரதேச செயலக அணியும் காரைநகர் பிரதேசசெயலக அணியும் மோதின. இப்போட்டியில் சாவகச்சேரி பிரதேச செயலக அணி 2 – 0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற முதலாவது காலிறுதிப் போட்டியில் மருதங்கேணி பிரதேச செயலக அணியும் யாழ். மாவட்டச் செயலக அணியும் பலப்பரீட்சை நடத்தின. இப்போட்டியில் மருதங்கேணி பிரதேச செயலக அணி 4 – 3 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

இரண்டாவதாக நடைபெற்ற காலிறுதிப்போட்டியில் பருத்தித்துறை பிரதேசசெயலக அணியும் சாவகச்சேரி பிரதேச செயலக அணியும் பலப்பரீட்சை நடாத்தின. இப்போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி 6 – 2 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதியில் மருதங்கேணி பிரதேச செயலக அணியோடு மோதவுள்ளது. (93)

## ஆதிகேசவன், கோப்பாய் ஸ்ரார், அரசடி காலிறுதிப் போட்டிக்குத் தகுதி

(யாழ்ப்பாணம்)

முருகமூர்த்தி வெற்றிமாதா விளையாட்டுக்கழகத் தி-னால் நடத்தப்பட்டு வரும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு ஆதிகேசவன், கோப்பாய் ஸ்ரார், அரசடி அணிகள் தகுதிபெற்றுள்ளன.

முருகமூர்த்தி வெற்றிமாதா விளையாட்டுக்கழக விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் இம்மென்பந்து கிரிக்கெட் தொடர் அணிக்கு ஏழு பேர் கொண்ட ஆறு ஓவர் ஆட்டமாகும்.

விலகல் முறையில் இடம்பெற்று வரும் இப்போட்டித் தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இதில் நிலா ஸ்ரார் அணியும் ஆதிகேசவன் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய நிலா ஸ்ரார் அணி 5.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தூயவன் 10 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சியாம், விமல் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 30 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஆதிகேசவன் அணி 1.5 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது. இதில் அமலன் 25 ஓட்டங்களைப் பெற்றார். இதன் மூலம் ஆதிகேசவன் அணி காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் வெற்றிமாதா அணியும், கோப்பாய் ஸ்ரார் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய வெற்றிமாதா அணி ஆறு ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கௌத் 19, ராகுல் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிசாந், தாஸ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 45 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கோப்பாய் ஸ்ரார் அணி மூன்று ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் திலீபன் 25, நிசாந் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் தர்சன் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். இவ்வெற்றியின் மூலம் கோப்பாய் ஸ்ரார் அணி காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

அடுத்து நடைபெற்ற போட்டியில் அரசடி அணியும் ஐக்கிய அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அரசடி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய ஐக்கியம் அணி நான்கு ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 24 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மதன் 10 ஓட்டங்களைப் பெற்றார். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் சுதன் மூன்று, கிருபா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 25 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அரசடி அணி 5.3 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

இதில் கிருபா 11 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தார். பந்து வீச்சில் சுரேஸ் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதன் மூலம் அரசடி அணி காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. (53)

**அ**ரசியலில் இருந்துகொண்டே சினிமாவுக்குப் பாடல் எழுதிய கண்ணதாசன் அவ்வப்போதைய அரசியல் சூழ்நிலை, தன் மனநிலை இரண்டையும் சினிமாப் பாடல்களில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

தி.மு.க. வில் இருந்து சம்பத்தோடு வெளியேறிய சூழலில் அண்ணாத்துரை பற்றி "அவனை நினைத்தே நானிருந் தேன். அவன் தன்னை நினைத்தே வாழ்ந்திருந்தான். இன்னும் அவனை மறக்கவில்லை. அவன் இத்தனை செய்தும் நான் வெறுக்கவில்லை. அண்ணன் காட்டிய வழியம்மா." - படித்தால் மட்டும் போதுமா.

# கண்ணதாசனின் அரசியல் வாழ்வு

- R.P. ராஜநாயஹம் -

"அண்ணன் என்னடா தம்பி என்னடா அவசரமான உலகத்திலே" கண்ணதாசனின் அண்ணா ஏ.எல்.எஸ் இவர் கேட்டு பணம் கொடுக்காததனால்.

தமிழ் தேசியக் கட்சி காங்கிரஸில் இணையும் சூழலில் காமராஜரை குறித்து "அந்த சிவகாமி மகனிடம் சேதி சொல்லடி. என்னை சேரும் நாள் பார்க்க சொல்லடி. வேறு எவரோடும் நான் பேச வார்த்தை ஏதடி" என்ற பாடல் - பட்டணத்தில் பூதம்.

அண்ணாத்துரை அமெரிக்காவில் புற்று நோய்க்கு வைத்தியம் பார்த்து விட்டு திரும்பி வந்த போது, "நலம் தானா? நலம் தானா? உடலும் உள்ளமும் நலம் தானா?"

இப்படி பல பாடல்கள் பற்றி பட்டிமன்ற பேச்சாளர்கள், பிரபலமான பேச்சாளர்கள் மட்டுமல்ல சாதாரண உரையாடல்களில் இப்படி பலரும் பல கண்ணதாசன் பாடல்கள் பற்றிப் பேசிக்கொள்வார்கள்.

நான் இங்கு குறிப்பிடப் போகும் பாடல் பற்றி யாருக்கும் தெரியாது. ஏனென்றால் இந்தப் பாடல் பற்றி யாருமே குறிப்பிட்டதில்லை.

"நீங்கள் அத்தனை பேரும் உத்தமர் தானா சொல்லுங்கள்" பாட்டின் சரண வரிகள்.


அப்போதெல்லாம் தி.மு.க. வுக்கு அடுத்த இடத்தில் ஸ்தாபன காங்கிரஸ் இருந்தது. கண்ணதாசன் இந்திரா காங்கிரஸ். என்றாலும் கண்ணதாசனின் இயல்பான மீறல் காமராஜரை தன் தலைவராக வரித்து இரண்டு காங்கிரஸ் இயக்கமும் இணைந்து அரசியல் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் உறுதி கொண்டிருந்தார். காமராஜர் மேல் அளவு கடந்த பற்று. தி.மு.க. வுக்கு எதிர்க்கட்சி ஸ்தாபன காங்கிரஸ். தி.மு.க. இறங்கினால் ஸ்தாபன காங்கிரஸ் ஆட்சி கட்டில் ஏறும் என்ற நிலை. (தீப்பொறி ஆறுமுகம் அப்போது ஸ்தாபன காங்கிரஸ் பேச்சாளர்!)

திடீரென்று எம்ஜியார் தி.மு.க.விலிருந்து விலகி அண்ணா தி.மு.க. ஆரம்பித்தவுடன் மக்கள் செல்வாக்கு அவருக்கு வந்து விட்டது.

நாஞ்சில் மனோகரன் தான் கண்ணதாசனின் அரசியல் எதிரி என்று கவிஞர் அறிவித்திருந்தார். திராவிட தலைவர்களில் நாஞ்சில் மனோகரனையும் மாதவனையும் கண்ணதாசனுக்குப் பிடிக்காது. மந்திரக்கோல் மைனர் சுகவாசியாய் எந்த தியாகமும் செய்யாதவர் என்று கண்ணதாசனுக்கு கோபம். மாதவன் தி.மு.க. வேட்பாளராய் கண்ணதாசன் நின்று தோற்ற தொகுதியை, அடுத்த பொதுத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளராய் நின்று கைப்பற்றியவர். அதற்கடுத்த தேர்தலில் மீண்டும் வென்று அண்ணா மந்திரி சபையில் மந்திரியானவர். மாதவனைப் பாராட்டி தி.மு.க. தொண்டர்கள் வீரவாள் கொடுத்தார்கள். உடனே கண்ணதாசன் தன் "கடிதம்" பத்திரிகையில் "தம்பிகள் கத்தி கொடுத்தார்கள். பாவம் கிண்ணத்தைக் கொடுக்க மறந்து விட்டார்கள்" என்று கிண்டல் செய்து எழுதினார்.

தி.மு.க.வை வெறுத்த கண்ணதாசனுக்கு தி.மு.க.வில் இரண்டு பேரின்மீது மட்டும் பாசம் கடைசி-வரை இருந்தது. ஒருவர் கருணாநிதி! இன்னொருவர் அன்பில் தர்மலிங்கம்! ஆமாம். கண்ணதாசனே இப்படிச் சொன்னார்.

கருணாநிதிக்கும் கண்ணதாசனுக்கும் ஒருவிதமான Love and Hate relationship! ஒரு வேளை பூர்வஜென்ம பந்தமோ என்னவோ! முதல் முறையாக 1940களில் எம்.ஜி.சக்கரபாணி கண்ணதாசனை அழைத்துப் போய் கருணாநிதியை அறிமுகப்படுத்திய



போது தனக்கு "காதலியைப் பார்த்த உணர்வு" ஏற்பட்டதாகவே கவிஞர் குறிப்பிட்டுள்ளார். கண்ணதாசன் இறந்த போது கருணாநிதி, "தென்றலாய் தீண்டியவனும் நீ! நெருப்பாய்ச் சுட்டவனும் நீ! தாக்குகின்ற கணை எத்தனை நீ தொடுத்தபோதும் அத்தனையும் தாங்கும் என் நெஞ்சே உன் அன்னை!" என்று இரங்கல் எழு-தினார்.

தாக்குதல் என்றால் சாதாரண தாக்குதல் அல்ல. வனவாசத்தில் எழுதியவை மட்டுமல்ல. மேடையிலும். கருணாநிதி "காமராஜரின் தாயார் கருவாடு விற்றவர்" என்று சொன்னதற்காக கண்ணதாசனின் பதிலடி "ஆமாம். என் தலைவனின் தாய் கருவாடு தான் விற்றார். கருவாடு மட்டும் தான் விற்றார்!"

கண்ணதாசன் பெத்தடின் ஊசி போதையில் அளவுக்கு மீறி மூழ்கிய போது கண்ணதாசனின் பிள்ளைகள் கருணாநிதியிடம் போய் அழுதார்கள். அப்போது கருணாநிதி கவிஞரிடம் கேட்ட வார்த்தைகள்: "எங்களையெல்லாம் அழ வைக்க வேண்டும் என்று தான் ஆசைப்படுகிறாயா?"

எம்ஜியாரைக் கடுமையாக எதிர்த்தவர் கண்ணதாசன். எம்ஜியாரும் அவர் கட்சியும் தமிழகத்தை ஆக்கிரமித்ததை அவலமாக நினைத்து தான்,

"அழகாக தோன்றும் ஒரு கருநாகம் கண்டேன்.

அநியாயம் செய்பவர்க்கும் மரியாதை கண்டேன்.

சதிகார கும்பல் ஒன்று சபையேறக் கண்டேன்"

தன் பதற்றத்தை கண்ணதாசன் "என் மகன்" படப்பாடலில் வெளிப்படுத்தினார்.

தொடர்ந்து எம்ஜியாரை கடுமையாக சாடினார். எம்ஜியார் முதல் முறை ஆட்சியமைத்தபோது மதுவிலக்கை கடுமையாக அமுல்படுத்தினார்.

கண்ணதாசன் பத்திரிகையில் ஒரு கேள்வி:

ஒன்றிற்கு மேற்பட்ட மதுப் பெர்மிட் வைத்திருப்பவர்கள் சரண்டர் செய்யவேண்டும் என்று எம்ஜியார் ஆணையிட்டிருக்கிறாரே?

கண்ணதாசன் பதில்:

"ஆண்டவனே வந்து கேட்டாலும் நான் சரண்டர் செய்யமாட்டேன். உங்கள் எம்ஜியாரிடம் இன்னொரு சட்டம் போட சொல்லுங்கள்" "ஒரு காதலிக்கு மேல் வைத்திருப்பவர்களை சரண்டர் செய்ய சொல்லுங்கள்"

கடைசியில் எம்ஜியார் கண்ணதாசனை தமிழக அரசின் ஆஸ்தான கவியாக நியமித்தார். உடனே கண்ணதாசன் சொன்னார்!

"எம்ஜியாருடன் நான் வாழ்நாள் முழுவதும் நடத்திய யுத்தத்தில் கடைசியாகத் தோற்று விட்டேன்"


கண்ணதாசனின் பாடல்களை காட்டிலும் அவரது அரசியல் வாழ்க்கை தான் ரொம்ப விஷேசமானது.

ஒரு முறை குமுதம் கேள்வி பதிலில்,

**கேள்வி** : எம்ஜியாரின் "நான் ஏன் பிறந்தேன்", கருணாநிதியின் "நெஞ்சுக்கு நீதி", கண்ணதாசனின் "வனவாசம்" ஆகிய சுயசரிதை நூல்களில் எந்த நூல் சிறந்தது?

**அரசு பதில்** : "வன வாசம்" தான். ஏனென்றால் அதில் "உண்மை" இருக்கிறது.

# திட்டி விடம்



**பா**ம்புகளில் எத்தனையோ வகைகள் இருக்கின்றன. விஷம் உள்ளவை, விஷமில்லாதவை என்று விலங்கியல் நிபுணர்கள் பிரித்திருந்தாலும், நமக்கு எந்தப் பாம்பைக் கண்டாலும் பயம்தான்.

எல்லா பாம்புகளுக்கும் பல்லில் தான் விஷம் இருக்கும் ஆனால், "திட்டி விடம்" என்ற பாம்புக்கு கண்ணிலேயே விஷமாம். அதன் பார்வை நம் மேலே பட்டாலே போதும்... விஷம் தாக்கிய துன்பம் உண்டாகுமாம்.

இந்தப் பாம்பு, முற்காலத்தில் பாலைவனங்களில் வாழ்ந்ததாக கவிஞர்கள் கூறுகின்றனர்.

மாசிலா கற்புடைய மங்கையரை, இந்தத் திட்டி விடப் பாம்புக்கு உவமையாகப் புலவர்கள் கூறியுள்ளனர்.

இந்தப் பாம்பைப் பற்றி கம்பரும் கூறி இருக்கிறார். சீதைக்கு தவறு இழைத்த இராவணனை நோக்கி, "திட்டியின் விடமன்ன கற்பியின் செல்வியை விட்டிலையே!" என்று கேட்கிறான் கும்பகர்ணன்.

இவ்வகைக் கொடிய பாம்பு இந்தக் காலத்தில் வாழ்வதாகத் தெரியவில்லை. உண்டா இல்லையா என்று விலங்கியல் நிபுணர்கள்தான் சொல்ல வேண்டும்!

**பு**த்தரின் சீடர்கள் ஓர் ஏழையை அழைத்து வந்து. உபதேசம் கேட்க உட்கார வைத்தார்கள். புத்தர் பேசியதை எல்லோரும் கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்கும்போது அந்த ஏழை மட்டும் கவனிக்காமல் நெளிந்து கொண்டிருந்தான்.

புத்தர் அதைக் கவனித்துவிட்டார். சீடனை அழைத்து அவனுடைய காதில் எதையோ சொன்னார்.

சீடன் அந்த ஏழையைத் தனியே அழைத்துச் சென்றான். சிறிதுநேரம் கழித்து ஏழையும், சீடனும் திரும்பி வந்தனர்.


அதற்குப் பின்பு அந்த ஏழை புத்தர் பேசியதை உன்னிப்பாகக் கவனித்துக் கேட்டான்.

என்ன நடந்தது? என்று எல்லாருக்கும் அறிந்து கொள்ள ஆவல்.

அந்த ஏழை உபதேசத்தைக் கேட்டுவிட்டுச் சென்ற பிறகு, சீடர்களிடம் புத்தர் சொன்னார்:

"பசியோடு இருக்கும் மனிதனுக்கு தேவை உணவு. அதை முதலில் கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் உபதேசம் எல்லாம். அந்த ஏழை மனிதன் பசி-யோடு இருந்தான். அவனுடைய பசியைப் போக்கினோம்"

# உபதேசம்!



# உதவிக் குறிப்புகள்

✤ வீட்டில் கூரை மின்விசிறிகள் சுற்ற ஆரம்பித்த உடனேயே "டக் டக்" என்று சத்தம் வந்தால் விசிறி சரியாகப் பொருத்தப்படவில்லை என்று அர்த்தம். சரியாகப் பொருத்தப்படாத மின்விசிறிகள் எளிதில் பாழாகும்.

✤ அயர்ன் பண்ணும்போது தண்ணீரைப் பயன்படுத்தினால், அதற்கு நல்ல குடிதண்ணீரைப் பாவிப்பது நல்லது. நீரில் உப்புத்தன்மை இருந்தால் சிறிது சிறிதாக துரு ஏறி அயர்ன் பொக்ஸை பதம் பார்த்துவிடும்.

✤ அழைப்பு மணியை உபயோகிக்கும்போது லேசாக அழுத்தினால் போதும். அழுத்தி நீண்ட நேரம் வைத்திருந்தால் மணி பாழாகிவிடும்.

✤ டிவி, ஃப்ரிட்ஜ், ரியூப்லைற் போன்ற மின்சார சாதனங்களின் சுவிட்சுகளை அணைத்தவுடனேயே உடனே போடாதீர்கள். ஃப்ரிட்ஜில் கொம்பிறசரும், ரிவியில் பிக்சர் ரியூபும், ரியூப் லைற்றில் போலய்டும் பாதிக்கப்பட்டு விரைவில் பழுதாகிவிடும்.

✤ அடிக்கடி உபயோகப்படுத்தும் எவர்சில்வர் தேநீர் வடிகட்டி அடைத்துக் கொண்டிருந்தால், அதனை சில நிமிடங்கள் நெருப்பில் காட்டியபிறகு கழுவிவிட்டால் அடைப்பு நீங்கி பளிச்சென்று இருக்கும்.

✤ அயர்ன் பொக்ஸில் துணிக்கறை படிந்துவிட்டால் நகைக்கடையில் பயன்படுத்தும் அஸிற்றை லேசாக அயர்ன் பொக்ஸில் தடவி, சுரண்டி எடுத்துவிட்டால் போதும்.

✤ இரும்பு அலுமாரி பளபளக்க பழைய துணியினால் தூசியைத் துடைத்துவிட்டு, சிறிதளவு பஞ்சு அல்லது ஸ்பொஞ்சை தேங்காய் எண்ணெயில் நனைத்து அலுமாரியைத் துடைக்கவும். ஒரு மணி நேரம் கழித்து மீண்டும் பஞ்சால் துடைக்க அலுமாரி பளபளக்கும்.

✤ கிரைண்டரில் பொருத்தப்பட்டுள்ள கல், தானிய வகைகளை நிரப்பி ஆட்டும்போது எளிதில் தேய்வதில்லை. சிலர் கிரைண்டரைக் கழட்டும்போது கல்லை வெளியே எடுக்காமல், தண்ணீர் ஊற்றி மெஷினை ஓடவிட்டுக் கழுவுவார்கள். இதனால் வெகு விரைவில் மெஷினிலுள்ள கல் தேய்ந்துவிடும்.

✤ நீண்ட நேரம் ஃப்ரிட்ஜின் கதவைத் திறந்தே வைக்கக்கூடாது. திறக்கும் முன்பே எதை எடுக்கப் போகிறோம் என்பதை முடிவு செய்து, உடனே திறந்து மூடுவது நலம்.

✤ குழந்தைகள் இருக்கும் வீடுகளில் ஃப்ரிட்ஜை லொக் செய்து விடுவது நல்லது. ஃப்ரிட்ஜை கண்டிப்பாக சமையலறையில் வைக்கக்கூடாது. சமையல் எரிவாயு கசிந்தால் ஃப்ரிட்ஜிலிருந்து வெளியேறும் வாயுவுடன் சேர்ந்து வேதிவினை புரிந்து நெருப்புப் பொறிகள் கிளம்பும்.



✤ ஃப்ரிட்ஜிலுள்ள ஃப்ரீஸரில் ஐஸ் கட்டிகள் சேர்ந்தால் அதை வெளியேற்ற டீஃப்ராஸ்ட் பட்டனை உபயோகிப்பதே சரியான வழி. அந்த பட்டன் வேலை செய்யவில்லை என்றால் உடனே சரிபார்க்க வேண்டுமே தவிர, கம்பு, கரண்டியை வைத்து குத்தினால், அதனுள் செல்லும் இணைப்புக் குழாய்கள் வெடித்துவிடும்.

# இகழும் கலை

**பாராட்டிப் பேசுவது ஒரு கலை என்றால், மறுதலையாக இகழ்தல் செய்வதும் ஒரு கலைதான். 'சபியன் லூயி' என்பவர் தொகுத்துள்ள, 'இரண்டாயிரம் இன்சல்ட்கள்' என்ற புத்தகத்தி லிருந்து இதோ சில:**



/ அவனுக்கு தன் அழகைப் பற்றி மிகுந்த கர்வம். எக்ஸ் - ரே எடுக்கப்பட்ட போது, நெகடிவை, "டச்" செய்யும்படி டாக்டரிடம் கூறினான்.

/ அவன் காதலுக்குப் போட்டியே கிடையாது - அவனை, அவனே நேசிப்பதால்.

/ அந்த விருந்தாளி வளவள என்று ஆயிரம் வார்த்தைகளைக் கொட்டிக் கொண்டிருக்கிறான், ஒரு வார்த்தையைத் தவிர. அது: போய் வருகிறேன்.

/ அவன் வீட்டை காலி செய்த போது வீட்டுக்காரர் கண்ணீர் விட்டார், ஆறு மாத வாடகை பாக்கி.

/ அவன் எல்லா விஷயத்திலும் தலைகீழ்தான். அவன் செய்யும் காரியங்கள், கூடா ஏடாமாகவோ, மாறு ஏறாகவோ தான் இருக்கும்.

/ அவன் தலையில் பத்து விநாடிகளுக்குக் கூட எதுவும் நிற்காது - தலைவலியைத் தவிர.

/ அந்த சினிமாவிற்கு வந்தவர்கள், "படம் மோசம்" என்று முணுமுணுக்கவில்லை, காரணம், அவர்களுக்கு தூக்கத்தில் பேசும் பழக்கம் இல்லை.

/ பணத்திற்கும், அவனுக்கும் ஒத்துக் கொள்வதில்லை, அவனுக்குப் பணம் கடனாகக் கொடுங்கள். அவனுடைய ஞாபக சக்தி சேதம் அடைந்து விடும்.

/ அப்பா அவனுக்கு சொத்து வைத்துவிட்டுப் போயிருப்பதால்தான் கல்யாணம் செய்து கொண்டான் என்பதை அவன் மறுக்கிறான். அப்பாவுக்குப் பதிலாக வேறு யார் வைத்து விட்டுப் போயிருந்தாலும் அவனுக்கு சம்மதமே.

/ அவன் காரியங்களை அரை, குறையாகச் செய்ய மாட்டான் காலும், அரைக்காலுமாகத் தான் செய்வான்.

/ "என் அழகே எனக்கு சொத்து" என்கிறாள். அவளுக்கு நிச்சயம் சொத்து வரி விதிக்க மாட்டார்கள்.



/ சிலருக்கு தினமும் வியாதி வராவிட்டால், உடம்பு சரியாக இருக்காது.


/ அவனை இரண்டாவது தடவை பார்த்தபோது தான் காதலித்தாள். முதலில் பார்த்தபோது அவன் பணக்காரன் என்று அவளுக்குத் தெரியாது.

/ அவனிடம் எல்லாத் தீர்வுகளுக்கும் பிரச்சினை இருக்கும்.

/ அவன் பொய் சொல்கிறானா என்பதை கண்டுபிடிக்க எளிய வழி - அவன் உதடு அசைகிறதா என்று பாருங்கள்.

/ அவள் அழகாகத்தான் பாடினாள். அதை நாம் ரசிக்க முடியாததற்கு இரண்டு காரணம்... ஒன்று நம் வலது காது, இன்னொன்று இடது காது.

# சைக்கிளும் தண்டனையும்



சுதந்திர தினம் மற்றும் விசேட நாட்களின்போது, சிறைக் கைதிகளுக்கான தண்டனையை குறைத்து, அவர்களை விடுவிக்கும் நடைமுறை, நம் நாட்டில் உள்ளது. பிரேசிலில், கைதிகளின் தண்டனையை குறைப்பதற்கு, ஒரு வினோதமான் நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது. சிறையில், பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட சைக்கிள்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்த சைக்கிள்கள், பற்றரியுடன் இணைக்கப்பட்டுள்ளன. சைக்கிளில் உள்ள பெடல், தொடர்ந்து வேகமாக மிதிக்கப்படும்போது, சக்கரம் சுழன்று, அதனுடன் இணைக்கப்பட்டுள்ள பற்றரி மூலம், மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்வாறு, மின்சாரமாக மாற்றுவதற்கு, தனியாக கன்வேர்ட்டரும் உள்ளது. இந்தச் சிறையில், நீண்ட நாட்களாக அடைக்கப்பட்டுள்ள கைதிகள், ஒவ்வொருநாளும், இங்கு வந்து, சைக்கிள் மிதிக்க வேண்டும். ஒரு நாளைக்கு, குறைந்தது எட்டு மணி நேரம், சைக்கிள் மிதித்தால், தண்டனை நாளில், ஒரு நாள் குறையும். இந்த வித்தியாசமான தண்டனை குறைப்பு நடைமுறை, பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தினாலும், சம்பந்தபட்ட கைதிகள், இதற்கு வரவேற்பு தெரிவித்துள்ளனர். சிறைச்சாலைக்குத் தேவையான மின்சாரமும் கிடைக்கிறது.

# உருகும் இரும்புத் தலைவர்...

– சு. வெங்கடேஸ்வரன் கட்டுரையிலிருந்து.

ரஷ்யாவில் ஜோசப் ஸ்டாலினுக்கு அடுத்தபடியாக, அசைக்க முடியாத தலைவராக உருவெடுத்தவர் விளாடிமிர் புடின். 1999ஆம் ஆண்டில் முதல்முறையாக பிரதமராகப் பதவியேற்றதிலிருந்து இப்போது வரை சுமார் 13 ஆண்டுகளுக்கு மேலாக பிரதமர், ஜனாதிபதி என பதவியை மாற்றி, அதிகாரத்தைத் தொர்டர்ந்து தன் கையில் வைத்துள்ளார்.

ரஷ்ய உளவுத்துறையான கேஜிபி - யில் 16 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவமும், அப்போது கிடைத்த அரசியல் தொடர்புகளுமே புடினின் இப்போதைய அரசியல் பலம். கேஜிபி - யில் தன்னுடன் பணியாற்றிய மெத்வதேவ் உள்ளிட்டோரைத்தான் தனது நம்பிக்கைக்குரியவர்களாக அரசியலில் வைத்துள்ளார் புடின்.

எப்போதும் மக்களிடம் நேரடியாகத் தொடர்பில் இருக்க விரும்பும் புடின், தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்று, பொதுமக்களின் கேள்விகளுக்கு மட்டுமின்றி தொலைபேசி மூலம் கேட்கப்படும் கேள்விகளுக்கும் எவ்விதத் தயக்கமுமின்றி நேரடியாக உடனுக்குடன் பதிலளித்து "புடினிஸம்" என்ற புதிய வழிமுறையை உருவாக்கினார்.

1991இல் அரசியலில் நுழைந்தது முதல் சுமார் 20 ஆண்டுகளாக ரஷ்யாவில் மக்கள் செல்வாக்குள்ள தலைவராக இருந்தார். சர்வதேச அளவில் பிரபலமான ரஷ்யத் தலைவராகவும் விளங்கினார். ஆனால், இந்த ஆண்டு தொடக்கத்தில் அவர் மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது, மக்கள் மத்தியில் அவருக்கு எதிரான அதிருப்தி வெளிப்பட்டது. ஜனாதிபதி, பிரதமர் நாற்காலிகளில் புடினும், அவருக்கு நெருக்கமான டிமிட்ரி மெத்வதேவும் மாறிமாறி அமர்ந்து விளையாடியது மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது. நாட்டில் தலைவிரித்தாடும் விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் போன்றவற்றைப் போக்க புடின் எதுவுமே செய்யவில்லை என்பதே மக்களின் அதிருப்திக்கு முக்கிய காரணம்.

2000ஆம் ஆண்டில் முதல்முறையாக ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டபோது ரஷ்யாவின நம்பிக்கை நாயகனாக அறியப்பட்ட புடின், செல்வாக்கு சரிந்த தலைவராகிவிட்டார். அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொண்டாலும், மக்கள் மனதில் உள்ள அதிருப்தியை நீக்கும் சந்தர்ப்பம் புடினுக்கு இன்னும் கிடைக்காதது அவரது துரதிர்ஷ்டம்.

இப்போது புரட்சிகர இசைக் குழு ஒன்றாலும் மீண்டும் பிரச்சினையில் சிக்கியுள்ளார் புடின். மொஸ்கோவில் உள்ள தேவாலயத்தில் "புஸ்ஸி ரயட்" என்ற இசைக்குழுவைச் சேர்ந்த இளம் பெண்கள் மூவர், ஜனாதிபதி புடினுக்கு எதிரான கருத்துகள் அடங்கிய பாடலைப் பாடினர்.

இதற்காக அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது. 5 மாத வழக்கு விசாரணைக்குப் பின். இளம் பெண்கள் மூவருக்கும் தலா 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது ரஷ்ய நீதிமன்றம். தேவாலயத்தில் வன்முறையைத் தூண்டும் வகையிலான பாடலைப் பாடினார்கள் என்பதற்காகவே இந்தத் தண்டனை என்று நீதிமன்றத்தால் விளக்கமளிக்கப்பட்டது. எனினும் புடினுக்கு எதிராகப் பாடினார்கள் என்பதற்காகவே அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்தது.



புடின் மேற்கொண்ட பழிவாங்கும் நடவடிக்கை இது என்று ரஷ்ய எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டின. இத்தீர்ப்பு குறித்து கவலை தெரிவித்த இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்காவும், தண்டனையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென கோரின. எனினும் தண்டனை உறுதி செய்யப்பட்டு, இளம்பெண்கள் மூவரும் சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

இசைக்குழுவுக்கு ஆதரவாக, பல்வேறு இசைக்குழுவினர், சமூக அமைப்பினர் என பல்வேறு நாடுகளில் புடினுக்கு எதிராகப் போராட்டங்கள் நடைபெறுகின்றன. தீர்ப்பு வெளியான உடன் நீதிமன்றத்துக்கு வெளியிலேயே ரஷ்ய எதிர்க்கட்சிகள் போராட்டத்தைத் தொடங்கின.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவரும், செஸ் சம்பியனுமான கேரி கஸ்பரோவ் உள்ளிட்ட ஏராளமான எதிர்க்கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். இந்தத் தொடர் போராட்டங்களால் அமளிக்காடாகிவிட்டது ரஷ்யா.

ரஷ்யாவின் இரும்பு மனிதராக தன்னைத்தானே வடிவமைத்துக் கொண்ட புடின், இப்போது மக்களின் எதிர்ப்பு என்ற வெப்பத்தில் உருகத் தொடங்கியுள்ளார்.


# சோக்ரடீஸின் மனைவி

– எஸ்.ராமகிருஷ்ணன்

கிறிஸ்து பிறப்பதற்கு 469 ஆண்டுகளுக்கு முன்னால் கிரீஸ் நாட்டில் ஏதென்ஸ் நகரத்தில் பிறந்தவர் சோக்ரடீஸ். கல்தச்சரின் மகன். போர்வீரனாக இருந்திருக்கிறார். தன்தத்துவங்களையும், சிந்தனைகளையும் சோக்ரடீஸ் தானே எழுதவில்லை. பிளேட்டோவின் மூலமே சோக்ரடீஸின் வரலாறு உலகத்திற்குத் தெரியவந்தது.

ஒருநாள் தனது பேச்சைக் கேட்காத சோக்ரடீஸின் தலையில் கோபத்தில் ஒரு வாளி தண்ணீரை தூக்கி ஊற்றினாள் அவரது மனைவி ஷாந்திபி (Xanthippe). முன்பு இடி இடித்தது தற்போது மழை பெய்கிறது என்று சோக்ரடீஸ் அதைப் பற்றி சொன்னதாக ஒரு கட்டுக்கதை நெடுங்காலமாகவே இருந்துவருகிறது. எதற்காக அந்தச் சண்டை வந்தது என்று எந்த வரலாற்றுப் புத்தகத்திலும் குறிப்புகளில்லை.

இப்படி பலநூறு வருசமாகவே ஷாந்திபியைப் பற்றி நிறையத்தவறான தகவல்கள். அவதூறுகள் உலவுகின்றன. அவை நிஜம் என்று மெய்ப்பிக்க ஒரு சாட்சியுமில்லை. அந்த வம்புக்கதைகளின்




வழியே உலகின் மோசமான மனைவிகளின் பட்டியலில் ஷாந்திபி எப்போது மிருக்கிறாள்.

சோக்ரடீஸ் போன்ற மேதையைப் புரிந்து கொள்ளாமல் அவரைத் திட்டியும் அடித்தும் ஆவேசமாகச் சண்டையிட்டும் கொடுமைப்படுத்திய மனைவி என்றே அவளைப்பற்றிய சித்திரம் உருவாக்கப் பட்டிருக்கிறது. டால்ஸ்டாயின் மனைவியைப்பற்றியும் இதே குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. லிங்கனின் மனைவி மேரிடாட் மீதும் இதே புகார்கள் உருவாகி முடிவில் அவள் மனநலக் காப்பகத்திற்கு அனுப்பப்பட்டாள்.

பரடைஸ் லொஸ்ட் என்று இழந்த சுவர்க்கம் காவியம் படைத்த மில்டன், தனது முப்பத்தைந்தாவது வயதில் மேரி பாவல் என்ற அரச குடும்பத்துப் பெண்ணைத்திருமணம் செய்து கொண்டார். ஆனால் மனைவியின் கடுமையான நடத்தையால் அவமானம் அடைந்து துயருற்றார். மில்டன் தனது இறப்புவரை, தான் இழந்த சுவர்க்கத்தை மீண்டும் பெறவே இல்லை என்கிறார்கள் இலக்கிய விமர்சகர்கள்.

இப்படி மோசமான மனைவிகள் பற்றியும் கொடுமைக்காரக் கணவனைப் பற்றியும் நிறைய மேற்கோள்கள் இருக்கின்றன. அவை முழுஉண்மையும் இல்லை முழுப்பொய்யுமில்லை. மாறாக உறவின் கசப்பிற்கு என்ன காரணம், எப்படி உருவாகிறது என்பதையே நாம் ஆராய வேண்டியிருக்கிறது.

பிளேட்டோவின் நூல்களில் சோக்ரடீஸின் மனைவி என்று குறிப்பிடப்படுகின்றதேயன்றி அவளைப் பற்றி மேலதிகமாக எந்தத் தகவலும்இல்லை.

ஒரு இடத்தில் சோக்ரடீஸ் திருமணம் செய்து கொள்வது பற்றி தன்னிடம் யோசனை கேட்க வருபவனுக்குச் சொல்லும் போது முரட்டுக் குதிரையை அடக்கி ஆள்வது சிலருக்குப் பிடித்தமானது, அது போன்றது தான் திமிரான பெண்ணைத் திருமணம் செய்து கொள்வது என்று சொல்கிறார். அது அவரது வாழ்வனுபவத்திலிருந்து உருவானது என்று சீடர்கள் குறிப்பிடுகிறார்கள்.

ஷாந்திபி என்றால் தங்கநிற முடி கொண்ட குதிரை என்று அர்த்தம். கிரேக்கத்தில் குதிரையின் குணாம்சத்தைக்கொண்டு பெயர் வைப்பது இயல்பு. ஷாந்திபி கடுமையான உழைப்பாளி, நல்ல உடற்கட்டுக் கொண்டவள்.

சோக்ரடீஸ் ஷாந்திபியை திருமணம் செய்து கொள்ளும் போது அவரது வயது 50, ஷாந்திபிக்கோ இருபது வயது. முப்பது வயது இடைவெளி இருவருக்கும். சோக்ரடீஸ் சதா சர்வகாலமும் இளைஞர்களோடு தத்துவ விசாரத்தில் ஈடுபடுகின்றவர். வெறும்காலோடு நாள்முழுவதும் ஏதென்ஸை சுற்றியலைவது அவரது வழக்கம். படிப்பு சொல்லிக் கொடுக்க காசு வாங்குகின்றவர்களை எதிர்ப்பதே அவரது பிரதான வேலை. ஆகவே அவர் தன்னிடம் தத்துவம் கற்கவரும் எவரிடமும் பணம் வாங்குவதில்லை. சோக்ரடீஸின் அப்பா ஒரு கல் தச்சன், சிற்பி பரம்பரையைச் சேர்ந்தவர்கள், ஆகவே பாரம் பரியச் சொத்தும் கிடையாது.

ஷாந்திபி சோக்ரடீஸோடு வாழ்ந்து மூன்று குழந்தைகளைப் பெற்றிருக்கிறாள். மூத்தவன் லம்பிரசெல்ஸ். இரண்டாமவன் சோபர்னிக்ஸ் மூன்றாவது மென்ஜினஸ். மரணதண்டனை விதிக்கப்பட்ட சோக்ரடீஸைப் பார்க்க சிறைக்கு வரும் போது மூன்றாவது கைக்குழந்தையோடு ஷாந்திபி வந்திருந்தாள் என்று குறிப்பிடப்படுகிறது. சோக்ரடீஸ் சாகும்போது அவருக்கு 71 வயது.


சோக்ரடீஸ் போல உலகமே தனது வீடு என்று இருக்கின்ற ஒருவரை மணந்து கொண்டு மூன்று குழந்தைகளின் தாயாகிய பிறகும் எந்த சமூக அந்தஸ்தும் இன்றி அடிப்படை வசதிகளுக்கே அல்லாடும் நிலையில் ஷாந்திபி அவதிப்பட்டதால் நிச்சயம் அவள் சண்டையிடும் மனநிலைக்கே தள்ளப்பட்டிருப்பாள்.

குடியும், கூத்தும், பெண்களுடன் பாலியல் தொடர்புகளிலும் இருந்த கிரீஸ் நாட்டு ஆண்களைப் போலவே சோக்ரடீஸ் நடந்து கொண்டார் என்பதால் தான் அவர்களுக்குள் சண்டை என்றும் ஒரு தரப்பு வாதிடுகிறது.

மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறைப்பட்ட சோக்ரடீஸை கடைசி முறையாக பார்க்கச் சென்ற ஷாந்திபியோடு பேச மறுத்து அவளை வெளியே அனுப்பிவிட்டு நண்பர்களோடு தத்துவ விசாரம் செய்கிறார் சோக்ரடீஸ். அது ஷாந்திபியை அதிகம் கோபம் கொள்ளச் செய்கிறது. அவளது பிள்ளைகளே அவளைக் குற்றம் சொல்கிறார்கள். புறக்கணிப்புதான் அவள் மனதை மாற்றியிருக்கிறதோ எனத் தோன்றுகிறது.

‘ஷேக்ஸ்பியரின் சகோதரி’ என்று வேர்ஜினியா வுல்ப் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். இதில் ஷேக்ஸ்பியர் காலத்தில் அவரது சகோதரி எழுதத் துவங்கியிருந்தால் அவளை அன்றைய சமூகம் அங்கீகரித்திருக்காது. பெண்கள் தங்களை வெளிப்படுத்திக் கொள்ள போராடிக் கொண்டேயிருக்க வேண்டியிருக்கிறது. இதுதான் வரலாற்று உண்மை என்கிறார்.

ஒருமுறை சென்னைத் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பாரதிதாசனின் மனைவி நேர்காணல் நிகழ்ச்சியைக் கண்டேன். முதிய வயதிலிருந்தவரிடம் உங்களுக்கு மகாகவி பாரதியைத் தெரியுமா என்று நேர்காணல் செய்பவர் கேட்கிறார். அதற்கு பாரதிதாசனின் மனைவி, யாருக்குத் தெரியும், கவிஞர் எப்பவும் திடீர்னு பத்துப் பேரை அழைச்சிட்டு வந்து சாப்பாடு போடச் சொல்வார், உடனே சமைச்சு ஆகணும். வீட்ல நிறைய பேர் வந்து சாப்பிட்டு போயிருக்காங்க. வந்தவங்களை நல்லா உபசரிக்கணும்கிறதில ரொம்ப அக்கறையா இருப்பார். எங்களாலே சமையல் வேலை செய்து முடியாது, ரொம்பக் கஷ்டம். அதனாலே தனியா யாரையும் ஞாபகமில்லை என்று பதில் சொன்னார்.



வேர்ஜினியா வுல்ப்

அதேகுரல்தான் பாரதியின் மனைவியிடமும் எதிரொலிக்கிறது.

இன்று மகாகவியின் மனைவியாகப் போற்றப்படும் நான் அன்று பைத்தியக்காரன் மனைவியென்று பலராலும் ஏசப்பட்டேன். காதல் ராணியாக மனைவியைப் போற்றும் கவிஞன் அவளுக்குச் சாப்பாடும் போடவேண்டும் என்ற நினைவேயின்றிக் காலம் கழித்தானேயானால், என்ன செய்ய முடியும்?

கவிஞன் விசித்திரமான தன்மை நிறைந்தவன். அவனுக்கு எதுவும் பெரிதில்லை. ஆனால், கவலை நிறைந்த வாழ்நாளைக் கழிக்க வேண்டும் என்று எந்தப் பெண்தான் நினைக்க முடியும்? சிறுவயதில் ஆசாபாசங்களும் அபிலாஷைகளும் ஒவ்வொரு பெண்ணின் மனத்திலும் நிறைந்திருப்பது இயற்கைதானே? சுகமாக வாழுவதற்கு சொர்க்கலோகம் சென்றால்தான் முடியும் என்ற நிலை கவிஞன் மனைவிக்கு ஏற்பட்டு விடுகிறது.

சோக்ரடீஸோ, பாரதியோ அல்லது டால்ஸ்டாயோ தனக்கான ஒரு அகவுலகில் வாழ்ந்தவர்கள். தம்மைச் சுற்றி தாங்களாகவே ஒரு தனிமையை ஏற்படுத்திக் கொண்டவர்கள். சராசரி மனிதர்களின் ஆசைகளும் கனவுகளும் அவர்களுக்குக் கிடையாது. ஆகவே தினசரி வாழ்வில் இது போன்ற நெருக்கடிகளைச் சந்திப்பது தவிர்க்கமுடியாதது தான். ஆனால் தவறுக்குக் காரணமாக ஆணோ பெண்ணோ ஒருவர் மற்றவரை சுட்டிக்காட்டுவது சரியானதில்லை. எதிலும் விட்டுக் கொடுப்பது தற்காலிகமானது, புரிந்து கொள்வதுதான் சரியான தீர்வு, ஆனால் அது எளிதானதில்லை.

> கவிஞன் விசித்திரமான தன்மை நிறைந்தவன் அவனுக்கு எதுவும் பெரிதில்லை. ஆனால், கவலை நிறைந்த வாழ்நாளைக் கழிக்க வேண்டும் என்று எந்தப் பெண்தான் நினைக்க முடியும்? சிறு வயதில் ஆசாபாசங்களும் அபிலாஷைகளும் ஒவ்வொரு பெண்ணின் மனத்திலும் நிறைந்திருப்பது இயற்கைதானே? சுகமாக வாழுவதற்கு சொர்க்கலோகம் சென்றால்தான் முடியும் என்ற நிலை கவிஞன் மனைவிக்கு ஏற்பட்டு விடுகிறது.

மோசமான மனைவி. மோசமான கணவன் என்று எவருமில்லை, அப்படி ஆக்கப்படுகிறார்கள், அல்லது அது போன்ற நெருக்கடி புரிந்து கொள்ளாமையால் ஏற்பட்டு விடுகிறது. புரிந்து கொள்வதற்கு பலருக்கு விருப்பமில்லை. சிலர் அப்படி புரிந்து கொள்வதால் தனது மதிப்பு போய்விடும் என்று பொய்யான காரணம் கொண்டிருக்கிறார்கள்.

தன் மனைவி எழுத்தாளர் ஆனதும் கோபம் கொள்ளும் சராசரி ஆண்களைப் போலின்றி வேர்ஜினியா வுல்பின் கணவர் லியோனார்ட் தன் மனைவி எழுத்தாளராகப் புகழ்பெற்றதை கண்டு சந்தோஷ மடைந்து அவருக்காகவே ஒரு பதிப்பகம் உருவாக்கித் தந்ததோடு வேர்ஜினியாவின் மனச் சிக்கல்களுக்கு மருத்துவஉதவி செய்து அவரைப் பராமரித்து உறுதுணையாக இருந்திருக்கிறார். அப்படியும் வேர்ஜினியா தற்கொலை செய்து கொண்டுவிட்டார்.

ஷாந்திபியை மோசமான மனைவியின் முன் உதாரணமாக ஷேக்ஸ்பியர் கூட அடையாளம் காட்டுகிறார். அவருக்குச் ஷாந்திபியை அப்படி அடையாளம் காட்டியது புளூடார்க்கே.

அமி லோவாலின் கவிதையொன்றில் ஷாந்திபி இடம் பெற்றிருக்கிறாள். அதில் நாள் எல்லாம் உலகோடு பேசவும் விவாதிக்க முடிந்த ஒருவரால் ஏக்கத்தோடு காத்திருக்கும் எனது மனத்துயரைக் கேட்கவும் ஆறுதல்படுத்திப் பேசவும் முடியவில்லை, அந்த துக்கம் நெருப்பாக எரிந்து கொண்டிருக்கிறது என்கிறாள்.

சோக்ரடீஸின் மரணத்திற்குப் பிறகு ஷாந்திபி என்ன செய்திருப்பாள், எப்படி அந்த துக்கத்தை எதிர்கொண்டாள், அதன் பிறகு எவ்வளவு நாட்கள் வாழ்ந்தாள், என்ன நினைவுகளை அவளுக்குள் சோக்ரடீஸ் விட்டுச்சென்றிருக்கிறார், சோக்ரடீஸின் மனைவி என்பது சுமையா அல்லது பெருமையா என நிறையக் கேள்விகள் பதிலற்று இருக்கின்றன.

சோக்ரடீஸ் விரும்பி விஷக்கோப்பையை தானே வாங்கி அருந்தியது போல வாழ்வின் கசப்புகளைத் தானே தேடிக் கொண்டு அருந்தியதுதான் ஷாந்திபியின் விதியா?

குடும்பத்தை நாம் புறக்கணித்தால் இயற்கையால் நாம் புறக்கணிக்கப்படுவோம் என்று ஒரு பைபிள் வாசகமிருக்கிறது, அது உண்மைதானோ.

ஹாந்திபியின் மௌனம் நூற்றாண்டுகாலமாக உறைந்து போயிருக்கிறது, அவள் தனியான பெண் இல்லை, அவளைப்போல உலகில் பலர் இருக்கிறார்கள், அவர்களின் அகக்குரல் இன்னமும் வெளியே கேட்கவேயில்லை.

# கைலாசபதி அரங்கில் நடைபெற்ற ஜேர்மன் சுணைக்கேடு நாடகம்



(சாந்தன்- சிகரம்)

தொலைக்காட்சி ஒன்று எவ்வாறு மக்களின் உள்ளார்ந்த வாழ்க்கையைப் பாதிக்கின்றது என்ற தொனிப்பொருளினை உள்ளடக்கிய 'சுணைக்கேடு - என்ற ஜேர்மன் நாடகம் முதன் முறையாக தமிழில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் பல் கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அரங்கேற்றப்பட்டது.

இந்த நாடகத்தில், தொலைக்காட்சி ஒன்று எவ்வாறு மக்களுடைய வாழ்க்கையை பாதிக்கின்றது எனபதை மூன்று பெண் கதாபாத்திரங்களின் மூலம் நடித்து காட்டினர்.

தொலைக்காட்சியில் நிகழ்ச்சி தயாரிப்பாளராக வர விரும்பும் மூன்று பெண்களை அடிப்டையாக வைத்துக்கொண்டு தொலைக காட்சி ஒன்றின் ஆதிக் கத்தினை அதன் ஜதார்த்தத்தை, உண்மை நிலையை இந்த 'சுணைக்கேடு' என்ற நாடகம் வெளிக்கொண்டு வந்துள்ளது.

இந்த நாடகத்தை யாழ் பல்கலைக்கழகத்தின் நாடகத்துறை முன்னாள் பேராசிரியரும், 'ஈழத்தின் நாடகத் தாய் - என அழைக்கப்படுபவருமான குழந்தை ம.சண்முகலிங்கம் தமிழ் மொழி பெயர்ப்புச் செய்திருந்தார்.

ஜேர்மனிய நாடக ஆசிரியர் லூட்ஸ்ஹப்னர் எழுதிய இந்த நாடகத்தை ஜேர்மன் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு வென் ஜி யொட்டிக்காடலஸ் என்பவர் 2003ஆம் ஆண்டு மொழி பெயர்த்தார். இவரால் ஆங்கில மொழிக்கு மாற்றம் செய்யப்பட்ட 'creeps' என்ற நாடகமே தமிழில் 'சுணைக்கேடு.' எனப்படுகின்றது.

செயல்திறன் அரங்க இயக்கத்தின் அனுசரணையில் இந்த நாடகத்தினை செயல்திறன் அரங்க இயக்குநரும், நாடக நெறியாளருமான தே.தேவானந் நெறியாள்கை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மயானத்துக்கு செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு-நீரிமுளங்குப் பகுதியில் அமைந்துள்ள இந்து மயானத்தை பொதுமக்கள் பயன்படுத்த அப்பகுதியில் நிலை கொண்டுள்ள கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிலவிய யுத்தச் சூழ்நிலைகளினால் இந்த மயானத்தைப் பொதுமக்கள் பயன்படுத்தப் படையினர் தடைவிதித்திருந்தனர்.

இதன்காரணமாக இந்த மயானத்திற்கு ஒருகிலோ மீற்றர் தூரத்திற்கு முன்பாகவிருந்த இரட்டக்காலி என்ற இடத்தில் தற்காலிக மயானத்தில் இறந்தவர்களைப் பொதுமக்கள் தகனம் செய்து வந்தனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்தமற்ற சூழலில் இந்த மயானத்தைப் பயன்படுத்துவ தற்கு அனுமதிக்குமாறு அங்கு நிலை கொண்டிருக்கும் கடற்படையினரிடம் பொதுமக்கள் கோரியிருந்தனர்.

இதனையடுத்தே நேற்று முன்தினம் இந்த மயானத்தைப் பொது மக்கள் பயன்படுத்தக் கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ள நிலையில், இறந்த பெண் ஒருவரது தகனக்கிரியைகளும் அங்கு நடைபெற்றுள்ளது. இதேவேளை, இந்த மயானத்திற்கான வீதியும் உள்ளூராட்சி சபை நிதியின் மூலம் வேலணைப் பிரதேசசபையினால் புனரமைக்கப்படவுள்ளது.

அத்துடன் இந்தப்பகுதியில் இயற்கை எய்தியவர்களுக்கென அத்தியேட்டிக் கிரியைகளையும் மேற்கொள்வதற்கு வசதி யாகப் பொதுமகன் ஒருவரால் மண்டபம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# மதுவரி அதிகாரிகள் பாய்ச்சல் வர்த்தகர்கள் 25 பேர் சிக்கினர்


(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம் மதுவரித்திணைக்களப் பரிசோதகர்கள் யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் நடத்திய திடீர்ப் பரிசோதனையின் போது சிறுவர்களுக்கு பீடி, சிகரெட் போன்ற புகைத்தல் பொருட்களை விற்பனை செய்த 25 வர்த்தகர்கள் சிக்கிக்கொண்டனர்.

இவர்கள் நேற்று முன்தினம் யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய் யப்பட்டபோது இவர்களை விசாரணை செய்த நீதவான் மா. கணேசராஜா தலா 3 ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் 75 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

சிறுவர்களுக்கு சிகரெட், பீடி போன்ற புகைத்தல் பொருட்களை விற்பனை செய்யக் கூடாது என்னும் விதிகளை மீறி இவ்வர்த்தகர்கள் செயற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

# மிருதங்க வித்துவானுக்கு காரைநகரில் கௌரவிப்பு



காரைநகர் மிருதங்க வித்துவானும், ஓய்வுபெற்ற கிராம சேவகருமான எஸ்.சண்முகசுந்தரம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

காரைநகர்-தங்கோடை சிறிநாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் அலங்கார உற்சவத்தின் 10ஆம் நாளான கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற நிகழ்வில் அந்த மண்ணின் மைந்தனும், ஓய்வுபெற்ற கிராம சேவகரும், மிருதங்க வித்துவானுமாகிய எஸ்.சண்முகசுந்தரம் அவர்களுடைய சேவையைப் பாராட்டி காரைநகர் பிரதேச சபையின் எதிர்க்கட்சியின் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் காரைநகர் பிரதேச அமைப்பாளருமான வீரமுத்து கண்ணன் (ரஜனி) பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். அத்துடன், ஆலயத்தின் அலங்கார உற்சவத்தை முன்னிட்டு இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் வீ.கண்ணன் அவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



# சரியான தொழில்வாய்ப்பின்றி முல்லை கடற்தொழிலாளர் பாதிப்பு

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்தொழில் செய்யும் கரையோர மீனவர்கள் தமக்கு சரியான முறையில் தொழில் வாய்ப்பின்றி பொருளாதார ரீதியாகக் கஷ்டங்களை அனுபவிப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்தொழிலை நம்பி வாழும் கரையோரப் பகுதி மக்கள் மீள் குடியமர்ந்து 2 வருடங்கள் கழிந்துள்ள நிலையில் தமக்கு நல்லதொரு தொழில் வாய்ப்பு இதுவரை கிடைக்கவில்லை எனவும் இதனால் தாம் வாழ்வாதார ரீதியாக குறிப்பாக உணவுக்காக கஷ்டப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் சுமார் 4600 குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் இவர்கள் ஜீவனோபாய தொழிலாக மீன்பிடித் தொழிலையே மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக கொக்கிளாய் முதல் நல்லதண்ணி குடி வரையான பகுதிகளில் இம்மக்கள் வாழ்ந்து வரும் நிலையில் தொழிலுக்காக 73 கிலோ மீற்றர் தூரம் நாளாந்தம் செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்ற போதிலும் குறைந்தளவு வருமானத்தையே பெறுவதாக அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனால் பொருளாதார, வாழ்வதார ரீதியாகக் கஷ்டப்படுவதுடன் ஒருவேளை பட்டினி கிடப்பதாகவும் தெரிவிக்கும் இம்மக்கள் சரியான தொழில் வாய்ப்பை ஏற்படுத்த உரியவர்கள் ஆவன செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றனர். (கே)

# வலி . வடக்கில் மீள்குடியேறிய மக்களுடன் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளைப் பிரதேசத்தில் கடந்த வருடம் மீளக்குடியேறிய மக்களுடன் ஈ.பி.டி.பியின் வலி. வடக்கு அமைப்பாளரும் வலி. வடக்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவருமான இ.ஜெயபாலசிங்கம் (அன்பு) அவர்கள் கலந்துரையாடலொன்றை நடாத்தியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சுன்னாகம் அலுவலகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலின் போது 2011ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் தெல்லிப்பளை பிரதேச மீள் குடியேற்றம் இடம் பெற்றது. இவ்வாறு மீளக் குடியேற்றப் பட்ட மக்களின் நன்மை கருதி குறிப்பிட்ட சில பகுதிகளில் நிரந்தர வீடுகள், தற் காலிக வீடுகள், மல சல கூடங்கள், கிணறுகள், குழாய்க் கிணறுகள் மற்றும் இலவச மின்னிணைப்பு போன்ற வசதிகள் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்ட இந்தச் சந்திப்பில் வித்தகபுரம், தந்தை செல்வாபுரம், நகுலேஸ்வரம், கூவில், வசந்தபுரம், சேந்தாங்குளம் போன்ற பகுதிகளில் மீளக்குடியேறியுள்ள மக்களின் அடிப்படை வசதிகள் மற்றும் வாழ்வாதார உதவிகள் குறித்து அவர் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் அம்மக்களது தேவைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக் கொண்டு சென்று உரிய தீர்வினைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்தமை குறிப்பிடத்தக்கது.

# முரசின் இன்றைய பலன்

(29.08.2012 - புதன்கிழமை)

நந்தன வருஷம் ஆவணி மாதம் 13 ஆம் திகதி. திரயோதசி முன்னிரவு 11.05 வரை. சித்தம் நட்சத்திரம் உத்தராடம் முற்பகல் 7.10 வரை.

இராகுகாலம் 12.05-1.35 வரை. சுபநேரம் 04.35 - 06.05 வரை.

பிரதோச விரதம், ஆவணி ஓணம்

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சகிப்புத்தன்மை, பொறுமையால் மேன்மை, உறவினரால் சிரமம், எதிர்பாராத சந்திப்பு. |
| ரிஷபம் | கவலை சூழும், காத்திருப்பு, கடின வார்த்தை, அனுசரித்துப்போதல். |
| மிதுனம் | ஒய்வு மிகுதி, வாக்குவாதங்கள் தவிர், உறவினர் வருகை, சண்டைசச்சரவு |
| கடகம் | பகை உண்டாகும், மனச்சஞ்சலம், செலவு அதிகரிப்பு, தவறு நிகழும். |
| சிம்மம் | சுபநாள், உதவி கிடைக்கும், சகோதரர்கள் நலனில் அக்கறை, நண்பர்கள் ஆதாயம். |
| கன்னி | விரும்பியது நடக்கும், நண்பர்கள் ஆதாயம், பிறருக்கு உதவி, பணியில் தடை. |
| துலாம் | உற்சாகம் மிகுதி, பந்தயங்களில் வெற்றி, உயர்வு கிடைக்கும், வெளியூர் பயணம். |
| விருச்சிகம் | உறவினர் அன்யோன்யம், உறவினர்கள் வருகை, எதிர்பாராத நிகழ்வு. |
| தனுசு | விருந்தினர் வருகை, வேலைப்பளு, ஆதரவு உண்டு, இரக்கசுபாவம். |
| மகரம் | பாராட்டு கிடைக்கும், இனிப்பான தகவல்கள், கடன் வசூலாகும், பகைவர் உதவி. |
| கும்பம் | நண்பர்கள் சந்திப்பு, மகிழ்ச்சியான நாள், உறவினர் நெருக்கம், வாகன யோகம். |
| மீனம் | அலைச்சல் தீரும், விருப்பங்கள் நிறைவேறும், போசன சுகம். |

# இடமாற்றம்

(சாவகச்சேரி)

வன்னி பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றிய 9 ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப் பட்டுள்ளனர். மூன்றாம் தவணை ஆரம்பமாகும் எதிர்வரும் 3 ஆம் திகதி குறித்த வலய பாட சாலைகளில் இவ் ஆரிசியர்கள தமது கடமையைப் பொறுப் பேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (11)

# பனை மரங்கள் தறிப்பு

(வரணி)

யா/வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தியாசாலையின் வடக் குப்புறமாக அமைந்திருக்கும் கட்டடங்களுக்கு ஆபத்து விளை விக்கக் கூடிய விதத்தில் ஓங்கிவளர்ந்திருந்த பனை மரங்கள் பெற்றோர், அதிபர், ஆசிரியர்களின் முன் முயற்சியால் காணி உரிமையாளருடன் தொடர்பு கொண்டு தறிக்கப்பட்டு தற்போது நிம்மதியுடன் மாணவர்கள் கல்வி கற்றுவரு கின்றனர்.

இப்பனை மரங்களால் மின் இணைப்புக்கள் மற்றும் பாடசாலைக் கட்டடம் என்பன முற்றுமுழுதாக சேதமடையும் என்பதை காணி உரிமையாருக்கு அவர்கள் எடுத்துக் கூறியதை அடுத்து அரச சட்ட வரையறையுடன் இப்பனை மரங்கள் தறிக் கப்பட்டுள்ளன. (150)

# தலைவர்களின் புகைப்படங்கள் நகரசபையில் காட்சிக்கு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் 50ஆவது வருட நிறைவை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபையில் சேவையாற்றிய தலைவர்கள், விசேட ஆணையாளர்கள், செயலாளர்களது புகைப்படங்களை மன்றில் நிறுவுவதற்கு நகரசபை நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

1964ஆம் ஆண்டு தொடக்கம் 6 தலைவர்களும், 9 விசேட ஆணையாளர்களும், 12 செயலாளர்களும் சேவையாற்றி உள்ளனர். இவர்களது புகைப்படங்களை உறவினர்கள், நண்பர்களிடமிருந்து எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


கடந்த 2 ஆயிரமாம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சேவையாற்றியவர்களின் புகைப்படங்கள் மன்றில் வைக்கப்பட்டிருந்த நிலையில் போர்ச் சூழலினால் அவை அழிந்து போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (11)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர் பொலிஸாரால் கைது

(கிளிநொச்சி)

மக்கள் நடமாட்டமற்ற காட்டுப்பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவரை நாச்சிக்குடா பொலிஸாரும், புலனாய்வு பொலிஸாரும் இணைந்து கைது செய்துள்ளனர். கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு 8.30 மணியளவில் தீக்காய்காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாகக் கிடைத்த தகவலை அடுத்து நாச்சிக்குடா பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதாப்குலதுங்க தலைமையிலான புலனாய்வுப் பொலிஸார் நடத்திய தீவிர சோதனை நடவடிக்கையின் போது வன்னேரிக்குளத்தைச் சேர்ந்த ஒருவர் வசமாக மாட்டிக்கொண்டார். இவரிடமிருந்து 55 லீற்றர் கசிப்பும், 60லீற்றர் கோடாவையும் கைப்பற்றியதுடன் நபரையும் கைது செய்தனர். இவர் இதற்கு முன்னர் பலதடவை கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுவந்ததாகவும் பொலிஸார் பல தடவை தேடிய போதும் தலைமறைவான இவர் தற்போது பிடிக்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (149)

# பாமர் சங்கமம்



"பசி வந்தால் பத்தும் பறந்திடும்" என்பினம் இந்தப் பத்தும் என்பது என்ன? அதில் வெட்கம், ரோசம், அறிவு இப்படிப் பல அடங்கலாம்.

சமீபத்தில் விசுவமடுவில் இருந்து கொடிகாமத்துக்கு லொறி கொண்டு வந்தவர்கள் சாப்பிட ஒரு உணவகம் ஒன்றில் நுழைந்திருக்கினம்.

கொத்து ரொட்டிக்குச் சொல்லிச் சாப்பிடு கையில் குழம்பு கேட்டிருக்கினம். கடைக் காரர் மேலதிகமாக கொடுப்பதில்லை என்று சொல்லி இருக்கிறார். கணக்கான கீறில் இருந்தவர்களுக்கு சூடேறி இருக்கு.

கையைக் காலை நீட்டினால் என்ன நடக்கும்? சாப்பாடும் குழம்பி, ஐந்து பேர்கள் காயமடைந்து நான்கு பேர்கள் ஆறு நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் விடுவிக்கப்பட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொதுவாக கொத்து ரொட்டி அளவான குழம்பு, முட்டை மற்றும் இறைச்சி, மசாலை என்பன சேர்த்தே தயாரிக்கப் படுகிறது. அதற்கு மேலும் கேட்டால் கொடுக்காதது கடைக் காரனின் பிழையல்ல.

ஆனால் வெறும் ரொட்டிக்கு எந்த விதமான உபபொருளும் வழங்கப்படுவதில்லை. அதேவேளை இடியப்பம், பிட்டு, தோசை, இட்லி எதுவாக இருந்தாலும் உப அனுமானம் வழங்கப்பட்டு வருகிறது.

ரொட்டிக்குப் பிரத்தியேகமாக கறிகள் வாங்க வேண்டிய நிலைதான். உணவகங்கள் ரொட்டிக்கும் ஏதாவது சம்பலோ, சாம்பாரோ அல்லது வேறேதும் ஆணம் வழங்க ஆவன செய்தால் நல்லதல்லவா?

ஒரு சிலர் ரொட்டியை தேநீர் பருக வரும்வேளைகளில் ஓரிரண்டு சூடாக வாங்கிச்சாப்பிடுவதையும் வழமையாகக் கொண்டுள்ளனர். அத்தகையோர் கடைக்காரரிடம் சம்பல் கேட்டு இரந்து நிற்பதையும் காண முடிகிறது.

சம்பல், இடியப்பத்துக்கென்று வழங்கப்படுவதை ரொட்டிக்கு வழங்க வெளிக்கிட்டால் அநேகமாக எல்லாருக்கும் வழங்க வேண்டிய நிலை உருவாகும். இந்த வேளைகளில் வாடிக்கையாளர், கடைக்காரர்களிடையே வாய்த்தர்க்கம் அடி, பிடியில் முடியும் நிலைமை நூறுவீதம் உண்டு.

அதனைத் தவிர்க்க ரொட்டிக்கும் ஏதாவது உப அனுமானம் வழங்க ஒழுங்குபடுத்தல் நன்றே! குடாநாட்டின் சிலபகுதிகளில் குறிப்பாகக் குருநகர், நாவாந்துறை, ஐந்து சந்திப்பகுதிகளில் 'பிளேன' ரொட்டிக்கு குழம்பு வழங்கும் முறைமை நடைமுறையில் உள்ளது.

ஏனைய பிரதேசங்களிலும் அதனை நடைமுறைப்படுத்த முன்வரலாம். பசி வந்தால் பத்தும் பறக்கும் இதனால் கிட்டத்தட்டப் பத்துப் பேர்கள் கடந்த 12ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இரவு அரை வயிற்றோடை விளக்க மறியலில் வைக் கப்பட்டும் ஆஸ்பத்திரியில் மருந்து கட்ட வேண்டிய விபரீதங்கள் தோன்றியிராதல்லவா? என்ன நான் சொல்லுறே!


12. **Match the opposite words**

| | |
|---|---|
| Go | Big |
| Sit | Cry |
| Dark | Stand |
| Small | Come |
| Lough | Light |

13. **Say true or false**

1) Traffic lights are an the road ( )
2) Fishes are in the market ( )
3) Sun gives light in night ( )
4) Flowers are ugly in our surrounding. ( )
5) Tree can uses for the furniture ( )

14. **Do the puzzle**





தரம் - 3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை

# கல்வி முரசு



முன்னணி ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**01.Fill in the blanks**

| | |
|---|---|
| 1) F ......ll | 6) Electr ......city |
| 2) Cl .....mp | 7) Ma .....aria |
| 3) Scro......ch | 8) Mosq......ito |
| 4) Cra ......k | 9) Sa ......e |
| 5) Care .......al | 10)Acci .......ent |

**02. Underline the off ones**

1) grapes, mango, leave, apple
2) table, chair, door, fruit
3) write, sing, dance, plate
4) eight, even, read, nine
5) river, sea, pond, tree

**03. Re arrange and make Sentences**

1) Two / eyes /have / I
..........................................................................................
2) I / a / in / the / peacock/ see / temple
..........................................................................................
3) Parrot / a/ fly /can
..........................................................................................
4) like / I / vegetables / to / eat
..........................................................................................
5) my / is / Red / trouser / colour
..........................................................................................

**04. Draw and Colour**

Red Balloon

Green leaves

Black eye


yellow mango

Blue umbrella

**05. Match A with B**

| | |
|---|---|
| 1) Pen | Fridge |
| 2) Biscuit | Bus |
| 3) Ice | Shop |
| 4) Coffee | Canteen |
| 5) Bustand | Write |

**06. Match the words**




1) ....................


2) ....................

3) ....................


4) ....................

5) ....................

**07. Fill in the Blank**

1)This is a .....................


2) This is a .....................


3) This is a .....................


4) This is a .....................


5) This is a .....................




**08.** Read and Draw

1) Three Birds : .............................................

2) Five leaves : .............................................

3) Six Chairs : .............................................

4) Cup and saucer:.............................................

5) Bucket: .............................................

**09.. Under line correct word**

| | | |
|---|---|---|
| 1) | Hen lay | (egg, bird) |
| 2) | Tomato is a | (fruit, vegetable) |
| 3) | Cow eat | (gras, water) |
| 4) | cat drink | (rice, milk) |
| 5) | Horse is an | (animal, Bird) |

**10. Write 5words in this, picture**



1) .....................................................

2) .....................................................

3) .....................................................

4) .....................................................

5) .....................................................

**11. Answer the questions**

1) What is your father? .....................................................

2) Do you have a sister? .....................................................

3) What did you eat yesterday? .............................................

4) How old are you? .....................................................

5) What is your name? .............................................

# ஈழத்தமிழருக்கு நன்மை செய்யும் திட்டத்தைத் தடுத்தார் வை.கோ.

## குற்றஞ்சாட்டுகிறது தி.மு.க

ஈழத் தமிழர்களுக்கு நன்மை செய்யும் அமைதித் திட்டத்தை தடுத்ததில் வைகோவுக்கும் பங்கு உண்டு என்று திருப்பூரில் நடைபெற்ற டெசோ மாநாட்டு தீர்மான விளக்கக் கூட்டத்தில் தி.மு.க. பொதுச் செயலர் க.அன்பழகன் தெரிவித்தார்.

திருப்பூர் அரிசிக் கடை வீதியில் நடைபெற்ற டெசோ மாநாட்டு தீர்மான விளக்கக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியதாவது,

ஈழத் தமிழர்கள் வாழ்வுக்காக டெசோ மாநாடு நடத்தப்பட்டது. இங்குள்ள தமிழர்களுக்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் தொப்புள் கொடி உறவு உள்ளது. ஈழத் தமிழர்களை சிங்களவர்கள் வீழ்த்தியதாலும் அமைதி வழிப் போராட்டத்தில் பலன் இல்லாமல் போனதாலும் விடுதலை இயக்கங்கள் தீவிரவாதத்திலும் போரிலும் ஈடுபட்டன.

ஈழத் தமிழர் போராட்டக் குழுக்கள் தங்களுக்குள் சண்டையிட்டு, சகோதர யுத்தத்தில் ஈடுபடாதீர்கள் என கருணாநிதி கூறினார். ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோது அமைதி வழியில் தீர்வு காண முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அந்த சமயத்தில் சென்னையில் ஈழ போராட்டக் குழுத் தலைவரை பிரபாகரன் இயக்கத்தினர் சுட்டுக் கொன்றனர்.

இதன் விளைவாக ஈழத் தமிழருக்கான பயன்தரும் அமைதித் திட்டம் தடுமாறிப் போனது. மேலும், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் வைகோ கள்ளத்தோணி மூலமாகச் சென்று பிரபாகரனைச் சந்தித்தார்.

ராஜீவ் காந்தியால் கொண்டுவரப்பட்ட ஈழத் தமிழர்களுக்கான அந்த அமைதித் திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் போனதற்கு வைகோவுக்கும் பங்கு உண்டு. இப்போது, டெசோ மாநாடு எதற்கு எனக் கேட்கின்றனர்.

ஈழத் தமிழர்கள் மனித உரிமை அடிப்படையில் வாழ முடியவில்லை என்று ஐ.நா. சபையின் மனித உரிமை பாதுகாப்புக் குழு அதை கையில் எடுத்துள்ளது. இத்தகைய தருணத்தில் ஈழத் தமிழர்களுக்கு மேலும் நடக்கும் கொடுமைகளை தடுத்து நிறுத்த தமிழக மக்களும் குரல் கொடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் டெசோ மாநாடு நடத்தப்பட்டது. டெசோ மாநாட்டு தீர்மானம் ஐ.நா. சபைக்கு எட்டும் என்றார்.

இந்தியச் செய்திகள்

# விவாதத்திற்கு தயார் சிதம்பரம் அறிவிப்பு




நிலக்கரிச் சுரங்க முறைகேடு குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க மத்திய அரசு தயாராக இருப்பதாக நிதி அமைச்சர் ப.சிதம்பரம் கூறினர்.

டில்லியில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், விவாதம் மட்டுமே ஜனநாயகத்துக்கு உகந்தது எனவும், விவாதிக்கத் தயார் எனவும் பிரதமர் கூறியதை எதிர்க்கட்சிகள் ஏற்க வேண்டும் என்றார்.

நாடாளுமன்றம் முடக்கப்படுவது ஜனநாயகத்தை பலவீனமாக்கும் என்று கூறிய சிதம்பரம், விவாதத்தில் பங்கேற்க எதிர்க்கட்சித் தலைவர்கள் மறுப்பது துரதிர்ஷ்டவசமானது என்றும் முக்கியமான விஷயத்தில் ஆதாரம் இல்லாமல் குற்றச்சாட்டு மட்டும் கூறுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பிரதமரின் அறிக்கையில் ஏதேனும் தவறுகள் இருந்தால் அதை நாடாளுமன்றத்தில் எழுப்ப எதிர்க்கட்சிகள் முன்வரவேண்டும் என்றும் சிதம்பரம் கூறினார்.

# பாலியல் வல்லுறவை ஆதரித்த அமைச்சர்மீது செருப்பு வீச்சு



(நாக்பூர்)

பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட பெண்களுக்காக போராட்டம் நடத்துவது வீண் வேலை என்று பேசிய மகாராஷ்டிர அமைச்சரை சூழ்ந்துகொண்ட பெண்கள் செருப்பு வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தேசியவாத காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அமைச்சரான லட்சுமணக்கராவ் தோப்லே ஒரு நிகழ்ச்சியில் பேசுகையில்,

ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டவுடன் உடனே அவருக்காக போராட்டம் நடத்துவது வீண் வேலை. பாலியல் வல்லுறவு மூலம் பிறக்கும் குழந்தைகளை சரியாக வளர்க்க வேண்டும். அவர்களுக்கு உரிய கல்வியைத் தர வேண்டும். குறிப்பாக சட்டக் கல்வியைத் தந்து அவர்கள் வளர்ந்து குற்றவாளியை சட்டத்தின் மூலம் தண்டிக்கும்படி செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்.

இதனால் கடுப்பான கூட்டத்தில் இருந்த பெண்கள் அவர் மீது செருப்பை வீசினர். மேலும் மேடையில் ஏறி அவரை சூழ்ந்து கொண்டு தாக்கினர்.

இதையடுத்து மேடையிலிருந்து இறங்கி காரில் ஏறி தப்பித்து ஓடினார் அமைச்சர் தோப்லே.

# சியாச்சென் எல்லைப் பிரச்சினை; தீர்வுகாண விரைவில் பேச்சு



சியாச்சென் எல்லைப் பிரச்சினை உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வு காணும் வகையில் இந்திய -பாகிஸ்தான் பேச்சுவார்த்தை தொடரும் என பாதுகாப்புத்துறை அமைச்சர் அந்தோனி தெரிவித்தார்.

இந்திய - பாகிஸ்தான் இரண்டு நாடுகளுக்கும் சியாச்சென் பனிமலை முக்கிய எல்லைப் பிரச்சினையாக கருதப்படுகிறது.

இருநாடுகளும் தங்களது படைகளைச் சியாச்சென் பனிமலையில் நிறுத்தி வைத்துள்ளன.

நாடாளுமன்ற மக்களவையில் இது குறித்து ஏ.கே. அந்தோனி எழுத்து பூர்வமாக பதில் அளித்தார்.

சியாச்சென் பனிமலைப் பகுதியில் கடந்த 1984ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 846 வீரர்கள் பலியாகியுள்ளனர்.

13ஆவது சுற்று சியாச்சென் பேச்சுவார்த்தை இந்திய - பாகிஸ்தான் பாதுகாப்புத்துறை செயலர்கள் இடையே கடந்த யூன் 11, 12ஆம் திகதிகளில் நடந்தது.

சியாச்சென் பிரச்சினை உட்பட இரு நாடுகளிடையே நிலவும் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண பேச்சுவார்த்தை தொடர வேண்டும் என ஒப்புக்கொள்ளப்பட்டது.

இந்தியா - பாகிஸ்தான் இடையே "சர் கிரீக்" பகுதியில் உள்ள எல்லைப் பிரச்சினைக்கு தீர்வு காண இருநாட்டு சர்வேயர் ஜெனரல்களும் கடந்த யூன் 18,19ஆம் திகதிகளில் பேச்சுவார்த்தை நடத்தினர்.

சியாச்சென் பகுதியில் இருந்து படையைத் திரும்பப் பெறுவது குறித்து எந்த முடிவும் எடுக்கவில்லை.

பாதுகாப்புத் தேவைக்கு தகுந்தபடி அங்கு படைப்பிரிவுகள் பணியில் இருக்கும் என்றார்.

நீண்ட காலமாக இந்திய - பாகிஸ்தான் இடையே தீர்வு காண முடியாத பிரச்சினையாக சியாச்சென் கருதப்படுகிறது குறிப்பிடத்தக்கது

## விடுதலைப்புலிகள் மீதான தடை வாதங்களை முன்வைக்க வை.கோவிற்கு அனுமதி

விடுதலைப்புலிகள் மீதான தடை குறித்து வைகோ தன் வாதங்களை முன்வைக்கலாம் என்று டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி வி.கே.ஜெயின் அனுமதி அளித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு விதிக்கப்பட்ட தடையைத் தொடர்ந்து நீடிப்பதற்கும், உறுதி செய்வதற்கும், நீதிபதி வி.கே.ஜெயினை தலைவராகக் கொண்டு புதிதாக அமைக்கப்பட்ட தீர்ப்பாயம், கடந்த மாதம் 18ஆம் திகதி, விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீடிப்பது பற்றி வெளியிட்ட அறிவிப்பு, 23ஆம் திகதி, செய்தித்தாள்களில் பிரசுரம் ஆகியது.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, கடந்த 13ஆம் தேதி, இந்தத் தீர்ப்பாய விசாரணையில், தனது மனுவையும் ஏற்றுக்கொண்டு, விசாரணையில் பங்கேற்க அனுமதிக்க வேண்டும் என்று மனுத் தாக்கல் செய்தார். அதுபற்றிய விசாரணை, நேற்று முன்தினம் மாலை டில்லி உயர் நீதிமன்றத்தில் நடைபெற்றது. மத்திய அரசு வழக்கறிஞர் சாண்டியோக், தன் வாதத்தை முன்வைத்தார்.

"சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க முடியாது ஆனால், தீர்ப்பாய விசாரணையிலும், புலிகள் மீதான தடை குறித்து, வை.கோ தன் வாதங்களை முன்வைக்கலாம் என அனுமதித்து, நீதிபதி வி.கே.ஜெயின் ஆணை பிறப்பித்தார். தீர்ப்பாயத்தின் அடுத்த அமர்வு, சென்னையில், அடுத்த மாதம் 28, 29 ஆகிய இரு நாட்களிலும் நடைபெறும் என்றும் நீதிபதி அறிவித்தார்.

# நிலக்கரி முறைகேடு குறித்து பா.ஜ.க. விவாதிக்க மறுப்பது ஏன்?

## கேட்கிறார் சோனியா



நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டில் முறைகேடு என கூறும் பா.ஜ.க: விவாதிக்க மறுப்பது ஏன்? என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த 5 நாட்களாக நாடாளுமன்றத்தை பா.ஜ.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் முடக்கி வரும் நிலையில், காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாகாந்தி நேற்று கட்சி எம்.பி.க்களுடன் ஆலோசனை நடத்தினார்.

அப்போது பேசிய சோனியாகாந்தி, நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு குற்றச்சாட்டு குறித்து விவாதிக்க அரசு எந்நேரமும் தயார் என்றார்.

நாடாளுமன்றத்தை பா.ஜ.க. சிறிதும் மதிக்கவில்லை என்று கூறிய சோனியா, நாடாளுமன்றத்தை முடக்கி ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக்கி வருகிறது பா.ஜ.க. என்றும் குற்றம்சாட்டினார்.

இரண்டு அவைகளையும் தொடர்ந்து நடத்த விடாமல் வேண்டுமென்றே பா.ஜ.க. முடக்கி வருவது வெட்கக்கேடு என்று சோனியா கூறினார்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசை மிரட்டுவதே பா.ஜ.க.வுக்கு அன்றாட வேலை என்ற சோனியா, தேர்தலில் பா.ஜ.க.வுக்கு பதிலடி கொடுக்க தயாராகும்படி கட்சியினரைக் கேட்டுக் கொண்டார்.

மும்பை, அசாமில் நடந்த வன்முறைச் சம்பவங்களுக்கு கண்டனம் தெரிவித்த அவர், வன்முறைக்கு காரணமானவர் எவராக இருந்தாலும் சட்டத்தின் முன் நிறுத்தப் படுவார்கள் என்றார்.

அமைதியை குலைக்கும் நடவடிக்கையை ஒடுக்க மக்களும் துணை நிற்க வேண்டும் என்றும் சோனியா கேட்டுக் கொண்டார்.


## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................

முகவரி : ..................................

பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


## வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : ல. அம்பிகை

முகவரி: பொலிகண்டி வல்வெட்டித்துறை




பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# பாகிஸ்தான் பிரதமருக்கு மூன்றுவார காலக்கெடு



பாகிஸ்தான் ஜனாதிபதி ஆஷிவ அலி சர்தாரிக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டு விசாரணைகள் தொடர்பாக சுவிட்ஸர்லாந்து அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்புவதற்கு பாகிஸ்தான் பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரப்புக்கு பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் 3 வாரகால அவகாசம் வழங்கியுள்ளது.

பாகிஸ்தானின் தற்போதைய ஜனாதிபதி ஆஷிப் அலி சர்தாரியும் படுகொலை செய்யப்பட்ட அவரின் மனைவியான முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோவும் சுவிஸில் நிறுவனங்களிலிருந்து கிடைத்த மில்லியன் கணக்கான டொலர் பணத்தைச் செலவு செய்ததில் குற்றவாளிகளென 2003 ஆம் ஆண்டு சுவிஸில் தீர்ப்பளிக்கப்பட்டது. எனினும், 2008 ஆம் ஆண்டு பாகிஸ்தான் அரசாங்கம் விடுத்த வேண்டுகோள் காரணமாக இந்த வழக்கு மூடப்பட்டு, சுவிஸ் வங்கிக் கணக்குகளிலிருந்து 60 மில்லியன் டொலர் பெறுமதியான சொத்துகள் விடுவிக்கப்பட்டன.

ஆனால் இந்த மன்னிப்பு, அரசியலமைப்புக்கு முரணானது என பாகிஸ்தான் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக சுவிஸ் அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்ப முன்னாள் பிரதமர் யூசுப் ரஸா கிலானி மறுத்ததால் அவர் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு கடந்த ஜூன் மாதம் பதவியை இழந்தார்.

இதேபோன்ற நிலையை தற்போதைய பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரப்பும் எதிர்கொள்கிறார்.

இது தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் பாகிஸ்தான் உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, இவ்விடயம் தொடர்பாக தனது சட்டத்தரணிகளுடனும் அமைச்சர்களுடனும் கலந்துரையாடி தீர்மானம் மேற்கொள்வதற்கு 4 - 6 வாரகால அவகாசம் வேண்டுமென பிரதமர் கோரினார்.

எனினும் நீதிமன்றம் அவருக்கு செப்ரெம்பர் 18ஆம் திகதி வரை அவகாசம் வழங்கியது.

உலகச் செய்திகள்



மெக்சிகோவின் தலைநகர் சிட்டியில் எடுக்கப்பட்ட புகைப்படம இது. மெக்சிகன் பாணியிலான ஜல்லிக்கட்டு இது. மாடு பிடிக்கப் போய், பிடிக்கப் போனவரையே மாடு அடக்கிவிட்ட சோகம். ஷூ கழன்ற நிலையில் மாட்டின் அடியே இருப்பவர் ஸ்பானிஷ் வீரர் டுலியோ சல்சூரியோ.

# செவ்வாய் கிரகத்தில் மனித குரல்; கியூரியாசிட்டி விண்கலம் சாதனை



(நியூயோர்க்)

அமெரிக்காவின் 'நாசா' விண்வெளி மையம் செவ்வாய்க் கிரகத்தில் ஆய்வு மேற்கொள்கிறது. அங்கு மனிதர்கள் வாழமுடியுமா? எனக் கண்டறிய கியூரியாசிட்டி என்ற ஆய்வுகூட விண்கலத்தை அனுப்பியுள்ளது. அங்கு பத்திரமாக தரை இறங்கிய அந்த விண்கலம் தனது ஆய்வுப் பணியை மேற்கொண்டு வருகிறது.

செவ்வாய்க் கிரகத்தின் நிலப்பரப்பை படம் எடுத்து அனுப்பி வருகிறது. சமீபத்தில் அனுப்பிய ஒரு புகைப்படத்தில் அடையாளம் காண முடியாத ஒரு பொருள் பறப்பது போன்று வெளிச்சத்துடன் தெரிந்தது. எனவே அது வேற்று கிரகத்தவரின் பறக்கும் தட்டு ஆக இருக்கலாம் என கூறப்பட்டது.

செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் நடத்தும் ஆய்வை அறிய வேற்றுக் கிரகவாசிகள் பறக்கும் தட்டும் மூலம் வந்து இறங்கியிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்பட்டது. அதை மெய்ப்பிக்கும் வகையில் தற்போது கியூரியாசிட்டி அனுப்பிய மற்றொரு புகைப்படத்தில் தடயங்கள் சிக்கியுள்ளன.


அதில் மனித கைவிரல் எலும்பு ஒன்றும் கூம்பு போன்ற வடிவம் கொண்ட மற்றொரு பொருளும் உள்ளது. மற்றொரு புகைப்படத்தில் 'ஷூ' இருப்பது போன்றும் பதிவாகி உள்ளன. எனவே அங்கு அவ்வப்போது வேற்று கிரகவாசிகள் நடமாட்டம் இருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

இதுதவிர கியூரியாசிட்டி அங்குள்ள மலைகள், பாறை படிவங்கள் போன்றவற்றை கலரில் மிகவும் தெளிவாக படம் எடுத்து அனுப்பியுள்ளது. அதே நேரத்தில் பூமியில் இருந்து பதிவு செய்து செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்பிய வீடியோ பதிவு மீண்டும் அங்கிருந்து திரும்பி வந்தது.

இதை நாசா விஞ்ஞானிகள் கியூரியாசிட்டி விண்கலத்துக்கு அனுப்பினர். அங்கிருந்து அதே குரல் மீண்டும் பூமிக்கு திரும்பி வந்து ஒலித்தது. இந்தத் தகவலை கலிபோர்னியா பசதெனா ஆய்வு கூடத்தின் தலைமை டொகம்யூனிகேசன் பொறியியலாளர் சாட் எட்வேர்ட்ஸ் தெரிவிததுள்ளார்.

சந்திரனுக்கு அப்பால் உள்ள மற்றொரு கிரகத்தில் இருந்து மனித குரல் கேட்பது இதுவே முதல் முறை என அவர் தெரிவித்தார்.


# ஆண்கள் சிறுநீர் கழிப்பது எப்படி? தாய்வானில் சூடான விவாதம்



ஆண்கள் நின்று கொண்டு சிறுநீர் கழிக்காமல் உட்கார்ந்து சிறுநீர் கழிக்க வேண்டும் என தாய்வானின் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைச்சர் கூறியிருப்பது அந்நாட்டில் கழிப்பறை சுகாதாரம் தொடர்பான ஒரு பரவலான விவாதத்தைத் தோற்றுவித்துள்ளது.

வீட்டிலும் சரி பொதுக் கழிப்பறைகளிலும் சரி அமைச்சர் ஸ்டீ.ஃபன் ஷென் எப்போதுமே உட்கார்ந்துதான் சிறுநீர் கழிக்கிறார் என்று கூறியுள்ள சுற்றாடல் பாதுகாப்பு நிர்வாகம், இந்த வழக்கத்தை மக்கள் அனைவரும் பின்பற்றுவதன் மூலம் கழிப்பறைகளை மேலும் சுத்தமாக வைத்திருக்க முடியும் என்று தெரிவித்துள்ளது. உட்கார்ந்து சிறுநீர் கழியுங்கள் என்று ஆண்களுக்கு அறிவுறுத்தும் அறிவிப்பு பிரசுரங்களை பொது இடங்களில் ஒட்டவேண்டுமென உள்ளூர் நிர்வாகத்தினரை அரசு அதிகாரிகள் கேட்டுக்கொள்ளவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சுட்டு வீழ்த்தப்பட்டது சிரிய இராணுவ ஹெலி



சிரியாவில், இராணுவத்தினருக்கும், புரட்சிப் படையினருக்கும் இடையே நடந்த கடும் துப்பாக்கிச் சண்டையில், இராணுவ ஹெலிகொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டது.

சிரியாவின் கிழக்கு மற்றும் வடகிழக்கு மாவட்டங்களிலும், நகரங்களிலும் இராணுவத்தினர் நேற்று முன்தினம் தொடர் தாக்குதல் நடத்தினர். இராணுவ ஹெலிகொப்டர்கள் மூலம், அப்பாவி மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. புரட்சிப் படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை முதல் தொடர்ந்த இந்தத் தாக்குதலில், இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று, புரட்சிப் படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டு, நடுவானில் தீப்பிடித்தபடி தரையில் விழுந்து நொருங்கியது. இந்த ஹெலிகொப்டர், கபூன் நகரில் உள்ள மசூதி ஒன்றின் அருகில் விழுந்துள்ளது.

# பலஸ்தீன சிறுவர்கள் மீது மோசமான சித்திரவதை



பலஸ்தீன சிறார்களை மோசமான முறையில் நடத்தும் இஸ்ரேலிய படையினரின் நடவடிக்கைகளை இஸ்ரேலின் முன்னாள் சிப்பாய்கள் குழுவொன்று அம்பலப்படுத்தியுள்ளது.

இராணுவ நடவடிக்கைகள், கைதுகள் போன்றவற்றின் போது சிறார்கள் தாக்கப்படுவது, பயமுறுத்தப்படுவது, திட்டப்படுவது, அவமானப்படுத்தப்படுவதை இச்சிப்பாய்கள் அம்பலப்படுத்தியுள்ளனர்.

30 இற்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலான இஸ்ரேலின் முன்னாள் படைவீரர்கள் தமது அனுபவங்களை கூறும் வாக்குமூலங்கள் அடங்கிய நூலொன்று "பிறேக்கிங் த சைலன்ஸ்" (மௌனத்தைத் தகர்த்தல்) எனும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

பலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் பலஸ்தீன மக்கள் மீதான இஸ்ரேலிய படையினரின் வன்முறைகள் தொடர்பான யதார்த்தத்தை வெளிப்படுத்துவதற்காக இவ்வாக்குமூலங்கள் தொகுக்கப்பட்டுள்ளதாக பிறேக்கிங் த சைலன்ஸ் குழுவின் அங்கத்தவரான யெஹூதா சாஊல் தெரிவித்துள்ளார்.

மேற்படி சிறார்களில் பெரும்பாலானோர் கல்வீச்சு நடத்தியமை தொடர்பான சந்தேக நபரகளாவர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சப்பாத்து கழன்று விழுந்ததால் தவறி விழப்போன அவுஸ்ரேலிய பிரதமர்

அவுஸ்ரேலிய பிரதமர் ஜூலியா கிலார்ட், மேடையில் நடந்து செல்லும் போது, சப்பாத்து கழன்று விழுந்ததால், தடுமாறி கீழே விழப் பார்த்தார். சிட்னி நகரில் சிட்னி சுங்க வரித் துறையின் சைபர் பாதுகாப்பு நடவடிக்கை குறித்த நிகழ்ச்சியில், பிரதமர் ஜூலியா கிலார்ட் பங்கேற்றார்.

மேடையில் நடந்து சென்ற போது, திடீரென அவரது ஒரு சப்பாத்து மட்டும் கழன்றது. தடுக்கி கீழே விழ இருந்தவரை, அவரது பாதுகாப்பு அதிகாரி



காப்பாற்றி, சப்பாத்தை திரும்ப எடுத்துக் கொடுத்தார். இந்தச் சம்பவத்தால் மேடையில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. பிரதமர் சப்பாத்தை நழுவ விடுவது இது இரண்டாவது முறை.

இந்த ஆண்டு தொடக்கத்தில், தலைநகர் கான்பராவில் உணவகம் ஒன்றை போராட்ட கும்பல் சுற்றி வளைத்ததும், பிரதமர் கிலார்ட் உடனடியாக அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டார். அப்போது, அவரது சப்பாத்து நழுவியதும், படிக்கட்டில் இருந்து கீழே விழப் பார்த்தார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

# கிராமிய வங்கிகளை பாதிக்கும் சுற்று நிருபத்தை வாபஸ் பெறுக

## கூட்டுறவாளர்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் சர்வதேச கூட்டுறவு ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டு கூட்டுறவை மேம்படுத்த ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் பிரதேச செயலகங்களினால் கூட்டுறவு ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட் டுள்ள அறிவித்தல் கூட்டுறவு அமைப்பில் பாரிய பின்னடைவை ஏற்படுத்துவதாக கூட்டுறவாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அண்மையில் கூட்டுறவு அமைப்பான பல நோ. கூட்டுறவு சங்கத்தின் அங்கமாக இயங்கும் கிரா மிய வங்கிகளினூடாக ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம் தவிர்க்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்ட வங்கிகளில் கணக்கு ஆரம்பித்து தங்களிற்கு அறிவிக்கும்படியும் பிரதேச செயலகத்தி னால் ஓய்வூதியம் பெறுபவர்களிற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தலினால் கிராமிய வங்கி ஓய்வூதியர்கள் மட்டுமல்ல கிராமிய வங்கிகள், பல நோ.கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் கூட்டுறவு அமைப்புக்களும் ஒட்டு மொத்தமாக வடபுலத்து கூட்டுறவு இயக்கமும் பின்னடைவை எதிர்கொள்ளும் நிலை தோன்றியுள்ளது.

எனினும், பாதிப்பின் விளைவுகளை ஆழ்ந்து நோக்கினால் வயோதிப நிலையிலுள்ள வயோதி பர்கள் மற்றும் வயோதிப இல்லத்தில் வாழும் ஓய்வூதியர்கள் வதிவிடத்திலேயே ஓய்வூதியத்தைப் பெறும் வாய்ப்பை இழந்துள்ளனர். மேலும் கிராமிய வங்கிக்கு வருமானத்தில் பாதிப்பு ஏற்படும். சேமிப்பில் இடப்பட்ட பணம் ஓய்வூதியரால் மீளப்பெற விண்ணப்பிக்க கூடிய நிலையால் தொழில் பாட்டிற்கான நிதிவளத்தில் பாதிப்பு ஏற்படும் என குறிப்பிடப்படுகிறது.

இதைவிட பின்னடைவிலிருந்து முன்னேறிக் கொண்டிருக்கும் பல நே.கூ. சங்கங்கள் பாரிய பாதிப்பை எதிர்நோக்க நேரிடும்.

சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் பல நே.கூ. சங்கங்களுக்கு கடனை வழங்குகின்ற போதும் அதனை கிரமமாக செலுத்த முடியாத நிலையில் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் நிதி நடவடிக்கைகள் பாதிக்கப்படும். அத்துடன் சமாசத்திலும் நம்பிக்கை இழக்கும் நிலை ஏற்படும். இவ்வாறான பாதிப்புக்கள் ஏனைய கூட்டுறவுச் சங்கங்கங்கள், சமாசங்களான பனை தென்னை, கடற்தொழில் சார்ந்ததுறைகளும் பலவீனமாகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது

மேலும் நவீன நிர்வாக உத்திகள் தொடர்பாக சகல அரச, தனியார்துறை உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்ட குறித்த சுற்று நிருபம் ஜனநாயக அமைப்பான பல நோ.கூ.சங்கத்திற்கும் அதன் அங்கமான கிராமிய வங்கிகளிற்கும் தெரியப்படுத்தாமை நிர்வாக ரீதியில் தவறான விடயம் எனவும் கூட்டுறவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே மேற்குறிப்பிட்ட காரணங்களினால் தற்போது கிராமிய வங்கிகளுக்குப் பாதிப்பைக் கொண்டு வரும் சுற்றுநிருபத்தை மீளப்பெற்று கூட்டுறவு இயக்கம் வழிவகுக்க வேண்டும் என மாவட்டச் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் சங்கானை பிராந்திய சபை கூட்டுறவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# கடன் அறவீட்டை நிறுத்துக ஜனாதிபதி அதிரடி உத்தரவு

## வறட்சிப் பாதிப்புக்கு நிவாரணம்

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடன்களின் மீள் அறவீட்டை இடைநிறுத்துமாறு நிதியமைச்சுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகளால் அடகுவைக்கப்பட்ட பொருட்களுக்கு 2012-2013 மகாபோக அறுவடை வரை, வட்டி அறவிடுவதை இடைநிறுத்துமாறும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# இஸட் புள்ளியால் பாதிப்பு; குவியும் முறைப்பாடுகள்

கடந்த வருடம் உயர்தரப் பரீட்சையில் தோற்றிய 3 ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தாம் இஸட் புள்ளிகள் காரணமாக அசௌகரியத்தை எதிர் நோக்கியுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய் துள்ளனர். இது தொடர்பாக தொடர்ந்தும் முறைப்பாடு கிடைத்து வருவதாக ஆணைக் குழுவின் தலைவர் கலாநிதி பிரதீபா மஹானாமஹேவா தெரிவித்துள்ளார்.

இஸட் புள்ளி விவகாரத்திற்கு தீர்வு காணப்படும்வரை பல்கலைக்கழகங்களுக்கு புதிதாக மாணவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஏற்கனவே உயர் நீதிமன்றத்தில் உறுதியளித் துள்ளது. இந்நிலையில், அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து இந்தப் பிரச்சினைக்கான தீர்வினை காண்பதற்கு முயற்சிக்க வேண்டும் எனக் கலாநிதி பிரதீபா மஹானாமஹேவா கூறியுள்ளார்.

இந்தப் பிரச்சினை காலதாமதமின்றி தீர்க்கப்பட வேண்டும் என்பதே அனைத்துத் தரப்பினரதும் எதிர்பார்ப்பாக உள்ளதென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆரம்பப்...

கூடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

கடந்த 03.08.2012 அன்று முதல் யாழ்.மாவட்டத்தில் இருந்து வலய ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட இந்த 61 ஆரம்பப் பாடசாலைகளையும் அபிவிருத்தி செய்ய ஒரு மாத காலத்திட்டம் செயற்படுத்தப்பட் டிருந்தது. ஒவ்வொரு பாடசாலைக்கும் ஐந்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. முதலில் ஒரு இலட்சம் ரூபா பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் குறித்த பாடசாலையுடன் இணைந்து இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தியிருந்தது. பாடசாலையின் உட்கட்டுமாணம், சுகாதாரம் மற்றும் பாடசாலையின் இதர தேவைகளை அபிவிருத்தி செய்ய இந்தத்திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

எனவே இந்தத்திட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்பட இருப்பதன் காரணமாக அந்தத் திட்டத்தை விரைவு படுத்தும் முகமாகவே நேற்றைய கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன், செயலகக் கணக்காளர், பொருளாதார அமைச்சின் இணைப்பாளர்கள், கல்வியமைச்சின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மேலும் இந்தத்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள், கோட்டக்கல்வி அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரும் இங்கு சமுகமளித்திருந்தனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த யாழ்.செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேஸ்வரன், இந்தத் திட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி முடிவுறுத்தப்பட இருப்பதன் காரணமாக குறித்த பாடசாலைகள் தமது வேலைத்திட்டங்களை நாளை 30 ஆம் திகதிக்கு முன்னர் முடித்துக்கொள்ளுமாறு அதிபர்களைக் கேட்டுக் கொண்டதுடன் இந்தப் பாடசாலைகளில் நடைபெறவிருக்கும் வேலைத்திட்டங்கள் குறித்து தரவுகளைச் சேகரித்ததுடன், தாமதத்திற்கான காரணங்கள் குறித்தும் ஆராய்ந்தார்.

மேலும் இடைநிலைப் பாடசாலைகளின் அபிவிருத்தி குறித்து கல்வித் திணைக்களங்களின் கீழ் பிறிதொரு திட்டமொன்றைப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நடைமுறைப்படுத்தவுள்ளது எனவும் தெரியவருகின்றது. (பா)

## அமைச்சர்...

தொடர்ந்து இக்குழுவினர் கடற்படையினரின் ஆடை உற்பத்தி நிலையத்திற்குச் சென்று பார்வையிட்டதுடன், அங்கு இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் நெடுந்தீவில் மின்சாரம் விஸ்தரிக்கப்படாத விஸ்தரிக்க முடியாத இடங்களைச் சேர்ந்த ஐந்து பயனாளிகளுக்கு சிறிய வகையிலான தானியங்கி சூரிய மின் ஒளித்தொகுதியும் கையளிக்கப்பட்டது. இத்தொகுதிகளை தென் கொரிய அரசாங்கம் அன்பளிப்புச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடந்து தேநீர் விருந்துபசாரம் இடம்பெற்றது. இதன்போது நெடுந்தீவின் மின்தேவைகள் தொடர்பாக பிரதேசசபைத் தவிசாளர் மகஜர் ஒன்றைக் கையளித்து அமைச்ருடன் உரையாடினார். அதன்போது மின்சாரம் விஸ்தரிக்க முடியாத பிரதேசங்களுக்கு சூரியமின் கலத்தொகுதிகளைப் பெற்றுத் தரவும், மின்சார விநியோகத் தூண்களை சீமேந்திலான தூணாக மாற்றுவதற்கும் அமைச்சர் ஒப்புதல் அளித்தார் அத்தோடு நெடுந்தீவுப் பிரதேசத்தில் மின்சார விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டிய இடங்களை இனம் கண்டு மகஜரில் குறிப்பிடப்பட்டு இருந்தது. அவற்றை ஆராய்ந்து வழங்குவதற்கு உரிய ஒழுங்குகளை மேற்கொள்வதாகவும் குறிப்பிடப்பட்டது. வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் மின்சாரம் வழங்கும் வேலைத்திட்டம் வரும் வாரம் அளவில் தொடங்கும் எனவும் குறிப்பிடப்பட்டதோடு, இதற்காக மின்சார சபையின் வடமாகாண பிரதிப் பொதுமுகாமையாளர் டி.கே.பி.யூ குணதிலக வரும் வாரம் மீண்டும் இப்பிரதேசத்துக்கு வருகை தருவார் எனக்குறிப்பிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து அமைச்சரும், குழுவினரும் நெடுந்தீவு மின்சார விநியோகப்பகுதிகளைப் பார்வையிட்டுத் திரும்பினர்.

## சடலம் மீட்பு...

இவர் நேற்றுக்காலை மகள் வைத்தியசாலைக்குச் சென்றுவிட்டு மீளவும் வீடு திரும்பியவேளை தாயார் தூக்கில் தொங்கிய நிலையிலுள்ளதனைக் கண்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதனை அடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸாரும், ஊர்காவற்றுறை நீதவான் எஸ்.ஆர்.மகேந்திரராஜாவும் விசாரணைகளை மேற்கொண்டதுடன், சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார். தூக்கில் தொங்கிய பெண் ஒரு நோயாளி எனவும் தெரிவிக்கப்படுகிறது. (85)

## மாம்பழ...

விடுகின்றனர். இதனால் அவை பாரிய மரங்களாகி உற்பத்தி குறைந்த வனாகின்றன எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் கைவிடப்பட்ட பராமரிப்புக் குறைந்த மாமரங்களில் குருவிச்சை போன்ற ஒட்டுண்ணித் தாவரம் மற்றும் இலைத்தத்தி போன்ற பீடைகளும் தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக உற்பத்தி குறைவடையும் எனவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

தற்பொழுது யாழ். மாவட்டத்தில் உற்பத்தித்திறன் குறைந்த 5 ஆயிரம் மாமரங்கள் உரிய முறையில் கத்தரிப்புச் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கென மாகாண நிதியில் இருந்து 2.3 மில்லியன் ரூபாவும், உலக உணவு விவசாய ஸ்தாபன நிதியில் இருந்து 8.4 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் உற்பத்தி செய்யப்படும் பழங்களுக்குச் சிறந்த முறையில் சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் சாவகச்சேரி மீசாலைப்பகுதியில் பழங்களை சேகரித்து வைத்து விற்பனை செய்யும் நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிளி.உப மின்...

மின் நிலையத்தின் மூலம் சுன்னாகம், கிளிநொச்சி, மாங்குளம், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனுராதபுரத்தில் உள்ள விக்டோரிய நீர்வீழ்ச்சியில் இருந்து கிடைக்கின்ற 132000 ஏ மின்சாரத்தினை ஏனைய இடங்களுக்கு வழங்கும் உப நிலையமாக இது செயற்படவுள்ளது.

அந்த உப மின் நிலையத்தின் கட்டுமாணப்பணிகளை மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேற்று முன்தினம் திங்கட் கிழமை பார்வையிட்டார்.

# செய்தியாளருக்கு கொலை மிரட்டல் கான்ஸ்டபிள் கைது

மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பான மன்னார் மாவட்ட ஊடகவியலாளர்கள் 4 பேருக்கு கொலை மிரட்டல் விடுத்து வந்த மன்னார் பொலிஸ் கான்ஸ்டபிளான சிறிகாந்தன் என்பவர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மன்னார் நீதிமன்றம் தாக்குதல் தொடர்பாக செய்திகளை வெளியிட்டு வந்த ஊடகவியலாளர்கலான ஏ.எஸ்.எம்.பஸ்மி, எஸ்.ஆர்.லெம்போட்,ஏ .ரி.மார்க், என்.ஜெ.பெலிஸ்ரஸ் பச்சக் ஆகிய நான்கு ஊடகவியலாளர்களுக்கும் பல தரப்பிலிருந்தும் நேரடியாக கொலை மிரட்டல் விடுக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் நேரடியாக கொலை மிரட்டல் விடுத்த மன்னார் பொலிஸ் கான்ஸ்டபிலான சிறிகாந்தன் என்பவர் குறித்து ஊடகவியலாளர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை செய்திருந் தனர். இந்த நிலையில் இவர் கைது செய்யப்பட்டு நேற்று மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட போது இவரை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# போராட்டத்தில் குதிக்க மாணவர்கள் முஸ்தீபு

(கொழும்பு)

உயர்தர மாணவர்கள் நாடு தழுவிய ரீதியில் போராட்டமொன்றை நடாத்தத் தீர்மானித்துள்ளனர்.

எதிர்வரும் 30 ஆம் திகதி இலங்கை முழுவதிலும் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் இவ்வாறு போராட்டமொன்றை நடாத்தத் திட்டமிட்டுள்ளனர். இம்முறை உயர்தரப் பரீட்சைக்கான வினாத்தாள்களில் காணப்பட்ட வழுக்களைக் கண்டிக்கும் நோக்கில் இந்தப் போராட்டம் நடத்தப்பட உள்ளது.

தர்க்கவியல், இரசாயனவியல், பௌதிகவியல், பௌத்த கலாசாரம், அரசியல் விஞ்ஞானம், சிங்களமொழி ஆகிய பாடங்களில் குளறுபடிகள் காணப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# அமைதியிலும் அபிவிருத்தியிலும் இளைஞர்களுக்கே முக்கிய பங்குண்டு

**ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்**

இளைஞர்கள் இன்று எடுக்கின்ற தீர்மானங்களே நாளைய எதிர்காலமாகும். இளைய தலைமுறையைச் சேர்ந்த ஒவ்வொருவரும் இன்று எடுக்கின்ற தீர்மானமே அவர்களுடைய எதிர்காலத்தையும் இந்த நாட்டின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கும். இந்த நாட்டின் அமைதியிலும் அபிவிருத்தியிலும் முன்னேற்றத்திலும் இளைஞர்களுக்கே முக்கிய பங்குண்டு. பின்தங்கிய சமூகத்தையும் நாட்டையும் முன்னேற்றுவதற்கு இளைஞர்களால் மட்டுமே முடியும் என்று யாழ் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

அராலி மத்தியைச் சேர்ந்த சுதந்திர இளைஞர் அமைப்பின் அழைப்பின் பேரில் கலந்து கொண்ட அந்தப் பிரதேச இளைஞர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மற்றும் பின்தங்கிய நிலையிலுள்ள மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்காக அராலி மத்திய பிரதேசத்தின் இளைஞர்களை ஒருங்கிணைத்து, சுதந்திர இளைஞர் முன்னணி என்ற அமைப்பை உருவாக்கிச் செயற்பட்டு வரும் வலிகாமம் மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் சிவகுமாரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மேலும் உரையாற்றுகையில்,

இன்று சமனிலையான வாழ்க்கை இல்லாத ஒரு நிலை பலமாகக் காணப்படுகிறது. வசதி குறைந்த இளைஞர்கள் வாய்ப்புகளைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர். பலருக்கும் துறை சார்ந்த தொழிற்தகைமை இல்லை. இந்த நிலையில் அவர்களால் உரிய முன்னேற்றத்தை எட்ட முடியாமலிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இரண்டு விதமான சமூக அமைப்புக் காணப்படுகிறது. 51 வீதமானவர்கள் சமுர்த்தி நிவாரணத்தைப் பெறும் தரப்பினராக உள்ளனர். ஏனையவர்கள் வசதிபடைத்தவார்களாக உள்ளனர். இந்த நிலையில் சமச்சீரமைப்புக் குலைந்த நிலையே காணப்படும்.

ஆனால், யுத்தகாலத்தில் இருந்த நெருக்கடி நிலை இன்று இல்லை. இன்று உயிராபத்துக்களோ பிற நெருக்கடிகளோ இல்லை. அதற்குப் பதிலாக இயல்பு நிலையின் உருவாக்கம் வளர்ச்சியடைந்து வருகிறது. அமைதிச் சூழலொன்று முகிழ்த்து வருகிறது. இந்த நிலையில் நாட்டிலும் உங்களின் சூழலிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளில் நீங்கள் பங்கெடுக்க வேண்டும்.

நீங்கள் எங்களின் மீது நம்பிக்கை வைத்து இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் உழைப்பதற்கு முன்வந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். உங்களுடைய இத்தகைய ஆர்வத்துக்கும் மனப்பாங்கிற்கும் நாம் மதிப்பளித்து உங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவோம். சமூகத்தை உண்மையாக நேசிப்போர் கட்சி பேதங்களை எல்லாம் பார்க்கமாட்டார்கள். இதற்கு நல்லதோர் உதாரணமாக இருக்கிறார் சிவகுமார் அவர்கள். இவர் த.தே. கூட்டமைப்பின் சார்பிலே போட்டியிட்டு பிரதேச சபை உறுப்பினராக இருக்கின்றபோதும் மக்களின் தேவைகளையும் அவர்களுடைய பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்கு யார் பொருத்தமானவர் என்று உணர்ந்து செயற்படும் பாங்கு பாராட்ட வேணடியது என்றார். எமது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் இருக்கும பிரதேச சபை உறுப்பினர் ஜீவனுடன் இணைந்து மக்கள் நலனுக்காக இவர் செயற்படுகின்றார்.

இந்தச் சந்திப்பின்போது வலிகாமம் மேற்குப் பிரதேச சபை உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலிகாமம் பிரதேசப் பொறுப்பாளருமான பாலகிருஷ்ணன் (ஜீவன்) த.தே. கூட்டமைப்பின் சார்பிலான பிரதேச சபை உறுப்பினர் சிவகுமார், மற்றும் அராலி மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த சுதந்திர இளைஞர் அமைப்பைச் சேர்ந்த இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# முஸ்லிம்களின் மீள் குடியமர்வு வடக்கில் தொடர்கிறது

(கிளிநொச்சி)

போரின்போது பல்வேறு காரணங்களால் வன்னியில் இருந்து வெளியேறிய பல முஸ்லிம் குடும்பங்கள் தற்போதைய சூழலில் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியேறி வருகின்றன.

மன்னார் - மாந்தை பிரதேச செயலர் பிரிவிலுள்ள காக்கையன்குள கிராமத்தில் இதுவரை 25 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன. இவர்களுக்கான வாழ்வாதார அடிப்படை வசதிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பிரதேச சபை உறுப்பினர் றியானா தெரிவிக்கின்றார்.

இந்தக் கிராமத்தில் ஏனைய குடும்பங்களையும் மீள் குடியேற்றும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும் பிரதேச சபை உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்திலும் பல கிராமங்களில் முஸ்லிம் குடும்பங்கள் மீள் குடியேறி வருகின்றனர். கிளிநொச்சி நகர கிராம சேவகர் பிரிவில் மட்டும் 37 குடும்பங்கள் இதுவரை மீள்குடியேறியுள்ளதாக கிராம சேவகர் அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு மீள்குடியேறியவர்கள் தமது தொழில்துறைகளை மேம்படுத்தி வாழ்வாதார நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாகவும அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. போருக்குப் பின்னர் கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் இரண்டு பள்ளிவாசல்களும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (28)

# யாழ். மாணவர்களின் வழக்கு ஒத்திவைப்பு

யாழ். உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா முகாமைத்துவ பட்டதாரிகள் கொழும்பு உயர் நீதிமன்றில் மேற்கொண்ட அடிப்படை உரிமை மீறல் மனுமீதான விசாரணைகள் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நேற்று கொழும்பு உயர் நீதிமன்றத்தில் வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ். உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா முகாமைத்துவப் பட்டதாரிகள் சார்பில் சட்டத்தரணி சுமந்திரன் நீதிமன்றில் ஆஜரானர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த குறித்த பட்டதாரி மாணவர்கள் 208 பேர் தனித்தனியாக பட்டதாரிப் பயிலுநர் ஆட்சேர்ப்பில் தம்மை இணைத்துக் கொள்ளாததை இட்டு குறித்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

# தேர்தலுக்காக இனவாதத்தைத் தூண்டாதீர்



நன்றிக்கடன் மிக்க இலங்கை மக்கள் இனவாதிகளுக்கு நாட்டைத் தாரைவார்க்க தயாரில்லை. தேர்தலுக்காக இனவாதத்தை தூண்ட வேண்டாம். இவ்வாறு ஜனாதிபதி புல்மோட்டையில் பெருந்திரளான மக்கள் மத்தியில வலியுறுத்தினார்.

மாகாண சபைத் தேர்தலில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றியை உறுதி செய்யும் வகையில், புல்மோட்டை கனிய வள கூட்டுத்தாபன வளாகத்தில் இடம்பெற்ற கூட்டத்திலேயே, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு கூறினார்.

மக்கள் மத்தியில், இனவாதத்தை தூண்டி தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளும் கீழ்த்தரமான முயற்சிகளில் ஒரு சில அரசியல் வாதிகள் ஈடுபடுவதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இனவாதத்தை தூண்டுவதன் மூலம், மீள நாட்டை பின்நகர்த்தவே, இவர்கள் முயற்சிக்கின்றனர். பயங்கரவாதத்தை ஒழித்து, நாட்டில் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில், அதனை சீர்குலைக்க எந்தச் சக்திக்கும் இடமளிக்கப் போவதில்லையென்றும், ஜனாதிபதி வலியுறுத்தினார். புல்மோட்டை மற்றும் குச்சவெளி பிரதேசங்களில், தமிழ் தேசியக் கூடடமைப்பின் 8 முக்கிய உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், அரசுடன் இணைந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# யுத்தமே எம்மக்களை வறுமைக்குள் தள்ளியுள்ளது




கடந்த முப்பது வருடகால யுத்தமே எம்மக்களை வறுமைக் கோட்டிற்குள் தள்ளியுள்ளது என ஈ.பி.டி.பியின் கோப்பாய் பிரதேச அமைப்பாளரும் வலிகிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான இராமநாதன் ஐங்கரன் தெரிவித்துள்ளார். அச்சுவேலி தொண்டைமானாறு வீதியிலுள்ள அக்கரைக் கிராமத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்து அம்மக்களுடன் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவா[று] தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்தகால யுத்தமே எம் மக்களின் வறுமையை மேலும் அதிகரிக்கச் செய்தது. இந்நிலையை இன்று உருவாகியுள்ள இயல்புச் சூழலில் மாற்றியமைக்க வேண்டுமென்ற நோக்குடன் நாம் தொடர்ந்தும் உழைத்து வருகின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் அச்சுவேலி பிரதேச பொறுப்பாளர் தர்மராஜா, கோப்பாய் பிரதேச சபை உறுப்பினர் சந்திரபோஸ் உட்பட பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

# 115 தொல்பொருள் சான்றுகள் கண்டுபிடிப்பு

அம்பாறை நீலகிரி தூபியை அண்மித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில் 115 தொல்பொருள் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களம் தெரிவித்துள்ளது. தூபியை சூழவுள்ள மூன்று கிலோமீற்றர் சுற்றுவட்டத்தில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக திணைக்களத்தின் விசேட அகழ்வு மற்றும் அவசர ஆய்வுப் பிரிவின் தலைவர் ரி.எம். சி.பண்டார கூறியுள்ளார். கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருள் சான்றுகளில் புராதன விகாரைகளின் எச்சங்களும் அடங்குவதாக அவர் கூறினார்.

இதனைத் தவிர, அநுராதபுரம் இராசதானிக்கு சொந்தமான ஏழு கல்வெட்டுக்களும் குறித்த பகுதியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த தொல்பொருள் சான்றுகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கை பல்வேறு கட்டங்களாக முன்னெடுக்கப்படவுள்ளதாக தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# இலங்கைத் தமிழர்கள் விடுதலை

(கொழும்பு)

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள 7 இலங்கைத் தமிழ் அகதிகளை விடுதலை செய்ய தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இதனால் இவர்களின் குடும்பத்தாரும், ஆதரவு அமைப்புகளும், கட்சிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

செங்கல்பட்டு சிறப்பு முகாமில், இலங்கைத் தமிழ் அகதிகளான பராபரன், தி.சதீஷ், வி.சதீஷ், சண்முகநாதன், சேகரன், விக்னேஸ்வரன், டிஸ்கி முகமது உள்ளிட்டோர் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தங்களை விடுவிக்கக் கோரி தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர். இதனால் இவர்களின் உடல் நிலை பாதிக்கப்பட்டது. இவர்களில் செந்தூரனின் நிலை கவலைக்கிடமானது. இதையடுத்து அவரை மருத்துவமனையில் சேர்த்துள்ளனர்.

இவர்களை விடுவிக்கக் கோரி ம.தி.மு.க. தலைமைக் கழக அலுவலகத்தில் தொடர் உண்ணாவிரதப் போராட்டமும் தொடங்கப்பட்டது. இந்த நிலையில் தற்போது 7 அகதிகளை விடுதலை செய்ய தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

# நில அதிர்வு

(கொழும்பு)

பதியத்தலாவை - ரன்கிந்த குளத்திற்கு கிழக்கில் நேற்று முன்னிரவு 2.9 ரிக்டர் அளவிலான நில அதிர்வு உணரப்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப்பணியகம் அறிவித்துள்ளது. எனினும் இந்த அதிர்வினால் சேதங்கள் எதுவும் ஏற்பட்டதாக அறிவிக்கப்படவில்லை.

இதனால் அச்சமடையத் தேவையில்லை. இது சிறிய அதிர்வாகும். பாதிப்புகள் எவையும் ஏற்படவில்லை என புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் கலாநிதி என்.பி. விஜயானந்த தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஆகஸ்ட் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.